பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 01 வியாழக்கிழமை (18.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 265



09 தேவை புதிய சட்டங்கள்



14 நாதி அற்றவர்கள்



24 வென்றது பற்றிக்ஸ்





25 சிம்பாப்வே வெற்றி

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.15 இன் வினாத்தாள்-II இன்றைய உதயனின் 16, 17 ஆம் பக்கங்களில் வெளியாகி உள்ளது.

# உருப்படியான பதில் எதுவும் அரசிடம் இருந்து இல்லை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலக்கெடு இன்றுடன் முடிவு

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 18**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட மூன்று அம்சக் கோரிக்கைக்கு அரச தரப்பில் இருந்து உருப்படியான - காத்திரமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.**

தொடர்ந்தும் இழுத்தடிக்காமல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து இருவார காலத்துக்குள் அரசு பதிலளிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு கடந்த 4 ஆம் திகதி அரசுக்கு நிபந்தனை விதித்தது. அரசு இந்த நிபந்தனைகளுக்கு உரிய பதிலை வழங்காவிட்டால் பேச்சில் இருந்து வெளியேறிவிடுவோம் எனவும் கூட்டமைப்பு எச்சரித்திருந்தது.இதனையடுத்து கூட்டமைப்பின் நிபந்தனைகளைத் தாம் ஏற்கவில்லை எனத் தெரிவித்த அரசு, பேச்சில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது.

இந்தநிலையில் கூட்டமைப்பு அரசுக்கு வழங்கியுள்ள காலக்கெடு இன்றுடன் முடிவடைகின்றது.

தாம் முன்வைத்த நிபந்தனைகள் தொடர்பில் அரசு இதுவரை எந்தவிதமான பதிலையும் வழங்க வில்லை என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இறுதி நாளான இன்றும் இது தொடர்பில் பதில்

பக் 27

# சம்பந்தன் நாடு திரும்பியவுடன் அடுத்த கட்ட நகர்வு குறித்து முடிவு



## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய காலக்கெடு இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கை தொடர் பாக இந்தியா சென்றுள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கை வந்ததும் கூடி முடிவு எடுக்கப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனுக்கு' தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான

பக் 28

# இந்தியப் படையினரை விசாரிக்க வேண்டும்

கொழும்பு, ஓக.18

இலங்கையில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்ட இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா வெளியிட்ட கருத்து தொடர்பிலே விமல் வீரவன்ச விமர்சனம் செய்துள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கான முன்னெடுப்புக்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், அதனை இல்லாமல் செய்வதற்கு புலி ஆதரவாளர்கள் முயற்சித்து வருகின்ற

பக் 27

# மன்னார் விபத்தில் இருவர் மரணம்

மன்னார், ஓக. 18

மன்னார் முருங்கன் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகியதுடன் மேலும் 7 பேர் காயமடைந்து முருங்கன், மன்னார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை மன்னார் முருங்கன் வீதியில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் அடம்பன் வைத்தியசாலையில் கட்டுமாணப் பணியில் ஈடுபட்டு வந்த கிண்ணியாப் பிரதேசத்தைச் சேர்ந்த 14 பேர் டிப்பர் வாகனத்தில் சென்று

பக் 28

# வன்னியில் கிளைக்குழுத் தேர்தலை இடை நிறுத்த அரச தரப்பு முயற்சி

## தனது ஆதரவாளர்களைப் புகுத்துவதற்காக

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக் குழுத் தேர்தல்களை உடனடியாக நிறுத்துவதற்கு அரச தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிளைக்குழுத் தேர்தலில் அரச ஆதரவாளர்களை போட்டியிட வைத்து கூட்டுறவுச் சங்கங்களில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே அரசு இந்த

பக் 27

# தமிழ்மொழி வினாத்தாள் முன்னரே வெளியானதா?

## கல்வியியலாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக.18

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவின் தமிழ் பாடத்துக்கான வினாத்தாள் ஏற்கனவே பல இடங்களில் வெளியாகியுள்ளதாகக் குடாநாட்டுப் பாடசாலைகளின் தமிழ்ப்பாட ஆசிரியர்கள் சிலர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகுதி I வினாத்த

பக் 27

### ஐ.தே.க. பூசல் வலுக்கிறது

# சிறிகொத்தாவில் செயற்குழுக் கூட்டம் விகாரமகாதேவி பூங்காவில் போராட்டம்

கொழும்பு, ஓக. 18

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியைத் துறக்கும்வரை போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்று ஐ.தே.கட்சி சஜித் பிரேமதாச பிரிவு அறிவித்து விகாரமகாதேவி பூங்காவில் போராட்டம் நடத்தும் நிலையில் ஐ.தே.கட்சி செயற்குழுக் கூட்டம் சிறிகொத்தாவில் நடைபெற்றது.

சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற செயற்குழு கூட்டம் கட்சி யாப்புக்கு முரணானது எனவும், ரணில் விக்ரமசிங்க தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவேண்டும் எனக் கோரியும் சஜித் பிரேமதாச தரப்பினர் நேற்று கட்சித் தலைமையகமான சிறிகொத்தா முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில், கங்கொடவில நீதிமன்றம் இந்தப்போராட்டத்துக்கு தடைவிதித்தது. இதையடுத்து, சஜித் பிரேமதாச தரப்பினர் போராட்டம் நடத்தும் இடத்தை விகாரமகாதேவி பூங்காவுக்கு சிறிகோத்தாவில் மாற்றினர்.

பக் 28

# மட்டக்களப்பில் நேற்றும் கிறீஸ் மனிதன் அட்டகாசம்

## பொதுமக்கள் – பொலிஸார் மோதல்

கொழும்பு, ஓக. 18

மட்டக்களப்பு ஊரணியில் நேற்றுப் பகல் இளம் பெண்ணின் மார்பைக் கத்தியால் காயப்படுத்திவிட்டு ஓடிச் சென்று பொலிஸ் காவலரணுள் புகுந்த மர்ம மனிதனைத் தேடிச் சென்ற பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொதுமக்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மேற்கொண்டனர்.

ஊரணி பொலிஸ் காவலரணுக்கு அருகிலுள்ள வீட்டின் வாசலில் நேற்றுப்பகல் ஒரு மணிக்கு ஆடைகளை உலர வைத்துக்கொண்டிருந்த 19 வயதுடைய இளம் பெண்ணின் மார்புப் பகுதியைக் கத்தியால் தாக்கிய மர்ம மனிதன் பொலிஸ் காவலரணுள் புகுந்து ஒளிந்துகொண்டதை அடுத்து பொதுமக்கள் காவலரணுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் வலுப்பெற்றதை அடுத்து, பொலிஸ் காவலரணுக்குள் நுழைந்த மக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் இடம்பெற்றது. இதன்போது, பொதுமக்கள் மீது

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 17, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7,014.11↓
மிலங்கா(MPI) 6,436.89↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4,558.58Mn
பங்குகளின் அளவு(No.) 203.48Mn
வியாபாரம்(No.) 38,088
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கொழும்பு லான் 64.10
எசியன் அலயன்ஸ் 1251.00
லங்கா வொஸ்பிற்றல் 102.00
எச் வி எ பூட் 20.00
றிவரீனா ஹொட்டல் 123.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
செப்லொயிக் பைனான்ஸ்(r) 1.00
மீறம பீச் 265.00
சிங்கலங்கா 441.00
றேடியம் ஜேம்ஸ் 95.00
ஈச்சேன் மேச்சன் 2510.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நீதிமன்ற உத்தரவையடுத்து மூடப்பட்டது 'கடவுளின் குழந்தைகள்' சிறுவர் இல்லம்

யாழ்ப்பாணம், ஓக.18

வடமராட்சி, புலோலி தெற்கு உபய கதிர்காமத்தில் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வந்த கடவுளின் குழந்தைகள் சிறுவர் இல்லம் நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டது.

வடக்கு மாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர் ரி.வில்வரூபன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுவர் இல்லத்தில் அளவுக்கதிகமாக சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அடிப்படை வசதிகள் இல்லாமலும் இது இயங்கி வந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இது இனங்காணப்பட்டு இதற்கெதிராகப் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இறுதி விசாரணை கடந்த மாதம் 28 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த சிறுவர் இல்லத்தை மூடுமாறு உத்தரவிட்டார்.

இதனால் அங்கிருக்கும் சிறுவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் இந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தது.

இந்தப் பணி நிறைவடைந்ததை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை அந்தச் சிறுவர் இல்லம் முற்றாக மூடப்பட்டது.

இந்தச் சிறுவர் இல்லத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 159 சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு உரிய அடிப்படை வசதி இல்லாத காரணத்தால் 92 சிறுவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் அவர்களின் பெற்றோருடன் இணைக்கப்பட்டனர்.

பெற்றோரின் விருப்புக்கு அமையவே சிறுவர்கள் பெற்றோருடன் இணைக்கப்பட்டனர். ஐந்து சிறுவர்கள் பதிவு செய்யப்பட்ட வசதியான சிறுவர் இல்லங்களுக்கு மாற்றப்பட்டனர்.

பெற்றோருடன் இணைக்கப்பட்ட சிறுவர்களுக்கு இத்திணைக்களத்தால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. அந்தந்த மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஊடாக அந்தச் சிறுவர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிறுவர்கள் வன்னியில் சிரமங்களை எதிர்நோக்குவார்களாயின் அவர்களது நிலைமைகள் பற்றித் திணைக்கள நடைமுறைக்கு அமைவாகப் பரிசீலிக்கப்படும் என்று கூறப்பட்டது.

இதேவேளை 'கடவுளின் குழந்தைகள்' சிறுவர் இல்லத்தைத் தவிர வடமாகாணத்திலுள்ள 72 சிறுவர் இல்லங்களில் 28 சிறுவர் இல்லங்கள் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவது இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களையும் அதன் கட்டமைப்புகள், அடிப்படை வசதிகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென சிறப்பு ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அந்தக் குழுவினரே தகுதியின்றி இயங்கும் 28 சிறுவர் இல்லங்களையும் இனங்கண்டுள்ளனர்.

இவற்றை மூடுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த சில வாரங்களில் இது தொடர்பாக ஆராயப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# குவைத் சிறைகளில் 114 இலங்கையர்கள்

குவைத், ஓக.18

107 பெண்கள் உட்பட 114 இலங்கையர்கள் குவைத்திலுள்ள சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என குவைத்திலுள்ள இலங்கைத் தூதுவர் தெரிவிக்கின்றார்.

தண்டனை அனுபவிப்பவர்களில் பெருந்தொகையானோர் போதைப்பொருள் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தம்மை அறியாமலேயே போதைப்பொருள்களைக் கடத்திவந்துள்ளனர். குவைத்திலுள்ள தமது நண்பர்கள், உறவினர்களுக்குக் கையளிக்கும்படி சில இலங்கையர்கள் அங்கு செல்பவர்களிடம் கொடுக்கும் உணவுப் பொருள்கள், பழங்கள், விளையாட்டு உபகரணப் பொருள்கள் அடங்கிய பொதிகளில் போதைப் பொருள்களையும் வைப்பதால் இவர்கள் விமான நிலையங்களில் கைது செய்யப்பட்டு இவ்வாறு தண்டனை அனுபவிக்கின்றனர். (ஒ-சி)

# மீண்டும் வழமைபோல் நடைபெறும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பணிகள்

## செயற்கை அவயவத் தயாரிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன செயற்கை அவயவப் பகுதியில் மீள்புனரமைப்பு வேலைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளதால், செயற்கை அவயவத் தயாரிப்பு, குறைபாடு நிவர்த்தி உறுப்பு தயாரிப்புக்கள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இயன்மருத்துவசேவை, நடமாடும் உபகரணச் சேவை போன்ற ஏனைய சேவைகள் வழமைபோன்று நடைபெறுகின்றன. ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டுள்ள மாற்றுவலுவுள்ளவர்களும் பதிவுகளை மேற்கொள்ள இருக்கும் மாற்றுவலுவுள்ளவர்களும் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு நிறுவன முகாமைத்துவக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஒ)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் நெடுந்தீவுக்கு

தென்மராட்சி, ஓக. 18

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையின் பயன்பாட்டுக்கென சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் எடுத்துச் செல்லப்பட்டது குறித்து தென்மராட்சி பிரதேச மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டு அம்புலன்ஸ்கள் இருந்ததால் கொடிகாமம், பளை, மருதங்கேணி, பூநகரி, வேரவில், முழங்காவில், முல்லைத்தீவு போன்ற வைத்தியசாலைகளிலிருந்து அழைத்து வரப்படும் அவசர நோயாளர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வைத்தியசாலை பயன்பாட்டிலிருந்த அம்புலன்ஸ் அண்மையில் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டது குறித்துப் பிரதேச மக்களும் நோயாளர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் படையினரால் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலம் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் 4 கிராமப் பிரிவுகளுக்கு நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கிருஷ்ணபுரம், மலையாளபுரம், பாரதிபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை பாரதிபுரம், பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையில் நடைபெறவுள்ள இந்தச் சேவையில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையும் பொது மக்கள் பங்கேற்க முடியும் என்று கரைச்சிப் பிரதேச செயலர் இ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலரும், ஏனைய அதிகாரிகளும், குறித்த நான்கு கிராம அலுவலர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

இந்தச் சேவையில் பொது மக்கள் காணி, கல்வி, சிறுவர், நீர், சுகாதார, நட்ட ஈடு தொடர்பான பிரச்சினைகளை முன்வைக்க முடியும்.

60 வயதை அடைந்தோர் முதியோர் அடையாள அட்டையை ஒரே நாளில் பெற முடியும். தனிநபர் ஆவணங்களான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களும் ஏற்கப்பட உள்ளன. தொழில்சார் பயிற்சிகள் தொடர்பான வழிகாட்டல்களும் அங்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-121)

# நிகழ்வுகள்

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

யாழ். மாநகரசபையின் கலாசார பிரிவினால் வெளியிடப்படும் 19 ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறும்.

இதேவேளை, யாழ். மாநகரசபையின் கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் மலர் வெளியீட்டைத் தொடர்ந்து இடம்பெறும். (ஒ-313)

## புனரமைப்புக் கூட்டங்கள்

கரம்பகம் பிரதேச கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் கிராம முன்னேற்றச் சங்கம் என்பனவற்றின் புனரமைப்புக் கூட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை 9.30, 10 மணிக்கு கரம்பகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறும் என்று பிரதேச கிராம அலுவலர் என்.ராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-122)

## நடமாடும் சேவை

நவாலி, ஓக.18

இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக் கிளை, சாவற்கட்டில் நடமாடும் சேவையை நடத்தவுள்ளது. இன்று மாலை 4 மணிக்கு சாவற்கட்டுச் சந்தைக்கு அருகில் இது இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வை இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.டி.சுமணசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இந்த நிகழ்வுக்கு இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா, வடமாகாண மாவட்ட முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி, இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (ம-100)

## திருவிழா ஏற்பாட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.18

வரலாற்று பிரசித்திப் பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களிலும் நுளம்பு பெருக்கம் காணப்படுவதால்

# யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் பரவும் ஆபத்து கட்டுப்படுத்த மக்களின் விழிப்புணர்வு அவசியம்

## சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 18

இந்த மாதம் நடுப்பகுதிவரை 14 பேர் டெங்கு நோயின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

உடுவிலில் 3 பேர், யாழ்ப்பாணத்தில் 7 பேர், தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் தலா ஒருவர் என இந்த 14 பேரும் டெங்கு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது பருவப் பெயர்வு மழை ஆரம்பிக்க இருக்கும் நிலையிலும், நல்லூர் உற்சவத்துக்காக தென்பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் வந்து செல்வதாலும் டெங்கு நோய் பரவுவதற்கான ஏதுக்கள் காணப்படுகின்றன.

அண்மைக்காலமாக நோய்த் தாக்கம் குறைவடைந்த நிலையில் மக்களிடையே விழிப்புணர்வும் குறைந்துள்ளது.

இதனால் வீடுகள், அலுவலகங்கள், கோயில்கள், பொது இடங்களில் நுளம்புபெருகக் கூடிய நிலை இருப்பது இனங் காணப்பட்டுள்ளது.

**சண்டிலிப்பாயில் பல இடங்களில் நுளம்பு பெருக வாய்ப்பு**

அண்மையில் சண்டிலிப்பாயில் 98 வீடுகள் பொதுச் சுகாதாரப் பகுதியினரால் பரிசோதிக்கப்பட்டபோது ஒரு வீட்டில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதாகவும் 51 வீடுகளில் நுளம்பு பெருகக் கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணுவில் பிரதேசத்திலும் 127 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் உருவாகக்கூடிய இடங்களும் மூன்று வீடுகளில் நுளம்புக் குடம்பிகளும் அவதானிக்கப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் டெங்கு நோய்ப் பரம்பல் எமது பிரதேசத்தில் அதிகரித்து இறப்புக்கள் ஏற்படாமல் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும் - என்றும்

நுளம்புகள் பரவக்கூடிய வீடுகள், பொது இடங்கள், அலுவலகங்கள், கோயில்கள் போன்ற இடத்தில் காணப்படும் பொருள்களை அகற்றி சுத்தம் பேணுவது பொறுப்புடைய அனைவரதும் கடமையாகும் என்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்துகின்றனர்.

நுளம்பு பெருகக் கூடிய நீர்த்தொட்டிகள், நீர்த்தாங்கிகள், உடைந்த மலக்குழிகள், வெற்றுப் பாத்திரங்கள், சிரட்டை, கோப்பைகள், பேணிகள், போத்தல்கள், கோம்பைகள், ரயர், பொலித்தீன் பைகள், மூடிகள் போன்றவற்றை இல்லாமல் செய்தோ அல்லது சீர் செய்தோ பரவுதலைத் தடுக்கமுடியும் என்று யாழ். பிராந்திய தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு அனைத்து மக்களையும் கேட்டுள்ளது. (ஒ-10)

வரப்போகும் ஆபத்தை உணராமல்

# நல்லூரில் பச்சை குத்துவதற்கு முண்டியடிக்கும் இளைஞர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் கந்தனின் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நாளாந்தம் பக்தர்களும் திரண்டு வந்த வண்ணம் உள்ளனர். இளைஞர் கூட்டத்துக்கும் குறைவில்லை.

இவ்வாறு வரும் இளைஞர்கள் நல்லூர் ஆலயச் சூழலில் பச்சை குத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தென்னிலங்கையில் வந்த சிலர் பச்சை குத்தும் 'வியாபார' நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். அவர்களிடம் எங்கள் இளைஞர் பட்டாளம் பச்சை குத்துவதற்கு வரிசையில் ''நான் முந்தி நீ முந்தி'' என்று காத்துக்கொண்டிருக்கிறது.

பச்சை குத்துவதற்குப் பாவிக்கும் ஊசிகள் ஆபத்தானவை. ஒரே ஊசி பலருக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. சுகாதாரமற்ற ஊசிகளால் எத்தனையோ பயங்கரமான தொற்று நோய்கள் பரவும் அபாயம் உண்டு. எயிட்ஸுக்கு காரணியான எச்ஐவி தொற்றும் பேராபத்தும் ஏற்பட வாய்ப்புண்டு.

இந்த ஆபத்தை - விபரீதங்களை அறியாமல், உணராமல் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பச்சை குத்துவதற்கு வரிசையில் நிற்கின்றனர்.

நல்லூரில் பச்சை குத்தும் விடயம் தொடர்பாக நோயாளர் மக்கள் நலன்புரி சங்கத்தின் தலைவர் விசுவலிங்கம் கந்தவேளும் பொதுமக்களை விழிப்புடன் நடந்து கொள்ளுமாறு எச்சரித்துள்ளார். (ஒ)

# எல்.பி. பினான்ஸ் கிளைகள் திறப்பு விழா

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் கிளைகள் இன்று மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்படவுள்ளன. மானிப்பாய் கிளையின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கும், நெல்லியடி கிளையின் திறப்பு விழா மு.ப. 11 மணிக்கும், சாவகச்சேரிக் கிளையின் திறப்பு விழா இன்று பிற்பகல் 12.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ம-100)



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலகக் கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாஸ தரப்பினர் நேற்று மாலை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ரணில் மக்கள் விருப்பத்தை அறிந்து பதவியிலிருந்து விலகவேண்டும்

## ஐக்கிய பிக்குகள் முன்னணி கூறுகிறது

கொழும்பு, ஓக.18

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினை மேலும் தொடர்ந்தால் கட்சி முற்றாக அழிந்துபோய்விடும். கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மக்களின் விருப்பத்தை அறிந்துகொண்டு தலைமைத்துவப் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னணியின்தலைவர் வண.மீட்டியாகொடகுணரட்ணதேரர்இதுதொடர்பாகக் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கு எதிராக எழுந்திருக்கும் போராட்டம் காரணமாக கட்சியின் எதிர்காலம் பாதிப்படைந்துள்ளது. மிக விரைவில் கட்சி அழிந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கட்சிக்கான சிங்கள மக்களின் வாக்குகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது. அதேபோல், சிறுபான்மை இன மக்களின் வாக்குகளும் குறைந்துகொண்டு போகின்றன. கட்சியில் உள்ள சிலர் பௌத்த பிக்குகளின் முக்கியத்துவத்தை உணரத் தவறிவிட்டனர்.

இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்று கட்சியும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். கட்சியைக் காப்பாற்றுவது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க மக்களின் விருப்பம் என்னவென்று அறியவேண்டும். ரணில் மோசமான ஒருவர் என்று நாம் கூறவில்லை. ஆனால் கட்சியைப் பற்றிச் சிந்தித்து தலைமைத்துவத்தில் இருந்து விலகவேண்டும்.

இப்போது தேவை உண்மையான எதிர்க்கட்சியே தவிர அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் எதிர்க்கட்சியல்ல. கட்சி இந்த நிலைக்குச் செல்வதற்கு லிபரல்வாத கொள்கை தான் காரணம்.

ஆகவே, கட்சியின் தலைமைத்துவம் உள்ளிட்ட அனைத்துப் பதவிகளிலும் மாற்றம் செய்யப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. இதை உணர்ந்து கரு ஜயசூரிய கட்சியின் தலைவராக நியமிக்கப்படவேண்டும். ரணில் விக்கிரமசிங்க சிரேஷ்ட தலைவராக நியமிக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-சி)

# குருதிச் சோகை குறித்த கருத்தரங்கு நாளை யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் பிரிவு ''பி'' இன் ஆதரவுடன் ''குருதிச்சோகை - ஒரு பெரும் பொதுச் சுகாதாரப் பிரச்சினை'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை குருதியியல் நிபுணர் கலாநிதி தனேஸ்வரி சூரியகுமார் வழங்குவார்.

நிகழ்வில் ஆர்வலர்களைப் பங்குபற்றிப் பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-10)

# கச்சாய் வீதி கிணற்றில் காணப்படும் ஒரு தொகை வெற்று 'பியர் ரின்'கள்!

## இளைஞர் வட்டத்தின் 'வீர சாகசம்'!!

தென்மராட்சி, ஓக. 18

சாவகச்சேரி, கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய சந்தியில் உள்ள கிணற்றில் தண்ணீருக்குப் பதிலாக பியர் வெற்று 'ரின்கள்' தான் நிறைந்து காணப்படுகின்றன. இவை எப்படி அங்கே?

இது குறித்து தெரியவருவதாவது:-

மாலை மங்கி வரும் வேளையில் தேவாலயப் பகுதி சந்தியில் இளம் வட்டத்தினர் கூட ஆரம்பித்து விடுவர். நேரம் செல்லச் செல்ல அவர்கள் கூத்து, கும்மாளம் ஆரம்பித்துவிடும்.

வீதியில் செல்வோர் மீதும் இவர்கள் தங்களின் 'வீரத்தை'க் காட்ட முற்படுபவர். அங்கு நின்று மதுவை வாயில் ஊற்றிக்கொண்டு போவோர் வருவோரை பரிகசிப்பதுடன் தகாத வார்த்தைகளையும் தாராளமாக உபயோகிக்கத் தொடங்கிவிடுவர்.

கௌரவம், மரியாதைக்காக அவர்களிடம் எவரும் வாய் திறப்பதில்லை. இதனிடையே, இந்தச் 'சூரர்கள்' தான் கிணற்றினுள் தாங்கள் பாவித்த பியர் வெற்று 'ரின்களை' நாளாந்தம் வீசக்கூடும் என்று மக்கள் தெரிவித்தனர். (ஒ-207)

# கிழக்கில் 'கிறீஸ்' பூதங்களுக்கும் பாதுகாப்புத் தரப்புக்கும் தொடர்பு

## அடித்துக் கூறுகின்றனர் கிழக்கு எம்.பிக்கள்

மட்டக்களப்பு, ஓக.18

'கிறீஸ்' மனிதன் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையை அரசு நினைத்தால் ஒரு நிமிடத்திலும் நிறுத்தலாம் இல்லையேல் அதை ஒரு வருடத்துக்கும் இழுத்தடிக்கலாம். இந்தப் பிரச்சினைக்கு அரசு தான் பொறுப்புக் கூறவேண்டும்.

இவ்வாறு அடித்துக் கூறுகின்றனர் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், சி.யோகேஸ்வரன், பொன்.செல்வராசா ஆகியோர்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற மர்ம மனிதனினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.யோகேஸ்வரன், பொன்.செல்வராசா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

மலையகத்தில் ஏற்பட்ட இந்தப் பிரச்சினை தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களுக்கும் பரவியுள்ளது. இராணுவத்தினரும், பொலிஸாரும் தான் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதை சாட்சியங்களுடன் நிரூபிக்கத் தயாராக இருப்பதாக மக்கள் சொல்கின்றார்கள்.

இருப்பினும் இதனை அரசு மறுக்கின்றது. வேலியே பயிரை மேயும் கதையாக இருக்கின்றது. அரசு நினைத்தால் இந்த மர்ம மனிதன் தொடர்பான பிரச்சினை ஒரு நிமிடத்தில் நிறுத்த முடியும். இல்லையேல் மக்களை தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்க விரும்பின் இதனை ஒரு வருடத்துக்கும் இழுத்தடிக்க முடியும்.

இந்த மர்ம மனிதனின் பிரச்சினை முதலில் இரவில்தான் இடம்பெற்றது. இப்போது பகலிலும் இடம்பெறுகின்றது. இதனால் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் தெரிவித்தமை வருமாறு:-

மர்ம மனிதன் பிரச்சினையில் அரசுக்குப் பங்கிருக்கின்றது. இதனை அரசு மறுக்க முடியாது. இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கை. இதற்கான முடிவை ஜனாதிபதியும் அரசும் தான் விரைந்து எடுக்க வேண்டும் - என்றார். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் காணிப்பிரச்சினை தீர்க்க புதிய சுற்றுநிருபம் வெளியீடு

## மேலதிக காணிப் பதிவாளர் நாயகம்

யாழ்ப்பாணம், ஒக. 18

வடக்கு, கிழக்கிலுள்ள அரச காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் காணி ஆணையாளர் நாயகத்தால் சுற்று நிரூபம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் காணி ஆவணங்களை இழந்த அரச காணிக் குடியிருப்பாளர்கள் காணி உரித்து சான்றிதழ் பெறக் கூடியதாக இருக்கும். இவ்வாறு தெரிவித்தார் மேலதிக காணிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால யுத்த இடப்பெயர்வு காரணமாகக் காணி ஆவணங்களை இழந்த அரச காணிகளின் குடியிருப்பாளர்களே இந்த சுற்று நிருபம் மூலம் நன்மையடையக் கூடியதாக இருக்கிறது.

அரச காணிகளில் குடியிருப்பாளர்கள் காணி ஆவணங்களைத் தொலைத்திருக்கலாம், காணி விடயங்களுடன் தொடர்புடைய அரச அலுவலகங்களில் ஆவணங்கள் இடப்பெயர்வின்போது தொலைந்திருக்கலாம்.

காணி தொடர்பாக உள்ள ஏதாவது ஓர் ஆவணத்தை வைத்து ஏனைய ஆவணங்களை உருவாக்கும் நடைமுறையே இதுவாகும்.

குடியிருப்பாளர், காணிப் பதிவகம், பிரதேச செயலகம் ஆகிய இந்த மூன்று தரப்பினர்களிடையே உள்ள ஏதாவது ஓர் ஆவணத்தை வைத்து ஏனைய ஆவணங்களை உருவாக்குவதே ஆகும்.

இந்த மூன்று தரப்பினர்களிடையேயும் எந்தவித ஆவணமும் இல்லை எனில் அதற்கும் சுற்றுநிருபத்தில் மாற்று ஏற்பாடு இருக்கிறது. அதாவது பிரதேச செயலக மட்டத்தில் குழு ஒன்று அமைத்து அந்தக் குழுவின் விசாரணைகள் மூலம் திருப்தி ஏற்படின் புதிய அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பிரதேச செயலகக்குழு மட்டத்திலும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை எனின் மாகாண மட்டத்தில் இயங்கும் மேற்பார்வைச் சபையில் முறையீடு செய்ய முடியும். அதன் மூலம் காணி உரித்துப் பதிவு செய்து காணி உரித்து சான்றிதழ் வழங்க முடியும். இந்த விசேட சுற்றுநிருபம் மிக விரைவில் மக்களுக்காக வெளியிட்டு வைக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ம-14)

# இளைஞர் சேவை மன்றத்தின் டிப்ளோமா பயிற்சிநெறி

நாவற்குழி, ஒக.18

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கண்டி பயிற்சி நிலையத்தில் ஒரு வருட டிப்ளோமா பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் நுண்கலை, நடனம், சங்கீதம் ஆகியவற்றுக்கு விண்ணப்பித்த இருபாலாரும் பங்குபற்ற முடியும். இதுவரை விண்ணப்பிக்காத 17 வயது முதல் 29 வயது வரையிலுள்ள சாதாரண தரம் சித்தியடைந்தோர் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை வரை இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்களைக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத்தில் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும். (ம-121)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக.18

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆன்மிகச் சொற்பொழிவுகளில் இன்று வியாழக்கிழமை 'சைவமும் ஆலய வழிபாடும்' எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ம-311)

* * *

யாழ்ப்பாணம், ஒக.18

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6 மணிக்கு நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை 15 ஆம் திருவிழாவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் நாட்டியாஞ்சலியும் மிருதங்க இசையும் இடம்பெறவுள்ளது. (ம-313)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.18

நல்லூர் மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு ''கம்பராமாயணம்'' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையை பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வருகிறார். இன்று வியாழக்கிழமை 15 ஆம் திருவிழாவில் ''கைகேகி வரம்'' எனும் தலைப்பில் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (ம-313)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.18

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு தினமும் பிற்பகல் 3 மணி முதல் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை 15 ஆம் திருவிழாவில் ''அழகன் முருகன்'' எனும் தலைப்பில் கவிமாமணி அன்னதாசன் சிறப்புச் சொற்பொழிவையும் வேலணை ஐயனார் அறநெறிப் பாடாலை, இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப்பாடசாலை, கலட்டி வரசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-313)

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு தெய்வீக இசையரங்கு இடம்பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை 15 ஆம் திருவிழாவில் செல்வி உதயதிவ்யமணி மகாலிங்கம், எ.ஜெயராமன், எ.ரவிசங்கர், கே.நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தும் இசையரங்கு இடம்பெறும். (ம-313)

# சின்மயமிஷனின் ஆன்மிக வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக.18

யாழ்ப்பாணம் சின்மய மிஷனின் ஆன்மிக வகுப்புகள் திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் குறிக்கப்பட்ட இடங்களில் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்யவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இதில் பிரதி திங்கட்கிழமைகளில் கூட்டுறவுச் சங்கக் கடைவீதி அளவெட்டி சின்மயா மிஷன் கிளையில் இளைஞர்களுக்கு பிற்பகல் 4 மணிக்கும் முதியவர்களுக்கு மாலை 5.15 மணிக்கும் வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தில் பெரியவர்களுக்கு முற்பகல் 10.30 மணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் இளைஞர்களுக்கு பிற்பகல் 4 மணிக்கும் பெரியவர்களுக்கு மாலை 5.15 மணிக்கும் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளியில் மாலை 6.30 மணிக்கும் வகுப்புகள் இடம்பெறுகின்றன.

பிரதி புதன்கிழமைகளில் 230, சட்டநாதர் வீதி, நல்லூரிலுள்ள சின்மயா மிஷனின் கிளையில் மாலை 5.15 மணிக்கு இளைஞர்களுக்கும் மாலை 6.30 மணிக்கு பெரியவர்களுக்கும் வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன. (ம-313)




உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள் (BOOTH, FAN), போட்டோக் கொப்பி, லெமினேற்றிங், FAX மெசின்கள், BROADBAND 1.MB DIALOG, மற்றும் HAIER D. பிறிட்ஜ் 2½ அடி. என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776352566, 021 2221104.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக! உமது அருட்கொடைகள் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும், உற்றதுணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறுகிறேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணங் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஓ! பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.

சண்டிலிப்பாய். விசுவாசி.

## German Deutsch classes

ஜேர்மன் செல்வோருக்கான டொச் மொழி வகுப்பு நடைபெறுகின்றது. ஜேர்மனியில் படித்து வந்து பிரசித்தி பெற்ற ஆசிரியர் கற்பிக்கின்றார். எம்பஸிக்கான certificate course தமிழ் விளக்கத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரே இடம்.
0778245031.
464, ஆஸ்பத்திரி வீதி, Jaffna College.
(பெரிய ஆஸ்பத்திரிக்கு எதிராக)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கலப்படம் அற்ற உயர் இன டெல்மேசன், டாசோன், பொக்சர் ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் 40 நாள் பூச்சி நீக்கப்பட்டது விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: மணிக்குரல் V.S. சற்குணன்
இல.25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 7535, 0777158476

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 29.07.1929
மறைவு: 19.07.2011

அமரர்
செல்லையா சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

கடந்த (19.07.2011) அன்று இறைபதமடைந்த எங்கள் அருமைத் தந்தையின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி,தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்வதோடு இன்று (18.08.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேடிவந்துள்ள நல்ல சந்தர்ப்பம்; ஒன்றுபட்டுச் செயற்படுங்கள்

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில், அவர்களுக்குரிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பணியில் இந்திய அரசாங்கம் வெளிப்படையாக அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளது. அதன் முதற்கட்டமாக, தமிழ்க் கட்சிகளிடம் ஒருங்கிணைந்த - ஒருமித்த - கருத்தை உருவாக்குவதில் ஈடுபட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளை -அவற்றின் பிரதிநிதிகளை- அழைத்துப் பேசுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந்திய ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன் நாச்சியப்பன், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை அடுத்த வாரத்தில் சென்னைக்கு வருமாறு கேட்டுள்ளார் என்பது பிந்திய தகவல்.

இலங்கைத் தமிழ் மக்களுக்குரிய நியாயமான அரசியல் தீர்வை வழங்குவதை மஹிந்த அரசு இழுத்தடித்து வருகிறது; காலத்தைக் கடத்தி வருகிறது. தமிழர்களின் இறைமைக்குப் பங்கமில்லாமல் அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதற்கு விருப்பமின்றி, அதில் நாட்டமின்றி, தமிழர் தரப்புடன் பேசி உகந்த தீர்வுப் பொதி ஒன்றை முன்வைப்பதற்கு விருப்பமின்றி, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற நொண்டிக்குதிரையில் ஏறுவதற்கு அது தயாராகிவிட்டது.

தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திவரும் பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ளும் வகையில், தன்னிடம் அதிகாரமும் பெரும்பான்மைப் பலமும் உண்டு என்ற இறாங்கித் தனத்துடன், போனால் போ, போய் எதனையும் செய்துபார் என்ற மமதையுடன் செயற்பட முனைந்து விட்டது கொழும்பு அரசு.

இத்தனைக்கும் அரசாங்கம் தனது உத்தேச தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் என்ற தென்னிலங்கையின் ஏனைய அரசியல் கட்சிகள் விடுக்கும் வேண்டுகோளைத் தானும் அது காதில் போட்டுக் கொள்வதாக இல்லை.

அது மட்டுமா? வெளிநாடுகளுக்கும் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் 'சூய்க்' காட்டும் பாணியில், இனப்பிரச்சினையை விரைந்து தீர்ப்பதில் தனக்கு அக்கறை உள்ளதாகப் போலி வேடம் பூண்டுள்ளது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை, சனல்-4 காணொளி விபரீதங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கு தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை என்று காட்டிக்கொள்ளும் அதேவேளை-

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் எவரும் தம்மிடம் உறுக்கிக் கூற முடியாது என்பதனைப் புலப்படுத்தும் விதத்தில் கடந்த ஜூன் மாதம் பத்தாம் திகதி கொழும்பு வந்திருந்த சிவ்சங்கர் மேனன் தலைமையிலான இந்திய உயரதிகாரிகளிடம் இந்த நாட்டு அரசுத் தலைவர்கள் கருத்துக் கூறியதும் -

அதனால் மனச்சோர்வடைந்த மேனன்: இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு, அதன் மீது நாம் எதனையும் திணிக்க முடியாது. அரசியல் தீர்வில் இவற்றை வழங்கு, அவற்றை வழங்கு என்று வற்புறுத்த முடியாது என்று விரக்தி கலந்த தொனியில் கருத்து வெளியிட்டுச் சென்ற பின்னூட்டல் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மனம் சோர்ந்து கூறியதற்கும், இன்றைய அழைப்புக்கும் மிகுந்த இடைவெளி உண்டு என்பதனை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில்:

இலங்கையிலே உண்மையானதும், விரைவானதுமான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படுவது மிக முக்கியமானதாகும்-

இந்தியாவைப் பொறுத்தவரையில் அது இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் கவனிப்பதில்தான் முக்கிய கவனம் செலுத்துகின்றது-

இலங்கையிலுள்ள சிறுபான்மையினர் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீடித்த அமைதிக்கான தீர்வு ஒன்றைக் கொழும்பு அரசு காண வேண்டும் - என்று தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில், இனப்பிரச்சினைக்குப் புதிதாக அரசியல் தீர்வு எதுவும் தேவையில்லை என்று ஜனாதிபதியின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்து, இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதாக மேளம் கொட்டும் இலங்கை அரசின் போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டி விட்டதாக இந்திய அரச தரப்புக்கள் கருதுவதாகக் கொள்ளலாம். அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை குப்பைக் கூடைக்குள் வீசும் அரசின் போக்கை வெளிக்காட்டுவதாகவும் இந்தியா கருதுகிறது.

எல்லாவற்றுக்கும் அப்பால், ஜனாதிபதி மஹிந்தவின் சீனாவுடனான நெருங்கிய உறவு, இந்தியாவுக்குச் சவால் விடுவதாக அது கருதுவதனை வெள்ளிடை மலை போன்று காட்டுகிறது; புலப்படுத்துகிறது.

அந்த வேகத்தில், வெப்பியாரத்தில், தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைத் தனது கையில் எடுப்பதற்கு இந்தியா முன் வந்திருக்கிறது என்பதே உள்ளார்ந்த நிலை.

ஆகவே, இந்திய மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்று ஓரளவேனும் நம்ப இடமுண்டு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இதனை ஒரு சாதகமான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அவசியம்; அத்தியாவசியம். அதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையே அத்திபாரமாக அமைய வேண்டும். இதுவரை காலமும் உள்வீட்டுச் சண்டை நடத்தியது போதும் என்ற உணர்வு தமிழ் மக்களின் தலைவர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் சகல தரப்பினரின் மனங்களிலும் உயரவேண்டும். தேடி வந்திருக்கும் வாய்ப்பை, தக்கவாறு பயன்படுத்தி இத்தனை வருடங்களாக எமது மக்களுக்கு ஏற்பட்ட அரசியல் உரிமை இழப்புக்களையும், வாழ்க்கையில் ஏற்பட்ட எண்ணிலடங்கா துன்ப, துயரங்களையும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும்.

தமிழ்த் தலைவர்கள் ஒருவர் தலையை மற்றவர் அறுக்க வேண்டும் என்ற சின்னத்தனமுடையவர்கள் என்பதனை டி.எஸ்.சேனநாயக்கா காலம் தொட்டு இன்றைய மஹிந்த வரை நன்றாக அறிந்து வைத்தே எமது மக்கள் மீது குதிரை விடுகிறார்கள் என்பதற்குக் காலமே பிரதான சாட்சி.

எல்லோரும் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்கத்தான் போராடுகிறோம்; உழைக்கிறோம் என்ற உணர்வுடன் விருப்பு, வெறுப்பு, தலைமைப் போட்டி, நானே பெரியவன் என்ற அகங்கார நிலைப்பாட்டிலிருந்து இந்தத் தருணத்திலிருந்தாவது இறங்கி வரவேண்டும்.

நான் பெரிது, நீபெரிது என்ற மேலோங்கித் தனத்தைக் கைவிட்டு ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். அதற்கு முன்னர் அழைக்கப்பட்ட சகல தரப்புகளும் ஒன்றுகூடிப் பேசவேண்டும். தீர்வு தமிழ் மக்களுக்கே எமது கட்சிகளுக்கு அல்ல என்ற கோட்பாட்டுடன் மனம் திறந்து பேசி ஒருமைப்பாட்டு நிலைக்கு வரவேண்டும். நன்றே செய்க அதனை இன்றே செய்க என்ற தாரக மந்திரத்தை, மனதிலிருத்தி முழுக்க முழுக்க எங்கள் மக்கள் நலன் நாடிச் செயற்படுங்கள்.

# கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு மனோ கணேசனை ஆதரியுங்கள்

### கூட்டமைப்பு எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக.18

கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்குப் போட்டியிடவுள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசனுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் கோரிக்கை விடுத்தார்.வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் பெரும் பங்களிப்பை வழங்கினார். கூட்டமைப்பின் வெற்றிக்கு அவரும் காரணமாகியுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பு மாநகரசபை மேயர் பதவிக்காக மனோ கணேசன் போட்டியிடவுள்ளார். எனினும், தனித்துப் போட்டியிடுவதா அல்லது ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிடுவதா என்பது தொடர்பாக அவர் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்று தெரியவருகிறது.

எவ்வாறாயினும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டும். அத்துடன், கொழும்பு மாவட்டத்திலுள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த மக்களும் ஆதரவளிக்க வேண்டும் என்று கோருகிறேன் - என்றார். (ஒ-சி)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்ற கட்டட நிர்மாணத்தைத் துரிதப்படுத்துக!

### நாமல் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக.18

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் நீதிமன்றக் கட்டட நிர்மாணப் பணிகளை மக்களின் நலன் கருதி துரிதப்படுத்தி ஒக்ரோபர் மாதம் முதல் வழக்கு விசாரணைகளை மேற்கொளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நீதி அமைச்சின் செயலாளர் சுகத கம்லத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

30 வருட யுத்தம் காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நீதிமன்ற செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனால் அந்த மாவட்ட மக்கள் நீதியைப் பெறுவதற்காகப் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வேறு மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இது தொடர்பாகத் தனது விசேட கவனத்தைச் செலுத்திய ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நீதி அமைச்சின் செயலாளர் சுகத கம்லத்துடன் கலந்துரையாடி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீதி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் நீதிமன்ற கட்டட நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்துமாறும் ஒக்ரோபர் மாதம் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை நீக்கி அவர்களின் நலன் பேணும் நோக்கிலேயே இந்த வேண்டுகோளை தாம் விடுத்தார் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ஒ-சி)

# அருட்பாடல் இறுவட்டு நல்லூரில் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.18

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அருட்பாடல்கள் அடங்கிய இறு வட்டு வெளியிடப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

கவிஞர் பா. சிவபாலனினால் நல்லூர் கந்தன் ஆலயம், மருதடி விநாயகர் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் மீது பாடப்பட்ட அருட்பாடல்கள் கொண்டது இந்த இறுவட்டு.

இந்த வெளியீட்டு நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன் கலந்துகொண்டு இறு வட்டை வெளியிட்டு வைப்பார். அதனைத் தொடர்ந்து நா. தர்மராஜா (அகளங்கன்) ''ஒரு திருமுருகன்'' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(ஒ-313)

## புலன்களால் பெறப்படும் இன்பத்தை அனுபவிப்பது யார்?

புலன்களால் பெறப்படும் எல்லா இன்பங்களும் உண்மையில் ஆத்மாவால் தான் அனுபவிக்கப்படுகின்றது. நிலைபெற்றிருக்கும் எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது காரணமற்ற ஆத்மாவாகும்.

இந்தப் பிரபஞ்சத்திலேயுள்ள எல்லாப் பொருள்களையும் பாதுகாத்து, நிலைபேறடையச் செய்து, தலைமை தாங்கி ஆதிக்கம் செலுத்துவது இந்த ஆத்மாவாகும்.

புறத்தே காணப்படும் உலகுக்கும் எமக்குள் இருக்கும் அக உலகுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிருஷ்டிக்கப்பட்ட புற உலகின் அடித்தளம் ஆத்மா. அக உலகின் இயக்கத்துக்குத் தோற்றுவாயாக விளங்குவதும் அதுதான்.

எல்லாவற்றினதும் மூல காரணியாக விளங்குவது ஆத்மா. ஆத்மாவின் மிகப் பிரதானமான இந்தப் பங்களிப்பை நாம் உணர்ந்துகொண்டால்தான் புலனுறுப்புகள் எம் மீது ஆட்சி புரிவதை நிறுத்திக் கொள்ளும்.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தில்

# அரியாலை நாவலடியில் தரமற்ற நிலையில் வீடுகள்

யாழ்ப்பாணம், ஒக.18

இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தில் அரியாலை நாவலடியில் அமைக்கப்படும் வீடுகள் தரமற்றதாக அமைக்கப்பட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசால் யாழ்.மாவட்டத்தில் 150 வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் அரியாலை நாவலடியில் 50 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கு அமைக்கப்பட்டு வரும் வீடுகளே உரிய முறையில் அமைக்கப்படவில்லை என்று பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பான முறைப்பாடு அரச அதிபருக்குக் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்ட வேலைகள் இடை நிறுத்தப்பட்டன.

பின்னர் குறித்த இடத்துக்குச் சென்ற செய்த மாவட்டச் செயலக பொறியியலாளர் குழுவினர் அதனை ஆய்வு செய்தனர்.

மாவட்ட செயலக பொறியியலாளர் குழுவினரால் வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளும் பொறியியலாளரிடம் குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டது.

பின்னர் அதனை சரி செய்து பணிகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அரச அதிபர் மேலும் கூறினார். (ம-15)

# பெண்ணின் வாயை இறுக மூடிப் பொத்தி தாலிக்கொடியை அறுக்க முயன்ற பரிசாரகர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக.18

சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற பெண் ஒருவரின் தாலிக் கொடியை அபகரிப்பதற்கு அங்கு பணியாற்றும் பரிசாரகர் ஒருவர் முயன்றுள்ளார்.

குறித்த பெண் கூக்குரலிட்டதை அடுத்து அவரது தாலிக் கொடி தப்பியது. நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

மாதகல் பகுதியைச் சேர்ந்த மேரிதிரேசம்மா (வயது 50) என்பவர் நேற்றுப் புதன்கிழமை காலை வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார்.

அவருக்கு சலப் பரிசோதனைக்காக சலம் எடுத்து வரக் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரி நூலகத்துக்கு சமீபமாக உள்ள கழிவறைக்கு குறித்த பெண் சென்றுள்ளார். அந்தப் பகுதியில் ஆள்கள் நடமாட்டம் இல்லாததை அவதானித்த குறிப்பிட்ட பரிசாரகர் மெதுவாகச் சென்று பெண்ணின் வாயைப் பொத்தித் தாலிக் கொடியை அறுக்க முயற்சித்துள்ளார்.

இதன் போது அந்தப் பெண் கீழே விழுந்த நிலையில் கூக்குரலிட்டுள்ளார். இதனையடுத்து குறித்த நபர் அந்த இடத்தில் இருந்து நழுவமுயற்சித்தபோது அவ்வழியே சென்ற மருத்துவ மாணவர் ஒருவர் நிலைமையைப் புரிந்துகொண்டு பிரஸ்தாப நபரைப் பிடித்ததுடன் வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளருக்கும் அறிவித்துள்ளார்.

பின்னர் குறித்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த இந்த நபர் கடமை நேரத்தில் உத்தியோக உடையில் இருந்துள்ளார் என்றும் இவர் இன்று யாழ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் என்றும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (ம-7-4)

# வரணியில் வர்த்தக நிலையத்தில் பொருள்கள் சூறையாடப்பட்டன

தென்மராட்சி, ஒக. 18

வரணி சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இனந்தெரியாதோரின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

வர்த்தக நிலையத்தில் ஓடு பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் கடையிலிருந்த கயிற்றைப் பயன்படுத்தி பொருள்களை அப்புறப்படுத்தியுள்ளனர்.

பால்மா வகைகள், சவர்க்கார வகைகள் உட்பட பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையத்திலிருந்து 25 மீற்றர் தூரத்தில் படையினரின் முகாம் உள்ளதாகவும் இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு கடமையாற்றியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ம-207)

# வடமாகாண விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக. 18

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ''இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி'' என்னும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து தினங்கள் காலை 8.30 மணிமுதல் மாலை 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தில் விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் உற்பத்தியாளர்கள், உள்ளூரில் பழங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கைத்தொழில் நிறுவனங்களும், விவசாய உற்பத்திப் பொருள்களின் பெறுமதி சேர் நடவடிக்கைகளில் ஈடுபடும் சமூக மட்ட அமைப்புக்களும், கால்நடை உற்பத்திப் பெறுமதி சேர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சமூக மட்ட அமைப்புக்களும் கலந்துகொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை பாடவிதான உத்தியோகத்தர் க.தனபாலசிங்கம் (0779114399), விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் வி.இளங்குமார் (0776106648) ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என்று யாழ்ப்பாண பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ம-313)



சரவணத்து தாமரையில்
தமிழாய் பூத்தவனே போற்றி

தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி
தமிழ்க் குடியைக் காக்கின்ற இறைவா போற்றி
உமை என்றும் உளம் மறவா உரிரே போற்றி
ஓ மென்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத் திடுமுன் எம்கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மயிலில் பறந்துவரும் இளையோய் போற்றி
தமிழ்க் கவிதை தனிற்பிறந்த தலைவா போற்றி
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி



தமிழுக் கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகிக் கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப் பொருளனைத்தும் உளத்தில் கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக எழிலழகனாய் அவதரித்தாய்
தமைத்தும் எளியவர்க்குத் தாயாய் நின்றாய்
சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்

சரவணா
புடைவையகம்

770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP: 021 222 1723.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை

வெற்றிடங்கள்

தென்னை பயிர்ச் செய்கைச் சபையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகுதியுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி : தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பு

தகைமைகள் மற்றும் அனுபவங்கள்:

- க.பொ.த (உ.த) 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அரசாங்க அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய கல்வி நிறுவனத்தின் (இலங்கை விவசாய கல்வி/ தேசிய பயிலுநர்க் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை/ இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி/ ஹாடி நிறுவனம்/ அக்வைனாஸ் நிறுவனம்) பெற்றுக்கொண்ட 02 வருட விவசாய டிப்லோமா சான்றிதழ்
  மற்றும்
  விவசாய பயிர்ச் செய்கை/ பண்ணை முகாமைத்துவம்/ மாதிரித் தோட்ட பரிபாலனம்/ தோட்ட நடுகை/ கிராம அபிவிருத்தி/ விவசாய விரிவாக்கம் சார்பான 03வருட செயல்முறை அனுபவம்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினால் வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானப் பட்டம் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட துறையில் ஒரு வருட அனுபவம் உள்ளவர்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

(இப் பதவிக்கு அனுமதிக்கபடுவதற்கு எழுத்துமூல பரீட்சையால் மேலதிக புள்ளிகள் பெற்றவர்கள் மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்)

சம்பள காண்டம் : MA 2-1, 2006A
சம்பள அளவு : 14,610/- (10x145)(7x170)(4x240)(20x320) = 24,610/-
வயது எல்லை : 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள்:

I. சுய விபரம் மற்றும் கல்விச் சான்றிதழ், தொழில் அனுபவம் மற்றும் தகைமைகள், ஆகிய விடயங்களை உள்ளடங்கி, அத் தகைமைகளை அத்தாட்சிப்படுத்த முடியுமான சான்றிதழ்களின் பிரதிகளோடு விண்ணப்பங்களை சமர்பிக்கவும். அத்துடன் அரச/கூட்டத்தாபணம்/சபையில் வேலை செய்பவர்கள் தங்களது விண்ணப்பங்களை காரியாலய தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

II. விண்ணப்பப் பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

III. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைதீவு, மட்டக்களப்பு, அம்பாரை, திருக்கோணமலை, மன்னார், புத்தளம் ஆகிய மாவட்ட பிரதேசங்களில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

IV. சகல விண்ணப்பப் பத்திரங்களும் **2011/09/07** ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு, கிடைக்கக் கூடியதாக, தலைவர், தென்னை பயிர்ச் செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, எனும் விலாசத்துக்கு பதில் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்படாத விடயங்கள் சம்பந்தமான தீர்மானங்கள் யாவும், பதவி வழங்கும் அதிகாரம் உடைய உத்தியோகத்தரினால் முடிவெடுக்கப்படும். இந்தப் பதவிக்காக தனிப்பட்ட ரீதியிலான சிபாரிசுக்கு முயற்சித்தல், பதவியின் தகுதியின்மையாக கருதப்படும்.

தலைவர்
தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்த 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், ஒக. 18

யாழ்.மாவட்டத்தில் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்து வதற்காக பொருளாதார அபி விருத்தி அமைச்சால் 50 மில்லி யன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதன் மூலம் வீட்டுத்தோட் டம், கால்நடை வளர்ப்பு மற்றும் குடிசைக் கைத்தொழில் என் பன மேம்படுத்தப்படவுள்ளன.

இதடிப்படையில் மாவட் டங்கள் தோறும் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 10 ஆம்,11ஆம் திகதிகளில் கண்காட்சிகள் நடத் தப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் 5 அமைச்சுக்களும், 14 நிறுவனங் களும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்குபற்ற வுள்ளன.

அத்துடன் தெரிவு செய்யப் பட்ட பயனாளிகளுக்கு அவர் களின் விருப்பங்களுக்கு ஏற் றாற் போல் பயிற்சிகளும் வழங் கப்படவுள்ளன.

பயிற்சியின் முடிவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மூலப் பொருள்கள் வழங்கப் படவுள்ளதுடன், தேவைக் கேற்ப வங்கிகள் மூலம் இலகு கடன் வசதிகளும் வழங்கப்படவுள் ளன.

தொழில் முயற்சியாளரின் உற்பத்திப் பொருள்களை விற் பனை செய்வதற்கு சந்தை வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப் படவுள்ளது. (ம-313)

# தோட்டப் பயிர்ச் செய்கையை மேம்படுத்த நெடுந்தீவில் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 18

நெடுந்தீவுப் பிரதேசத்தில் தோட்டப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக குளங் கள் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் முதற்கட்டமாக 5 குளங்கள் புனரமைக்கப்படுகின்றன.

இந்தக் குளங்களின் திருத் தப் பணிகளை முன்னெடுப் பதற்காக பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களுக்கு உரிய எரிபொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கும் நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன.

அத்துடன் மேலதிகமாகக் கால் நடைகளின் குடிதண்ணீருக் காக 53 சிறு கேணிகளைப் புனர மைப்பதற்கு பிரதேச சபையி டம் நிதி ஒதுக்கீடுகள் கையளிக் கப்பட்டுள்ளன.

இதே வேளை யுனிசெவ் நிறு வனத்தின் உதவியுடன் மழை நீர் சேகரிக்கும் திட்டமும் ஆரம் பிக்கப்படவுள்ளது. (ம-313-7)

# சாரதிகள் விதிமுறையைப் பேணாததால் நாளாந்தம் அதிகரிக்கும் வீதி விபத்துகள்

தென்மராட்சி, ஒக.18

வாகன சாரதிகள் இரவு வேளை களில் வாகன விதிமுறைகளை கடைப்பிடிக்காது குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்துள்ள னர். இதனால் வீதி விபத்துகள் நாளாந்தம் அதிகரித்து வருவதா கவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நீண்ட கால இடைவெளிக் குப் பின்னர் வீதிகளில் இரவு வேளையில் வாகனம் செலுத்தப் படுகின்றது. இரவில் வாகனம் செலுத்தும்போது எதிரேவரும் வாகனம் வெளிச்சத்தைக் குறைத் துச் செல்ல வேண்டும் எனப் போக்குவரத்து விதிமுறை உள் ளது.

ஆனால் இந்த நடைமுறையை வாகனச் சாரதிகள் செயற்படுத் தாததால் வீதி விபத்துகள் இடம் பெற்று வருகின்றன. இது தொடர் பாக உரிய அதிகாரிகள் கண் காணிப்பு அவசியமாக உள்ள தால் பொறுப்பை உணர்ந்து செயற்படுமாறு மக்கள் கேட் டுக் கொண்டனர். (ஒ-207)

## ஊக்குவிப்பு...



கௌரவம்: யாழ்ப்பாணக் கல்லூரியின் வங்கியியல் பிரிவின் அனுசரணையுடன் சிவகணநாதன் நம்பிக்கை நிதியத்தால் அண்மையில் அதி சிறந்த வங்கியியல் கற்கை நெறி மாணவர்கள் கௌரவிக்கப்பட் டனர். அதில் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் கலாநிதி டானியல் தியாகராஜா, சிவகணநாதன் நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர் கலாநிதி அருள், வடமாகாண இலங்கை வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-313)

# மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய பல்வேறு செயற்றிட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 18

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்ட நடவடிக் கைகளாக நெடுந்தீவுக் கிழக்கு செபநாயக புரத்தில் மீன்பிடிப் படகுகளை நிறுத்தக் கூடிய தாக கடல் பகுதிகள் ஆழமாக் கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் கடற்றொழி லாளர்கள் தமது வசதிகளைப் பொறுத்து மீன்பிடித்தலை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, நெடுந்தீவுப் பிரதேசத்தில் முற்று முழுதாக மீன்பிடித்தலை இலகு படுத் தும் நோக்கில் பல்வேறு பணி கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அனுமதியின்றி சாராயம் விற்ற மூவருக்கு ரூ.28 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஒக.18

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த மூவருக்கு யாழ்.நீதிமன்றம் 28 ஆயிரம்ரூபா அபராதம் விதித்த தோடு அபராதம் செலுத்தத் தவறின்ஒவ்வொருவரும் இரண்டு மாதகால சாதாரண சிறைத் தண் டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

கோப்பாய் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இவ்வாறு சாராயம் விற் பனை செய்த போது யாழ். மது வரித்திணைக் களப் பரிசோதகர் கள் அவர்களை இனங்கண்டு வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா இருவருக்கும் பத்தாயிரம் ரூபா வீதமும் பிறி தொருவருக்கு 8 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-4)

# கண்ணகை அம்மன் வீதி புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 18

புங்குடுதீவு கண்ணகி அம் மன் கோயில் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண நிதியின் கீழ் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஐந்து மில்லியன் ரூபா செல வில் இந்த வீதி திருத்த வேலை களை மேற்கொண்டுள்ளது.

நீண்ட நாள்களாகத் திருத்த வேலைகள் எதுவுமின்றி மக்கள் போக்குவரத்துக்குச் சிரமமாக இருந்த இந்த வீதி திருத்தப் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறித்து இந்தப் பகுதி மக்கள் திருப்தி தெரிவிக்கின்றனர். (ம-7)

# அங்கவீனமுற்றோருக்கு காசோலைகள்

நவாலி, ஒக.18

வலி. தென் மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழிலுக்கு விண்ணப்பம் செய்த அங்கவீன முற்றோருக் கான கொடுப்பனவு காசோலை கள் 7 பேருக்கு தேசிய செயல கத்தால் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

இவர்களை உடன் வந்து இவற் றைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

ஸ்ரீமுருகன் ரஜிதா-இள வாலை, பொன்னன் ஞானசவுந் தரி -இளவாலை, இராமலிங்கம் கனேசலிங்கம்- சண்டிலிப் பாய், இராஜகுமார் ஜுஜுரா-மாகி யப்பிட்டி, பொன்னுத்துரை ஜெயக்குமார்- மானிப்பாய், ஸ்ரீஸ்கந்தராசா கௌசலின்- மாகியப்பிட்டி, முருகையா தவ மணி-நவாலி. (ம-100)

# நிலத்தடி நீரை சேகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 18

நெடுந்தீவில் நிலத்தடி நீரை சேகரிப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந் திரசிறி பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் ஆகியோர் இது குறித்துக் கவனம் செலுத்தி யுள்ளனர்.

பொதுக்கட்டடங்களில் முதல் நடவடிக்கையாக நிலத்தடி நீரைச் சேமிப்பதற்கான வேலைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப் படுகிறது. (ம-7)

# யாழ். மாவட்டத்தில் 2, 289 வீடுகளை அமைக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## 2010, 2011 காலப் பகுதிகளில் மட்டும்

யாழ்ப்பாணம், ஒக. 18

அரச சார்பற்ற நிறுவனங் களால் 2010 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ். மாவட்டத்தில் 2 ஆயி ரத்து 289 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 71 வீதமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங் களால் யாழ்.மாவட்ட செயல கத்துக்கு கடந்த மாதம் சமர்ப் பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வரு மாறு:

யு.என்.டி.பியால் தெல் லிப்பழை மற்றும் சண்டிலிப் பாய் பிரதேசங்களில் 161 வீடு கள் அமைத்துக் கொடுக்கப்பட வுள்ளன. இதில் 71 வீடுகள் அமைக்கும் பணி ஏற்கனவே பூர்த்தியாகியுள்ளது.

"போரூட்" நிறுவனத்தால் தெல்லிப்பழையில் 9 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள் ளன.

சமூக அபிவிருத்தி நிலை யத்தினால் 400 வீடுகள் அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 277 வீடுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. இவை பிரதேசத்திலேயே அமைக் கப்பட்டுள்ளன. யு.என். ஹபிற் றர் நிறுவனத்தால் மருதங் கேணி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் ஆயிரத்து 81 வீடு கள் அமைத்துக் கொடுக்கப்பட் டுள்ளன.

கரித்தாஸ் நிறுவனத்தால் யாழ்ப்பாணம்,நல்லூர்,வேலணை, மருதங்கேணி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் 241 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள் ளன. இதற்கு மேலதிகமாக 49 வீடுகள் இன்னும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

மருதங்கேணிப் பிரதேசத் தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 350 வீடுகள் அமைத் துக் கொடுக்கப்பட வேண்டி யுள்ளது, கலாசாரத்துக்கும் அபி விருத்திக்குமான முஸ்லீம் அமைப்பால் யாழ்ப்பாணத்தில் 10 வீடுகள் அமைத்துக் கொடுக் கப்பட வேண்டியுள்ளது. மற்றும் ஓ.எம்.ஐ நிறுவனத்தால் நல் லூர் பிரதேசத்தில் 40 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் படுகின்றது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளின் மரணதண்டனைக்கு மன்னிப்புச்சபை எதிர்ப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின்பேரில் பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோருக்கு இந்திய நீதிமன் றம் விதித்துள்ள மரண தண்டனைக்கு சர்வ தேச மன்னிப்புச் சபை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. குறித்த மூவருக்கும்பொது மன்னிப்பு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை இந்திய ஜனாதிபதி பிரதீபாபாட்டில் நிராகரித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு குறித்த மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை இந்தியாவின் மேல் நீதிமன்றம் 1999ஆம் ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்திய அரசின் ஆலோசனைக்கு அமைய அந்த நாட்டு ஜனாதிபதி பிரதீபாபாட்டில் பொது மன்னிப்பு வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

உலகில் விதிக்கப்படும் சகல மரண தண்டனைகளுக்கும் எதிர்ப்பை வெளியிடுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. பொதுமன்னிப்புக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான தீர்ப்பை வழங்குவதற்கு 11 ஆண்டுகள் கடந்துள்ளதாகவும், இது மனிதாபிமானமற்ற செயலாகும் எனவும் மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

பொதுமன்னிப்பு மேன்முறையீட்டு மனுக் கோரிக்கை தொடர்பான விசாரணைகளில் ஏற்படும் கால தாமதம் காரணமாக இந்திய நீதிமன்றங்களில் மரண தண்டனை நிறைவேற்றுவதில் நேரவிரயம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 45 கிராம் ஹெரோயின் கடத்திய இருவர் கைது

கொழும்பு,ஓக.18

45 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கொழும்பு தெமட்ட கொட பகுதியில் வைத்து இரு சந்தேக நபர்கள் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு,புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாளிகாவத்தை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் நாடாளுமன்றத்துக்கான யாழ்.மாவட் டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அண்மையில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற இளைஞர் நாடாளுமன்ற அமர்வின்போது தமது பதவிகளைச் சத்தியப் பிரமாணம் செய்து ஏற்றும் கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் கலாசார மரபுக்கேற்ப உடை அணிந்து காணப்படுகின்றனர். (86)

# இலங்கையின் போர்க்குற்ற விசாரணை; ஐ.நா.மீள் விசாரணை செய்ய வேண்டும்

## ஆஸியின் கோரிக்கையை நிராகரித்தது இலங்கை

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா மீள் விசாரணை நடத்த வேண்டும் என்ற ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூட்டின் கோரிக்கையை இலங்கை நிராகரித்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க நேற்று முன்தினம் இந்தக் கோரிக்கையை முற்றாக நிராகரித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவை மீள் விசாரணை நடத்த வேண்டும் என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அண்மையில் கேட்டிருந்தார்.

கெவின் ரூட் பிரிட்டன் தொலைக்காட்சியின் ஆவணப்படத்தை அடிப்படையாகக் கொண்டே அவ்வாறு கூறியுள்ளார். ஆனால் அந்த ஆவணப் படம் பொய்யானது, பக்கச்சார்புடையது என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசாரசமரசிங்க குறிப்பிட்டுள்ளார். அது ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையே என்று கூறியுள்ள அவர் அந்தக் கோரிக்கைக்கான காரணங்களைக் கூறியிருந்தால் அதை தாம் கவனத்தில் எடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அனைத்துலக விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை விவகாரம் ஒன்றும் அனைத் துலகப் பிரச்சினை அல்ல என்றும் அது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அவர் கூறியுள்ளார்.

## தாதி பயிலுநர் தேவை

எமது வைத்திய நிலையத்துக்கு பெண் தாதி பயிலுநர்கள் தேவை. அண்மையில் உள்ளவர்கள் மட்டும் நேரில் சமுகம் தரவும்.

கமலா வைத்திய நிலையம்
58, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (6969)




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிவித்தல்

### புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள்

- பட்டப்பின் கல்வி டிப்ளோமா - [பகுதி நேரம் 2009/2011 முழுநேரம் 2009/2010]
- உடற்கல்வி டிப்ளோமா [2011/2012]

ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்த **பட்டப்பின் கல்வி டிப்ளோமா** கற்கை நெறிக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையும் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சை உடற் தகைமை தகுதிகாண் பரீட்சை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சையும் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

| கற்கை நெறி | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| பட்டப்பின் கல்வி டிப்ளோமா- (பகுதி நேரம் 2009/ 2011, முழுநேரம் 2009/2010) | 23.08.2011 (செவ்வாய்) 24.08.2011 (புதன்) | மு.ப.9.30- பி.ப.4.00 மு.ப.9.30- பி.ப.4.00 | பீடாதிபதி அலுவலகம், கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம் |
| உடற்கல்வி டிப்ளோமா 2011/2012 | 22.08.2011 (திங்கள்) | மு.ப. 9.00- பி.ப. 1.00 | சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகம், மாணவர் நிலையம், யாழ்.பல்கலைக்கழகம். |

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியானவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் அனுமதிகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அவர்களுடன் 0212226714 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
(சி/3031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்

## பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறுகிறார்

கொழும்பு,ஓக.18

நாட்டில் ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.


ஊழல் மோசடிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அமைப்பின் உத்தியோகபூர்வ இணையதள வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாடு அதிகளவில் கடன் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதற்கு ஊழல் மோசடிகளே காரணமாகும்.

அரசு மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் போது விலை மனுக்கோரல் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் எதிர்கால சந்ததி ஒரு கடனாளிச் சமூகமாக உருவாகும் அபாயம் காணப்படுகின்றது.

ஊழல் மோசடிகளற்ற ஒரு நாட்டை உருவாக்க வேண்டுமாயின் 2004 ஆம் ஆண்டு ஊழல் மோசடி தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனம் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களைக் கொண்டு சுயாதீனமான முறையில் விசாரணைகளை



நடத்த முடியவில்லை.

போலியான குற்றச்சாட்டுக்களைச் செய்யும் நபர் ஒருவரை பத்தாண்டுகள் வரையில் சிறையில் தடுத்து வைப்பதற்கு சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனால், அதிகமானோர் குற்றச் செயல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை- என்றார். (ச)

# 'மிக்' விமான ஊழல் விவகார வழக்கு; நீதிமன்றில் ஆஜரானார் கோத்தபாய

கொழும்பு, ஓக 18

இராணுவத்துக்கான மிக் விமானக் கொள்வனவில், ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று சண்டே லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்திக்கு எதிராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்கிஸை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான பாதுகாப்புச் செயலாளர் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் சாட்சியமளித்தார்.

கடந்த 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்ட இந்தச் செய்திக்கு எதிராக பாதுகாப்புச் செயலாளர் கல்கிஸை நீதிமன்றில் மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தச் செய்தியால் தனக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது எனவும் அதற்கு நட்ட ஈடாக 100 கோடி ரூபாவை சண்டே லீடர் நிறுவனம் வழங்க வேண்டும் எனவும் மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், கல்கிஸை மாவட்ட நீதிவான் பீ.எஸ். மொராயஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மன்றில் ஆஜரான பாதுகாப்புச் செயலாளர், தனது சாட்சியத்தில் கூறியதாவது:-

பொதுமக்களின் நன்மதிப்பு மற்றும் கௌரவத்தைப் பெற்றுக்கொண்ட பரம்பரை என்ற பெயர் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு உண்டு.

இருப்பினும் எமது குடும்பத்தை இழிவுபடுத்தும் வகையில் இந்தக் செய்தி வெளியிடப்பட்டுள்ளது - என்றார்.



கொழும்பு, காலி முகத்திடலில் அமைந்துள்ள உணவகங்களில், கொழும்பு மாநகரசபையின் சுகாதாரப்பிரிவினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த அதிகாரிகள் உணவகங்களிலுள்ள உணவு வகைகள் மக்கள் பாவனைக்கு உகந்தவையா என சோதனையிடுகின்றனர்.

# எலிக்காய்ச்சலால் ௬௦ பேர் பலி

நாட்டில் கடந்த ஏழு மாதங்களில் எலிக்காய்ச்சல் காரணமாக 60 பேர் உயிரிழந்திருப்பதாகச் சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்புப் பிரிவு மருத்துவ நிபுணர் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் 4743 பேர் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.கம்பஹா, குருநாகல், ஹம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவிலானோர் உயிரிழந்ததாக அவர் தெரிவித்துள்ளார். இந்தக் காய்ச்சலுக்கு குருநாகல் மாவட்டத்தில் 1080 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இன்னும் இரு ஆண்டுகளில் ஆட்சியைக் கைப்பற்றுவோம்

## ரணில் நம்பிக்கை



கொழும்பு, ஓக. 18

இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றும் என்று அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கிய பாதைக்கு இட்டுச் சென்றதுபோல எதிர்காலத்திலும் செயற்படவுள்ளேன்.

2009 ஆம் ஆண்டு நான் இந்தக் கட்சியை முன்கொண்டு வந்தேன். அதேபோல் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் நாம் ஆட்சி அதிகாரத்திற்கு வருவோம். அதற்காகவே நாம் தயாராகிறோம். மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசுக்கு முடியாது. இது ஒருகட்சி சார்பாக செயற்படும் அரசு- என்றார்.

# சிவனொளிபாதமலைப் பிரதேசத்தில் கறுப்பு உடையில் நடமாடியவர் கைது

கொழும்பு, ஓக.18

கறுப்புநிற உடை அணிந்து கொண்டு சிவனொளிபாத மலைப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவரின் நடமாட்டத்தை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, பினாட்டி இராணுவமுகாமைச் சேர்ந்த டி.ஜி. எம்.திலகரத்ன என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் நேற்றுமுன்தினம் தியத்தலாவை இராணுவமுகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கிறீஸ் மனிதர்கள் என்பது கட்டுக்கதை; இனவாதத்தைக் கிளப்ப சிலர் முயற்சி

## சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித

கொழும்பு, ஓக 18

கிறீஸ் மனிதர்கள் என்பது கட்டுக்கதை. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் இனவாதத்தைக் கிளப்பவே சிலர் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மர்ம மனிதன் பீதியைத் தணிப்பதற்காகவும் அது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலும் மட்டக்களப்புக்குச் சென்ற அவர், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பாதுகாப்புத் தரப்பினரான எங்களது ஆயுதங்கள் தற்போது மௌனமாகவே இருக்கின்றன.

இந்தநிலையில், ஒன்றாக இருக் கும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முனையும் சிங்கள அடிப்படைவாதிகளுக்கு எமது ஆயுதங்களே பேசும்.

சில அடிப்படைவாதிகள், விசமிகள், சமூக விரோதிகள், நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்ல நினைப்பவர்களே, மர்ம மனிதர்கள் என்ற போர்வையில் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் விடுதலை, தமிழர்கள் விடுதலை இயக்கம் என்று ஒன்று இல்லை. அரசு என்று மட்டுமே ஒன்று உள்ளது. அதே போன்று சிங்களவர் விடுதலை, முஸ்லிம்கள் விடுதலை என்றும் ஒன்றும் இல்லை. அப்பட்டமான பொய்ப்பிரசாரங்களுக்கு உட்பட வேண்டாம்.

சிங்கள மக்கள் இனவாதத்தைக் கிளப்பும் வகையில், புதிதாக கிறீஸ் பூதம் என்ற கட்டுக்கதையைக் கிளப்பியுள்ளனர். இதனைச் செய்வது பாதுகாப்புப் படைகளிலுள்ள சிங்களவர்கள் என்று சிலர் சொல்கின்றனர்.

இவர்களுடன் சேர்ந்து கும்மாளமிடும் மக்கள் பிரதிநிதிகளும் அவமானப்படுத்துகின்ற கருத்துக்களையே தெரிவிக்கின்றனர். தமிழ், முஸ்லிம் மக்களின் மத்தியில் இனவாதத்தினைப் பரப்ப சிங்கள இனவாதச் சூத்திரதாரிகள் முயல்கின்றனர்.

புலி பதுங்குவது பாய என்கின்றனர். அவ்வாறு எந்தப் புலிகளும் இல்லை. மிருகக்காட்சிச் சாலையில் இருக்கின்ற புலி கள் மட்டுமே இருக்கின்றன. விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் அனைவரும் அழிக்கப்பட்டுவிட்டனர். யுத்தம் செய்து பெற முடியாததை சனல் - 4, ஐ.நா அறிக்கை மூலம் அழுத்தம் கொடுத்து சாதிக்க முயல்கின்றனர்.

எந்த ஒரு மனிதனும் தனது பிள்ளைகளைப் படிக்கச் செய்து சமுதாயத்தில், நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதையே யோசிப்பர். எங்களது ஆயுதங்கள் மௌனமாக இருக்கின்றன.

இங்கு ஒன்றாக இருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரிவினை ஏற்படுத்த முனையும் சிங்கள அடிப்படைவாதிகளுக்கு எமது ஆயுதமே பேசும்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற 13 கொலைகள் பல்வேறு மாற்றங்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியிருந்தன.

அதன் பின்னர் அரந்தலாவையில் 23 பிக்குமார் கொல்லப்பட்டது, தலதா மாளிகை மீது குண்டு வைக்கப்பட்டமை, இலங்கையின் பொருளாதார முக்கியத்துவம் மிக்க மத்திய வங்கி மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தவேளையில் சிங்கள மக்கள் கொதித்தெழுந்து தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் எவ்வாறான நிலை உருவாகியிருக்கும்?

வீணான வதந்திகளை நம்பி, பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கின்ற உறவைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வுக்கென அழைத்துச் செல்லப்பட்டு வெட்டவெளியில் வாடும் கருநாட்டுக்கேணி மக்கள்

## ஐந்து மாதங்களாகத் தொடரும் அவலம்

வவுனியா, ஓக. 18

மீள்குடியேற்றத்துக்காக அழைத்துச் செல்லப்பட்டு ஐந்து மாதங்களாகிவிட்ட போதிலும், தமது சொந்தக் காணிகளுக்கு இன்னும் தங்களை அனுப்பி வைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்டம் கருநாட்டுக்கேணி மக்கள் கவலை வெளியிட்டிருக்கின்றார்கள்.

முல்லைத்தீவில் இருந்து சுமார் 18 மைல் தொலைவில் உள்ள கொக்கிளாய்ப் பகுதியில் அதிகாரிகள் தம்மை ஒரு வெட்டவெளியில் கூடாரங்களில் தங்க வைத்துள்ளதாகவும், அங்கு தண்ணீர் உட்பட அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பன பற்றாக்குறையான நிலையிலேயே தாங்கள் இருப்பதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் தமது கிராமம் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த மக்களை இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றியதையடுத்து, நிரந்தரமாக இருக்க இடமின்றி, யுத்தச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்டுப் பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்து பின்னர் மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இந்த மக்கள் தஞ்சமடைந்திருந்தனர்.

தமது பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் அறிவித்திருந்ததையடுத்தே, கடந்த மார்ச் மாதம் தங்களைத் தமது பிரதேசத்துக்கு அதிகாரிகள் மீள்குடியேற்றத்துக்காக அழைத்து வந்தபோதிலும் இன்னும் தங்களை மீள்குடியேற்றம் செய்யவில்லையென அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், தொழில் வாய்ப்பின்றியும், நிவாரணத்தை நம்பியும் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தி வரும் இந்த மக்கள் தங்களை உடனடியாகத் தமது கிராமத்துக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் என கோரிக்கை விடுக்கின்றனர்.

கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படாததன் காரணமாகவே மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இது குறித்து முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் கருத்துத் தெரிவிக்கும்போது:

இந்த மக்கள் அவர்களது காணிகளில் சென்று குடியேறுவதற்கு வசதியாகக் காணிகளைத் துப்புரவு செய்தபோது சில வெடி பொருள்கள் அங்கிருந்து வெடித்துள்ளதாகக் கூறினார்.

அதனையடுத்துக் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்குப் பொறுப்பான ஐ.நா. அதிகாரிகளிடம் அந்தப் பிரதேசத்தை மீண்டும் சோதனை செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டிருப்பதாகவும், இந்தப் பணிகள் முடிவடைந்ததும் அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# துர்க்கா வீதி தயிர்க்கடை வீதியானது

முல்லைத்தீவு, ஓக. 18

புதுக்குடியிருப்பில் உள்ள துர்க்கா வீதி தற்போது தயிர்க்கடை வீதியெனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதி புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியிலிருந்து ஆரம்பித்து புதுக்குடியிருப்பு - மாத்தளன் வீதியில் சென்றடைகின்றது.

முன்பு பெண்ணொருவர் புதுக்குடியிருப்பு - மாத்தளன் வீதிச் சந்தியில் சிறிய தயிர்க்கடையொன்று வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனவேதான் இராணுவத்தினர் புதிய பெயரை இந்த வீதிக்குச் சூட்டியதுடன் பெயர்ப் பலகையும் வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

(க-ரி)

# மதுபானசாலைகளுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய இடங்களில் நிறுவப்படவிருந்த மதுபானசாலைகளுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை பொன்னகர்ப் பகுதியில் மதுபானசாலையொன்று அமைப்பதற்கான வேலைகள் முடிவடைந்துள்ளன.

இந்த நிலையில் முள்ளியவளை மேற்குக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் சம்மதமும், அனுமதியும் கிடைக்காததால் மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இதைப்போன்று தண்ணீரூற்று நெடுங்கேணிச் சந்தியை அடுத்துள்ள மூன்றாவது காணிக்குள் பெருமெடுப்பில் தொடங்கப்பட்ட மதுபானசாலையின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் தனிப்பட்ட ரீதியில் எவ்வளவு பணமும் தரலாமென மதுபானசாலைகளை அமைக்க விருந்தோர் கேட்டுள்ள போதிலும் சங்க நிர்வாகிகள் அதனை நிராகரித்து விட்டனர்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இந்தச் செயலை இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

(க-ரி)

# கனகபுரத்தில் மழலைகள் விழா

கிளிநொச்சி, ஓக.18

கரைச்சிக் கல்விக் கோட்டத்தினுள் அமைந்துள்ள முன்பள்ளிகளின் மழலைகள் விழா இன்று காலை 9 மணிக்கு கனகபுரத்திலுள்ள ஸ்ரீகாந்தா முன்பள்ளியில் நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. விந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் கலந்து கொள்வார்.

பளைக் கோட்டத்துக்கான மழலைகள் விழா நாளையதினம் பளை மத்திய கல்லூரியிலும், கண்டாவளைக் கோட்டத்துக்கான மழலைகள் விழா 22 ஆம் திகதி தர்மபுரத்திலும், பூநகரிக் கோட்டத்துக்கான மழலைகள் விழா 23 ஆம் திகதி செம்பன் குன்று முன்பள்ளியிலும் நடைபெறவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-405)


# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சிற்றம்பலம் இராமலிங்கம்

தோற்றம் 27.06.1922

மறைவு 19.07.2011

கடந்த 19.07.2011 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிற்றம்பலம் இராமலிங்கம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியும் மரணச் சடங்கில் பங்குபற்றி எம்மைத் தேற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியும் தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் மூலம் அஞ்சலி தெரிவித்த அன்பர்களுக்கும், மலர் மாலை, மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் இறுதி அஞ்சலி நிகழ்வின்போது அஞ்சலி உரையாற்றியோருக்கும் இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளைச் சிறப்புற நடத்த உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், இன்னும் பலவழிகளில் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை அன்போடும் பணிவோடும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.08.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவன் இல்லம்"
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்-

(6998) (45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகரக் கொட்டில்களில் அல்லற்படும் டொன்பொஸ்கோ இல்லச் சிறுவர்கள்

வவுனியா, ஓக. 18

வவுனியாவில் இயங்கி வரும் டொன்பொஸ்கோ சிறுவர் இல்லம் தகரக் கொட்டில்களில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சிறுவர் இல்லத்தில் போரினால் பாதிக்கப்பட்டுத் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களே கூடிய எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 130 இற்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்று வருகின்றனர். ஆனால் இவர்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றித் தகரக் கொட்டில்களில் தங்கியுள்ளனர்.

தற்போது நிலவும் கடுமையான வெய்யிலால் இவர்கள் தங்கி நிற்கும் தகரக் கொட்டில்கள் வெப்பத்தைக் கக்கிக் கொண்டிருக்கின்றன. இதற்குள் இருப்போரின் நிலைபற்றிக் கூறத் தேவையில்லை.

இனிவரும் காலம் மழைகாலம் என்பதால் தாம் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க நேரிடுமென இங்குள்ள சிறுவர்கள் மனவேதனையுடன் கூறினர்.

மேலும் இவர்கள் தற்போது தங்கியுள்ள இடம் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானதெனவும் அவர்கள் இவர்களை வெளியேறுமாறு கூறியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேகருத்தை இந்தச் சிறுவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ள கிறிஸ்தவ சகோதரிகளும் வேதனையுடன் கூறினர்.

இதனால் இவர்கள் அச்சத்துடன் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கருணையுள்ளம் கொண்டவர்களும், பொது அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் தமக்கு உதவ வேண்டுமென இவர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-431)

# புலிகளின் தலைவர் வாழ்ந்த வீட்டை பார்வையிட தமிழர்களுக்குத் தடை!

முல்லைத்தீவு, ஓக. 18

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வசித்து வந்ததாகக் கூறப்படும் வீட்டைப் பார்வையிடுவதற்குத் தமிழ் மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியிலுள்ள ஒரு வீட்டில் விடுதலைப்புலிகளின் தலைவர் வசித்து வந்ததாகக் கூறப்பட்டு அதனைப் பார்வையிடுவதற்கு இரு இன மக்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் தென்பகுதி மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட இந்த அனுமதி புதுக்குடியிருப்பில் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டது.ஆனால் தற்போது இந்தப் பகுதிக்குத் தமிழ் மக்கள் செல்லமுடியாதவாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து வந்து இந்த வீட்டைப் பார்வையிட வந்த சிலர் இழிவான கதைகளைக் கூறினார்களாம். இதனைப் பிடிக்காத தமிழர் ஒருவர் அந்த நபர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் பின்னர் வாக்குவாதம் கைகலப்பாக மாறியுள்ளது.

இதனால் மீண்டும் தென்பகுதி மக்கள் மட்டுமே என்ற நிலை ஏற்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பில் உள்ள மக்கள் கூறியதாகவும் தெரிவருகின்றது. (க-ரி)

# வங்காலைக் கிராமத்திலும் மர்ம மனிதர்கள்: பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

மன்னார் வங்காலைக் கிராமத்தில் 'பீல்ட் பைக்கில்' சுற்றிய இரு மர்ம மனிதர்கள் பொது மக்களிடம் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் இரண்டு பீல்ட் பைக்குகளில் வந்த இருவர் வங்காலைக் கிராமத்தைப் பல தடவைகள் சுற்றியுள்ளார்கள். இவர்கள் தம்மை மற்றவர்கள் அடையாளம் காண முடியாதவாறு கறுப்பு நிறமுடைய தலைக்கவசத்தால் முகங்களை மூடி மறைத்தவாறு காணப்பட்டனர். மேலும் இவர்கள் இருவரும் தாம் ஓட்டிய மோட்டார் சைக்கிள்களின் முன் சில்லுகளைத் தூக்கிப் பிடித்தவாறு சாகசமும் காட்டியுள்ளனர். இவர்களின் செயல்களில் ஐயம் கொண்ட மக்கள் இவர்களைத் துரத்த ஆரம்பித்தனர். மர்ம நபர்களும் வேகமாகி ஒடித் தப்ப முயன்றுள்ளனர்.ஆனால் சிறு நாவற்குளம் செல்லும் வீதியில் பொதுமக்கள் இவர்களை மடக்கிப்பிடித்து உரிய மரியாதைகளும் செலுத்தியுள்ளனர்.

பின்னர் பொலிஸாருக்குத் தகவல் தரப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் மர்ம நபர்கள் இருவரையும் பொறுப்பேற்றுப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். பொலிஸாரின் விசாரணைகள் தொடர்வதாகத் தெரிய வருகின்றது. பிடிக்கப்பட்டவரில் ஒருவர் வங்காலைக் கிராமத்தில் முன்னர் மரத்தளபாட விற்பனையில் ஈடுபட்டு வந்தவரென மக்கள் கூறுகின்றனர். (க-601)

## உழைப்புக்கு வெற்றி...



சிறந்த குழுவினர்: ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்திலிருந்து ஆங்கில தினப் போட்டியில் அபிநயப்பாடல் குழு இரண்டில் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பாசிரியைகளுடன் காணப்படுகின்றனர்.

# குடிசையொன்றில் கல்வி கற்கும் முள்ளியவளை முன்பள்ளிச் சிறார்கள்

வவுனியா, ஓக.18

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை மூன்றாம் வட்டாரத்தில் இயங்கும் சரஸ்வதி முன்பள்ளி நிரந்தரக் கட்டடமின்றிக் குடிசையொன்றில் இயங்கி வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்த முன்பள்ளி கடந்த 25 வருடங்களாக இயங்கி வருகின்றது. முன்னர் இந்த முன்பள்ளி சனசமூக நிலையக் கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது இந்தக் கட்டடம் இடிந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மீள்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக குடிசையொன்றில் முன்பள்ளி இயங்கி வருகின்றது. இந்த முன்பள்ளியில் சுமார் 30 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர்.

ஆனால் இரண்டு முதியவர்கள் வசித்து வரும் இந்தச் சிறு குடிசையில் முன்பள்ளியை இயக்குவது மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி வருகின்றது.

மேலும் இங்கு கற்பிக்கும் ஆசிரியை ஒருவருக்கு 25 வருடத்துக்குப் பின்னரே வேதனமாக ஒரு சிறுதொகை வழங்கப்பட்டது. அதுவும் 5 ஆயிரத்திலிருந்து தேய்ந்து 3 ஆயிரமாக மாறியுள்ளது.

இந்த ஆசிரியை இது பற்றித் தெரிவிக்கையில்:

கடந்த 25 வருடங்களாக வேதனமெதுவுமின்றியே நான் பணி புரிந்தேன். எனக்குக் கொடுப்பனவை விட இந்தப் பிள்ளைகளை ஒரு நிரந்தரக் கட்டடத்தில் வைத்துப் படிப்பிக்க வேண்டுமென்பதே அவாவாகவுள்ளது என்றார்.

உரியவர்கள் இதில் கூடிய கவனமெடுத்துச் சிறார்களின் கல்வியை வளர்ப்பதற்கேற்றவாறு ஒரு நிரந்தரக் கட்டடத்தை இந்த முன்பள்ளிக்கென அமைத்து வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-431)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் விருது பெற்றோர்

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தேசிய மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் அண்மையில் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் விவரம் வருமாறு:-

**தமிழ்த்தினப் போட்டி**

**பேச்சு**

ந.அபிராமி (திருவையாறு ம.வி)-மாகாணம்1, தேசியம் 1.

**கட்டுரைவரைதல்**

ந.அபிராமி (திருவையாறு ம.வி) மாகாணம் 2 ஆம் இடம்.

**பேச்சு**

ந.சாமந்தி (திருவையாறு ம.வி) - மாகாணம் முதலாமிடம்.

**திருக்குறள்-மனனம்**

கே. அபியுகா (திருவையாறு ம.வி) மாகாணம் முதலாமிடம். தி.கீர்த்தனா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)மாகாணம் முதலாமிடம், தேசியம் 3 ஆம் இடம்.

**குறுநாடகப் பிரதியாக்கம்**

பா.அஜித்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி) மாகாணம் முதலாமிடம், தேசியம் 2ஆம் இடம்.

**கட்டுரை வரைதல்**

இ.சங்கீர்த்தனா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம் 2, ஆங்கிலதினப் போட்டி உறுப்பெழுத்து, மாகாணம்-3 ஆம் இடம். தேசிய வாசிப்பு மாதப் போட்டி, தேசியம் 3ம் இடம். செ.பிரியதர்சினி (பூநகரி ம.வி) - தேசியம் 2 ஆம் இடம்.

**தனி இசை**

தா.நிர்மலகென்றீசன் (முழங்காவில் ம.வி) மாகாணம் 3 ஆம் இடம்.

**நடனம் - குழு1**

பி.தர்மீரா, (முழங்காவில் ம.வி) மாகாணம் 3 ஆம் இடம். சு.மதுவர்தனி,(முழங்காவில் ம.வி)மாகாணம் 3 ஆம் இடம், இ.மதுசாளினி,(முழங்காவில் ம.வி)மாகாணம் 3 ஆம் இடம் ச.ரேணுகா (முழங்காவில் ம.வி), மாகாணம் 3ஆம் இடம், க.ஒளிநிலா (முழங்காவில் ம.வி) மாகாணம் 3ஆம் இடம், அ.கெயில்டன் குருஸ் (முழங்காவில் ம.வி) மாகாணம் 3ஆம் இடம், யே.ரூபன் (முழங்காவில் ம.வி) மாகாணம் 3ஆம் இடம், க.கஜன் (முழங்காவில் ம.வி)மாகாணம் 3 ஆம் இடம், சு.பிரேம்சிங் (முழங்காவில் ம.வி) மாகாணம் 3ஆம் இடம், ர.யசோதரன் (முழங்காவில் ம.வி)மாகாணம் 3ஆம் இடம்,

**கட்டுரை வரைதல்**

க.தூரிகா (முழங்காவில் ம.வி) மாகாணம் 3ஆம் இடம்,

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

சி.கௌதம்,மாகாணம் 3, ஜெயபுரம் ம.வி,

**நடனம்**

அ.தரணிகா, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, ச.தேனுசா, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, ஜீ.கலக்சி, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, வி.நின்சி, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, வி.கலைவாணி, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3,த.றொசாந்தி, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, சே.மேரி அனோஜா, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, இ.சுகன்ஜா, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, இ.பவித்ரா, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3, இ.நிவேந்தினி, ஜெயபுரம் ம.வி, மாகாணம் 3,

**கவிதையாக்கம்**

கு.சத்தீனா, வேரவில் இ.ம.வி, மாகாணம் 2.

**நீளம் பாய்தல்**

**13 வயதுப் பெண்கள்**

கே.பவித்ரா, முக்கொம்பன் அ.த.க.பா, மாகாணம் 3,

**800 மீற்றர்**

**19 வயதுப் பெண்கள்**

ச.பகிரதன், மாகாணம் 2முக்கொம்பன் - அ.த.க.பா,

**5000 மீ. -19 வயது ஆண்கள்**

பி.றுகிர்தன், பூநகரி ம.வி., மாகாணம் 2,

**21 வயதுப் பெண்கள் - ஈட்டி**

து.கவிதா, பூநகரி நல்லூர் ம.வி, மாகாணம் 2.

**விசேட கூத்து**

யோ.நாகேஸ்வரி, பளை றோ.க.த.க.பாடசாலை, மாகாணம் 3, தி.ஜெரினா, பளை றோ.க.த.க.பாடசாலை, மாகாணம் 3, அ.அனிஸ்ரலா, பளை றோ.க.த.க.பாடசாலை, மாகாணம் 3, க.தரிஷிகா, பளை றோ.க.த.க. பாடசாலை, மாகாணம் 3, தி.ஜெனுஷி, பளை றோ.க.த.க. பாடசாலை, மாகாணம் 3, ச.பிரதீபா, பளை றோ.க.த.க.பாடசாலை, மாகாணம் 3, றா.புவனேஸ்வரி, பளை றோ.க.த.க. பாடசாலை, மாகாணம் 3, பா.பவித்திரா (பளை றோ.க. த.க.பாடசாலை) மாகாணம் 3, ம.தனுஜா பளை றோ.க.த.க. பாடசாலை) மாகாணம் 3, தி.விந்துஜன் (பளை றோ.க.த.க. பாடசாலை) மாகாணம் 3, அ.லவண்ஜா (பளை றோ.க.த.க. பாடசாலை) மாகாணம் 3, அ.யதுஷா (பளை றோ.க.த.க.பாடசாலை) மாகாணம் 3, தி.ஜெறினா (பளை றோ.க. த.க.பாடசாலை) மாகாணம் 3, டொ.டொறிசினி (பளை றோ.க. த.க. பாடசாலை) மாகாணம் 3, யே.டிலக்சா (பளை றோ.க.த.க. பாடசாலை) மாகாணம் 3.

**குண்டு போடுதல்**

**19 வயது ஆண்கள்**

த.நிருஷாந்(பளை மத்திய கல்லூரி) மாகாணம் 3,

**கட்டுரை வரைதல்**

க.அபிஷிகா (முருகானந்த ம.வி)மாகாணம் 1.

(க-405) (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆலயத் திருவிழாக்கள்




## ஆன்மீகத்தைப் பரப்புகின்றனவா?

ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்கள், களியாட்ட நிகழ்வுகள் நமது பாரம்பரியமான பண்பாடுகளை எடுத்துக் காட்டுவதுடன் இளைய தலைமுறையின் மத்தியில் ஆன்மீகக் கருத்துக்களை வித்திடுவதாக அமைகின்றன.

ஏனெனில் ஆன்மீக ரீதியான தத்துவங்களை அறிந்து கொள்வதற்கு பாடசாலைக் காலங்களில் கற்பவை சற்றுக் குறைவாகவே இருக்கும். ஆனால் கிராமங்கள் தோறும் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்கள், நிகழ்வுகள் யாவும் ஆன்மீக ரீதியான பல்வேறு விடயங்களைப் பெற்றுத் தருகின்றன.

திசைமாறிப் போகும் இளம் சமுதாயம் தம்மை ஆன்மீகப் பாதையில் கொண்டு சென்று சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கற்றுத் தருகின்றன.

இதுபோன்ற விழாக்கள் அடிக்கடி இடம்பெற்றால் பெரும் நன்மைகளைப் பெற ஏதுவாக அமையும்.

ஆலய வழிபாட்டு முறைகள், மன அமைதி, பெரியோரை மதித்தல், இந்துசமயப் பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கும் வழியமைக்கின்றன இளைய தலைமுறையினருக்கும் இவை ஒரு வழிகாட்டியாகவே அமையும்.

**ஜீவன்,** மானிப்பாய்.

## களியாட்டத்துக்கு வித்திடுகின்றனவா?

ஆன்மீகம் என்பது வீழ்ச்சியடைந்து செல்வதை மக்கள் மத்தியில் காணமுடிகின்றது. அதிலும் ஆலயத்திருவிழா என்றால் களியாட்டம்தான். இன்றைய திருவிழாக்களில் விசேடமாக அலறும் சத்தத்துடன் ஒலிபெருக்கி, இசைக்குழுக்களின் சினிமா பாடல்கள் போன்றன முக்கியம் பெறுகின்றன. இங்கு ஆன்மீகம் முக்கியம் பெறுவதில்லை. இது யாவரும் அறிந்ததே. இன்றைய திருவிழாவுக்குச் செல்பவர்களும் கூட அழகாக ஆடை உடுத்து தம்மை அலங்கரித்துச் செல்கிறார்கள். கோயிலுக்குச் செல்வது கூட எல்லோரும் போகினம் நானும் போவம் என்ற வகையில்தான் இடம்பெறுகிறது.

ஆலயத்தின் புனிதம் இழக்கப்படுவது எம் மக்களால் தான் இவ்வாறு இருக்கையில் ஆன்மீகம் எங்கே? ஆலயத்திருவிழாவில் ஈடுபாடு எங்கே? இதுதான் இன்றைய சமுதாயம்.

பண்டைய காலங்களில் உயர் ஆன்மீகத்துடன், நமது கலைகளும் பேணப்பட்டன. ஆனால் இன்று அனைத்தும் அடியோடு அழிந்துவிட்டன. இது மறுக்கப்பட முடியாத உண்மை.

இதிலும் கோயிலுக்குள் ஆன்மீகத்தைப் பரப்ப முற்படுபவர்கள் கூட வேதனைப்படும் அளவுக்கு இன்றைய சமுதாயம் உள்ளது.

தமிழ் கலாசார ஆடைகளைக் கூட நம்மவர் மத்தியில் காண முடிவது கஷ்டமாக உள்ளது. இவ்வாறு இருக்கையில் ஆன்மீகத்தைக் காண முடியுமா? இன்றைய ஆலயத்திருவிழாக்கள் களியாட்டத்துக்கே வித்திடுகின்றன என்பதில் ஐயமில்லை.

**வி.கீர்த்தனா,** மானிப்பாய்.

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே

**இந்த முறை இடம்பெற்ற**
**உள்ளூராட்சி சபைத் தேர்தலில்**
**இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்**

**போதுமானது** **போதாது**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன் வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றி பெறும் என்று நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

# உங்கள் சிந்தனைக்கு



மிக மிக நல்ல நாள் :
இன்று
மிகப் பெரிய வெகுமதி :
மன்னிப்பு
மிகவும் வேண்டாதது :
வெறுப்பு
மிகப்பெரிய தேவை :
சமயோசித புத்தி
மிகக் கொடிய நோய் :
பேராசை
மிகவும் சுலபமானது :
குற்றம் காணல்
கீழ்த்தரமான விடயம் :
பொறாமை
நம்பக் கூடாதது : வதந்தி

**ச.தர்சி,**
7ஏ,
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார்*
*வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-........................................
முகவரி :- ........................................
........................................
.................... ....................
திகதி கையொப்பம்

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இன்றைய ஆலயத் திருவிழாக்கள்**

ஆன்மீகத்தைப் பரப்புகின்றனவா? [ ] களியாட்டத்துக்கு வித்திடுகின்றனவா? [ ]

பெயர்: ........................................
முகவரி: ........................................
அடையாள அட்டை இல. ....................
........................................

உங்கள் தீர்ப்புக்களை 25.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# நேற்றுவரை.....

முதலெழுத்துடன் முழுப்பெயர்
எழுதும் போது வலிக்கிறது
நேற்றுவரை - என் முதலெழுத்து
உன் பெயரென்பதால்

முகப்புத்தகத்தில் கடவுச் சொல்
கொடுக்கும் போது வலிக்கிறது
நேற்றுவரை - என் கடவுச் சொல்
உன் பெயரென்பதால்

தொலைபேசியில் ஆண்குரல்
கேட்கும் போது வலிக்கிறது
நேற்றுவரை - நான் கேட்டது
உன் குரலென்பதால்

காதலுடன் கவிதைகள்
வரையும்போது வலிக்கிறது
நேற்றுவரை - என்
கவிதைகள் நீ என்பதால்

கனவுகளுடன் ஓவியங்கள்
தீட்டும் போது வலிக்கின்றது
நேற்றுவரை -என்
ஓவியங்கள் நீ என்பதால்

புடைவை கட்டிப் புகைப்படங்கள்
எடுக்கும் போது வலிக்கிறது
நேற்று வரை - என் புகைப்படங்கள்
உனக்காக என்பதால்

திருநாள்களில் வாழ்த்து மடல்கள்
வாங்கும் போது வலிக்கிறது
நேற்றுவரை - என் வாழ்த்து மடல்கள்
உனக்காக என்பதால்

துயரம் தீர்க்கத் துணை
தேடும் போது வலிக்கிறது
நேற்றுவரை - என் துணை
நீ என்பதால்

வலிக்கும் போதெல்லாம்
உள்ளம் நிரம்பி
கோபப்படுகின்றேன்,
என்றுமே - என் வலிகள்
நீ என்பதால்..

தடம் புரண்ட-என்
வாழ்வின் தடங்கல் நீ என்பதால்...
அறியாமல் போன-என்
தவறுகளின் தடையங்கள்
நீ என்பதால்...



**தியா,**
**தீவகம்.**

# எதிர்த்து நில்



மனித நேயத்தை காணவில்லை
மண்ணுக்குள் புதைந்து விட்டதா?
விபத்து கண்முன்னே நடக்க
விலகிச் செல்கிறார்கள்
வன்புணர்வுகள் கண்முன்னே நடக்க
கடந்து செல்கிறார்கள்

யுத்தத்தால் இழந்த பெற்றோரை
தேடுகின்ற பிள்ளைகள் நடுவே
காதலிக்கப் பெண் தேடுகின்ற ஆண்களும்
அழகுக் கலைகளில் ஆர்வம் காட்டும்
பெண்களுமே இவ்வுலகில் உள்ளனர்

விழித்தெழு வீர உணர்வுடன்
தவறைத் தட்டிக்கேள்!
மதிப்பவர்களுக்கு மதிப்புக் கொடு
மிதிப்பவர்களை மிதித்து நட
எதிர்த்து நில் எதிரியென்ன
எமனைக் கூட வென்று விடுவாய்



**ர. தர்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மலையகத்தின் மௌனம் அதிருப்தியளிக்கிறது

கொழும்பு, ஓக. 18

இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைக்கான கோரிக்கைகள் சகல மட்டங்களிலும் அதிகரித்துவரும் நிலையில் மலையக அமைப்புகளின் மௌனம் அதிருப்தியளிக்கின்றது - என்று இலங்கை தேசிய தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர் லெட்சுமணன் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக வடக்கிலும், தமிழகத்திலும் அதிக முனைப்புகள் காட்டப்படுகின்றன. இதில் முஸ்லிம் மக்களின் நலன்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதில் முஸ்லிம் தலைவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

ஆனால், மலையகத் தலைமைகள் மாத்திரம் மேலதிக கொழுந்து, கிறீஸ் மனிதன் என்று எமது மக்களின் போக்கைத் திசை திருப் பிக்கொண்டு இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் நாம் எமது சமூகம் பற்றிய அழுத்தங்களை ஒழுங்காகக் கொடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பல்வேறு பேய்களை நினைத்து பயந்தே எமது சமூகம் தனது அடையாளத்தை இழந்துவிடும் அபாயம் உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் மலையகம் உள்ளடக்கப்படாவிட்டால் எந்தப் பேச்சுமே முழுமையடையாது. ஆனால், இன்றைய தலைமைகள் அனைத்தையும் மறந்துவிட்டன. மலையக மக்களின் பிரச்சினைகளை வெறுமனே மேலதிகக் கொழுந்தோடும், எதிரணிகளைத் தாக்குவதும், மக்களைக் குழப்புவதோடும் சம்பந்தப்பட்டவையாகவே அவர்கள் அடையாளப் படுத்துகிறார்கள்.

எமக்குரிய உரிமைகளை இலங்கை அரசிடம் கோருவதற்கு எமக்கு உரிமை உள்ளது. இதனை அரசு எதிர்ப்பதாக நாம் விளங்கிக் கொள்ளக்கூடாது.

எனவே, மலையகத் தமிழர்களின் தீர்வுக்கான கோரிக்கைகளை காலம் தாழ்த்தாது நாம் மேற்கொள்ளவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மர்ம ஆசாமிகள் வதந்தி பரப்பிய ஐவர் கைது

கம்பளை, ஓக.18

கம்பளைப் பகுதியில் மர்ம ஆசாமிகள் பற்றி வதந்தி பரப்பியவர்கள் என்ற சந்தேகத்தில் கடந்த திங்கட்கிழமை ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.


கிறீஸ் பூதம் தொடர்பாக, வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்த அவர் கிழக்கு மாகாணத்தில் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## நிதி மோசடி: சந்தேக நபர் கைது

நாவலப்பிட்டி,ஓக.18

தோட்டத் தொழிலாளர் ஒருவரின் ஊழியர் சேமலாப நிதியை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவரை நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட நபர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து நாவலப்பிட்டி பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)



கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவதற்கென விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாண்டிருப்பில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு நடத்துகின்றார். (30)

## கடதாசிப் பைகளில் தேயிலைத் தூள்; புதிய நடைமுறை அமுலில்

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பொலித்தீன் பைகள் மூலம் வழங்கப்படுகின்ற தேயிலைத் தூளைக் கடந்த 5 மாத காலமாக கடதாசிப் பொதிகளில் வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை கெலிவத்தைத் தோட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை மூலமாக ஒவ்வொரு வருடமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சுமார் 5000 பொலிதீன் பைகள் மூலம் வழங்கப்படுகின்ற தேயிலைத் தூளைக் கடதாசி பைகள் மூலமாக வழங்கப்படுவதால் தோட்டத்தில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாகக் கெலிவத்தை தோட்ட முகாமையாளர் ஸ்ரீகணேசன் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தோட்டங்களில் சுகாதார மேம்பாட்டை மேற்கொள்வதற்குத் தோட்ட மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். தாம் வாழுகின்ற சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும்.

அந்தவகையில், சூழலை மாசுபடுத்துவதில் பொலித்தீன் பாவனை முதலிடம் வகிக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் போஹாகாவத்தை, கெலிவத்த தோட்டத்தில் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் தோட்ட நிருவாகம் சுற்றாடல் குழுவொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக்குழு முதற்கட்டமாக கெலிவத்தைத் தோட்டப் பகுதியில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்தத் தோட்டத்திற்கு பொலித்தீன் மூலம் பொதி செய்யப்பட்ட பொருள்கள் கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## இனந்தெரியாத நபரின் தாக்குதலில் பெண் படுகாயம்

மட்டக்களப்பு,ஓக.18

இனந்தெரியாத நபரொருவரின் தாக்குதலில் படுகாயமடைந்த பெண்ணொருவர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஊரணி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

ஊரணி பிரதேசத்தில் தனிமையில் இருந்த இந்தப் பெண்ணை இனந்தெரியாத நபர் ஒருவர் கத்தியால் குத்தியும் வெட்டியும் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பனங் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் திருமலையில்

திருகோணமலை, ஓக. 18

திருகோணமலை மாவட்டத்தில் பனங் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் இரண்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் சபைத் தலைவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் வாழையூற்றுக் கிராமத்திலும், சமுர்த்திச் சபையின் அனுசரணையில் சிங்கபுரம் கிராமத்திலும் இந்த நிலையங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் பணியைத் துரிதப்படுத்தும் வகையிலேயே இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு பயிற்சி நிலையங்களில் மூவின மக்களும் பயிற்சியாளராக இணைந்துள்ளனர். இந்த வருடம் 2 ஆயிரத்துக்கும் அதிகமான உற்பத்தியாளர்களை இணைக்கும் நோக்கில் சபை செயற்பட்டு வருகின்றது- என்றார். (ச-14)

## மர்ம மனிதர்கள் தொடர்பான அறிக்கை; ஜனாதிபதியிடம் கையளிக்கத் தீர்மானம்

மட்டக்களப்பு,ஓக.18

கிழக்கு மாகாணத்தில் மர்ம மனிதர்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சநிலை தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிக்க கிழக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.ஜவாஹிர்சாலி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது மர்ம மனிதர்கள் தொடர்பான விடயம் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தொடர்பான விரிவான அறிக்கை யொன்றை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மர்ம மனிதர்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து நடத்தும் பொதுக் கூட்டங்களை கிழக்கு மாகாண சபையின் தலைமை மற்றும் அதன் உறுப்பினர்கள் புறக்கணிப்பது தொடர்பிலும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## தற்போதைய பதற்ற நிலைமையால் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது

நுவரெலியா,ஓக.18

மலையகப் பகுதிகளில் தற்போது தோன்றியுள்ள பதற்ற நிலை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல் விக்கு எவ் விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் உள்ளது என்பதை ஆசிரியர்களும், பெற்றோரும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி யின் தலைவி திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது பெருந்தோட்டப் பகுதிகளில் மர்ம மனிதர்களின் பேரால் எழுந்துள்ள பதற்றம் காரணமாக தொழிலாளர்களின் அன்றாடவாழ்வு முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இது அவர்களோடு மாத்திரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. குறிப்பாக 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களினதும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களினதும் கற்றல் நடவடிக்கைகளை இது பெரிதும் பாதித்துள்ளது.

தொழிலாளர்கள் பயம் காரணமாக நேரத்தோடு நித் திரைக்குச் செல்வதால் மாணவர்களின் இரவுநேரக் கல்வி பாதிக்கப்படுவதுடன், மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதிலும் தடங்கலைத் தோற்றுவித்திருக்கிறது.

இதன் பாதிப்பு மாணவர் களின் பரீட்சை முடிவுகளை எவ் விதத்திலும் பாதிக்காமலிருப்பதற்கு பாடசாலையில் ஆசிரியர்களும், வீட்டில் பெற்றோரும் விசேட கவனமெடுக்க வேண்டும். அல்லது அர்த்தமற்ற இந்த வதந்திகளினால் மாண வர் களின் ஒட்டுமொத்த எதிர் காலமுமே பாதிக்கப்பட்டு விடும் என்பதைப் பெற்றோர் உணர வேண்டும்என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 ஓகஸ்ட் 2011 விய

## தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப் பேற்கலாம். காலை நேரத்தில் கசப்பான அனுபவம் ஒன்றை சந்திக்கலாம். முக்கியமான பொருள் ஒன்றை எங்காவது மறதியாக வைத்து விட்டுத் தேடலாம். உடன் பணிபுரிவோரை பரிகாசம் செய்து பேசுவதைத் தவிர்க்கலாம். நீங் கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**இடபம்:**
நண்பர்கள் வட்டம் விரிவடையும். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சொந்த பந்தங்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். சுகமான அனுபவம் உண்டு.

**மிதுனம்:**
எதிர்காலம் தொடர்பான விடயங்களில் ஈடுபடுவீர் கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட் டிற்குச் செல்லலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். வெற்றிகரமான நாள்.

**கடகம்:**
இரு நாள்களுக்கு முன், இடைநடுவில் விட்ட பணி ஒன்றை இன்று செய்வீர்கள். குல தெய்வ வழிபாடு களில் நாட்டம் செல்லும். உறவுப் பெண்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் குறை சொல் லாத வகையில் எந்த வேலையையும் செய்ய முற்படுவீர்கள். அயலாருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீண்டிக்கலாம்.

**சிங்கம்:**
சில வாய்ப்புகளை வேண்டாம் என ஒதுக்கி விட்டு பின்னர் அதற்காக வருத்தம் அ்டைவீர்கள். வெளி யூர்களில் இருக்கும் சிலருடன் தொலைபேசியில் பேசலாம். எதிர்பாராத தண்டச் செலவு ஒன்றால் அவ திப்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவை எதிர்கொள்ளலாம். பயணங்களில் தடை, தாமதம் நேரும்.

**கன்னி:**
எந்த வேலையையும் பிறகு என தள்ளிவைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். வெளிநாட்டுத் தொடர்பு உடையவர்கள் அனுகூலமான செய்தியைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத நண்பர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**துலாம்:**
சஞ்சலங்கள் விலகி சந்தோஷம் அதிகரிக்கும் நாள். சிலர் மூலம் உங்களின் தேவை ஒன்று நிறைவேறலாம். வீட்டில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் சூழ்நிலை உருவாகும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று பெருமை அடைவர். உங்களின் குடும்ப பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**விருச்சிகம்:**
எப்படியும் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்றில் திடீரென தடை ஏற்படலாம். சோர்வு,சோம்பல் அதிகரிக்கும். உறவினர்கள் சிலர் உங்களின் மனம் புண்படும் வகையில் பேசலாம். தொழில் ரீதியாக மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என கவலை அடையலாம்.

**தனுசு:**
மாமன், மைத்துனர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டு. தொல்லையாக இருந்தாலும் அதை சகித்துக் கொண்டு சில காரியங்களைச் செய்யலாம். தர்ம, புண்ணிய காரியங்களுக்காகச் செலவு செய்வீர்கள். சக ஊழியர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். சிலருக்கு அவசர உதவி செய்ய நேரிடலாம்.

**மகரம்:**
விரயங்களைக் குறைத்து எந்த விடயத்திலும் சிக்கனமாக செயற்படுவீர்கள். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அடையும் வாய்ப்பு உருவாகும். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். தவறு என தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள். இனிய அனுபவம் உண்டு.

**கும்பம்:**
உங்களை விமர்சித்துக் கொண்டே இருந்த ஒருவர் இன்று பாராட்டலாம். உறவினர்கள் மத்தியில் ஏற் பட்ட பிரச்னைகளை நீங்கள் தலையிட்டு தீர்த்து வைப் பீர்கள். சக ஊழியர்களுக்காக வாங்கிக் கொடுத்த கடன் பாக்கி ஒன்று திரும்பி வரலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக் காகக் காத்திருக்கலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**மீனம்:**
புதியவர்கள் சிலர் உங்களைத் தேடிவரலாம். பெற்றோர் வழியில் உருவான மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். நினைத்து பார்க்காத ஒரு காரியம் நடக்கலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். பெண்களால் சந்தோஷம் பெறலாம்.

# நாதியற்ற
## மீளக்குடியமர அ
## பச்சிலைப்பள்ளி ம

**2000.**03.26 நள்ளிரவு ஆழ்ந்த உறக் கத்திலிருந்த வேளையில் திடீரெனப் பச்சி லைப்பள்ளி மக்களின் காதுகளைக் கிழித்தன துப்பாக்கிவேட்டுச் சத்தங்கள். தொடர்ந்து நாலாபுறமும் வீழ்ந்த எறிகணைகள் பெருஞ்சத் தத்துடன் வெடித்தன. அதிர்ந்து போன மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடமுடியாமல் ஏதோ ஓரி டத்தில், இரவு முழுவதும் உயிரைக் கையில் பிடித்தபடி தங்கியிருந்தனர்.

விடிந்தும் குண்டுச் சத்தங்கள் ஓயாததால் பாதுகாப்புத்தேடி அருகில் உள்ள ஆலயங்களில் மக்கள் தஞ்சமடைந்தனர். முற்பகல் 10 மணிக்கு சத்தங்கள் ஓயத் தொடங்கின. என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் குடும்பம் குடும்ப மாக ஏ-9 வீதிக்கு வந்த மக்கள் கால்நடையாக சாவகச்சேரி நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

### இடம்பெயர்வு

அங்கிருந்து தமது உறவினர், நண்பர்கள் வீடுகள் தேடியும் ஏனைய தற்காலிக இடங் களைத் தேடியும் சென்றனர். அவசரத்தில் தமது உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் மக்கள் எல்லோரும் குறியாக இருந்தனரே தவிர தமது சொத்துக்களையும் வருமானம் தரும் முதல்களை யும் பாதுகாக்க அவர்கள் முனையவில்லை. பட்டி களில் கட்டப்பட்டிருந்த ஆடு, மாடு களையும், கூடுகளில் அடைக்கப்பட்டிருந்த கோழிகளை யும் கைவிட்டு இடம்பெயர்ந்தனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதிகளான கச்சார்வெளி, செல்வபுரம், வேம்பொடுகேணி, நவுணவெளி, இத்தாவில், சதாபுரம், அம்பளா வளை, இந்திராபுரம், முகமாலை, பொந்தர் குடி யிருப்பு, மடத்தடி, கிளாலி போன்ற கிராம மக்க ளுடன் எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, கரம்பகம் ஆகிய கிராம மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த மக்கள் தமது சொந்தக் குடியிருப்புக் களை இழந்து 11 வருடங்களுக்கு மேலாகியும் அவற்றின் தாக்கம் இன்றும் பல குடும்பங்களின் மனதிலிருந்து மறையவுமில்லை; அவர்கள் திரும்பக்குடியமர அனுமதிக்கப்படவும் இல்லை.

இது பலருக்குப் பழைய கதையாக இருந்த போதிலும், இந்தப் பகுதி மக்களுக்கு வாழ் வாதாரப் பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோரில் 95 சதவீத மானோர் இன்றுவரை உறவினர், நண்பர்கள் வீடு களிலும் வாடகை வீடுகளிலுமே தங்கி யிருக்கின் றனர். அவர்களின் முழு எண்ணமும் மீள்குடிய மர்வுக்கான அனுமதி கிடைத்தவுடன் தமது இருப்பிடங்களுக்குச் சென்று விடவேண்டும் என்பதுதான்.

### வாழ்விழந்த பூமி

இந்தப் பகுதியில் 800க்கு மேற்பட்ட குடி யிருப்புக்கள் முன்னர் இருந்தன. ஆனால், இன்று அந்தப் பகுதிகளில் ஒரு கொட்டில் இருந்ததற்கான அடையாளம் கூடக்கிடையாது. இந்த நிலையிலும் தமது காணியில் மீண்டும் குடியமர ஆவலாய் இருக்கும் பச்சிலைப்பள்ளி மக்களுக்கு தமது மீள்குடியமர்வு சாத்தியமாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்தே அவர் களுக்கு இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

வலி-வடக்குப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்த காலம் தொடக்கம் அண்மையில் மீளக்குடிய மர்த்தப்பட்ட காலம்வரை அந்தப் பிரதேசத்துக் கென நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருக் கிறார். அவர் அந்த மக்களின் மீள்குடியமர்வுக் காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.

பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட பின்னர் - கால் நூற்றாண்டு முயற்சிகளின் பயனாக - இப்போது வலி. வடக்கில் மெல்ல மெல்ல மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுகிறார்கள். நீண்டகாலமாக அதி உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த வலி. வடக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வுக்காக நாடாளுமன்றத்திலும், வெளிநாடுகளிலும் தொடர்ந்து குரல் கொடுக்கப்பட்டு வந்தது.

மக்களின் அவலங்களை முன்வைத்து நீதி மன்றின் மூலமும்கூட போராட்டங்கள் முன் னெடுக்கப்பட்டன. அதன் பயனாக இன்று அங்கு மக்கள் மீளக்குடியமரக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், இந்த வாய்ப்புக்களோ ஆதரவோ பச்சிலைப்பள்ளி மக்களுக்குக் கிடைப்ப தில்லை. அவர்களின் மீள்குடியமர்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ, அமைச்சர்களோ அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. அதிகாரிகளுக்கோ அவர்கள் ஒரு பொருட்டே அல்லர்.

### கவனிக்க யாருமில்லை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, புலோப் பளை, முகமாலை, இயக்கச்சி ஆகிய உப அலு வலகங்களைக் கொண்டது. இவ்வொவ்வொரு பிரிவுகளில் இருந்தும் 3 உறுப்பினர்கள் வீதம் 9



உறுப்பினர்கள் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் கடந்த உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட மூன்று அரசி கட்சிகளும் பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்திலிருநது தலா ஒரு வேட்பாளரை மட்டுமே போட்டியிட வைத்தன.

இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீளக்குடிய மர்த்த பிரதேசசபை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக மூன்று கட்சி வேட்பாளர்களும் வாக் குறுதிகள் வழங்கியிருந்தனர். ஆனால் அவர்களில் எவர் ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தப் பிரசேத் தைச் சேர்ந்த மக்கள் வவுனியா, யாழ்ப்பாணம், கிளி நொச்சி மாவட்டங்களில் பரந்து தங்கியுள்ளனர். இடம் பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்வதற்குரிய வாகன வசதி இந்த முறை தேர்தல் திணைக்களத்தினால் செய்து கொடுக்கப்படவில்லை. தேர்தல் தினத்தன்று போக்குவரத்து குறைவாக காணப் பட்டதாலும் தமது மீள்குடியமர்வில் எந்த ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அக்கறை காட்டுவதில்லை என்ற விரக்தியாலும் உள்ளூராட்சித் தேர்தலைப் பொருட்டாகக் கருதுவதில்லை என்று இந்தப் பிரதேச மக்கள் முடிவு செய்திருந்தமையாலும் தேர்தலில் இந்தப் பகுதி மக்களின் வாக்களிப்பு மிகக் குறைவடைந் திருந்தது. இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த வேட்பாளர் எவரும் தேர்தலில் வெற்றிபெறவில்லை.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த முக மாலை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட எவரும் பிர தேச சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டமையால், தமக்கான குறைந்த பட்சப் பிரதி நிதித்துவம்கூட இல்லை என்று இந்தப் பிரதேச மக்கள் இப்போது கவலைப்பட ஆரம் பித்துள்ளனர்.

பிரதேச சபைக்குத் தமது பிரதிநிதி எவரும் தெரிவு செய்யப்படாததால் சபை மூலம் தமது மீள்குடியமர்வுக்கான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுப் பணிகள் துரிதப்படுத் தப்படும் என்ற மக்களின் கனவும் தகர்ந்துள்ளது.

### காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட அரச அலு வலகங்களின் நடமாடும் சேவையில், பச்சிலைப் பள்ளி மேற்குப் பிரதேச மக்களால் மீள்குடியமர்வுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அப்போது "இன்னும் எட்டு மாதங் களில் பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு பூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றவர்கள்
## ... அனுமதிக்கப்படாத
## ...ரி மக்களின் அவலம்




செய்யப்படும்'' என்று உறுதியளிக்கப்பட்டது.

நடமாடும் சேவையில் தெரிவிக்கப்பட்டது போன்று எட்டு மாதங்கள் கடந்த போதிலும் இதுவரை இந்தப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றுவதற்கான நடவடிக்கை கூட மேற்கொள்ளப்படவில்லை. நடமாடும் சேவையில் மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தது பல அதிகாரிகளுக்கு கோபம் ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஏனெனில் அதன் பின்னர் அரச அலுவலகங்களுக்குச் சென்ற பச்சிலைப் பள்ளி மக்களில் பலர் தாம் புறக்கணிக்கப்பட்டு, வேண்டும் என்றே நிராகரிக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்டு நடத்தப் பட்டனர் என்று *உதயன்* பத்திரிகையிடம் குறைப்பட்டனர்.

பளைப் பிரதேச மக்களின் நலன்களைக் கவனிக்கவென அரச நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நியமிக் கப்பட்டுள்ளனர் என்று அறி விக்கப்பட்டது. ஆனால், அவர் கள் மீளக் குடியமர்ந்த மக்களின் நலனில் அக்கறை கொண் டுள்ளார்களே தவிர இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்தும் எந்தவொரு முன்னெடுப்பையும் செய்கிறார் கள் இல்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

### பழிவாங்கப்படும் மக்கள்

இதற்கிடையே, உள்ளூராட்சித் தேர்தலின்போது பச்சி லைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் வாக்களிக்காது விட் டமை குறித்து அரசியல் கட்சிகள் ஆத்திரமடைந்துள்ளன என்ற அச்சமும் மக்களிடம் காணப்படுகிறது. தேர்தலில் வாக்களிக்க அக்கறை இல்லாதவர்களின் மீள்குடியமர்வில் ஏன் அக்கறை செலுத்த வேண்டுமென அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் நேரடியாகவே தம்மிடம் கேள்வி எழுப்பினர் என்று மக்கள் கூறுகின்றனர்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நாட்டுக்குள் இடம் பெயர்ந்த அனைத்துக் குடியிருப்பாளர்களும் மீளக்குடிய மர்த்தப்படுவர் என அரசு அறிவித்துள்ளது. இது எவ்வளவு தூரம் உண்மையென்பது இன்னும் நான்கு மாதங்களில் தெரிந்துவிடும். இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் கேட்ட போது தமக்கு அவ்வாறான கடிதங்கள் எதுவும் அரசிடம் இருந்து கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் பச்சி லைப்பள்ளிப் பிரதேசம் இன்றும் போர்க் களம் போன்றே காணப்படுகிறது. பளை, ஆனைவிழுந்தான் சந்தி தொடக் கம் எழுதுமட்டுவாழ் சந்தி வரையான ஏ-9 வீதியின் இரு மருங்கும் பற்றைகளாலும் செடிகளாலும் மூடப்பட்டுக் காடு மண்டிக் கிடக்கிறது.

பச்சிலைப்பள்ளிப் பகுதிக்கென தனி யான பிரதேச செயலகம், தனியான பிரதேச சபை அலு வலகம் போன்றவை உள்ளன. இவற்றில் பணியாற்றும் உயர் அதிகாரிகள் உட்படப் பெரும் எண்ணிக்கை யான உத்தியோகத்தர்களும் இந்த வழியாகவே அலுவலகங்களுக்குச் செல்கின்றனர். இவர் களைவிட கிளிநொச்சி மாவட்ட திணைக் கள அதிகாரிகள் இந்தப் பகுதிக்கு பொறுப் பாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், சட்ட மாகாண அமைச்சுக்களினதும் திணைக் களங்களி னதும் உயர் அதிகாரிகள் போன்றோரும் தெற்குக்கும் வடக்குக்கும் இடையே ஒவ் வொரு முறையும் இந்தப் பகுதிகளைக் கடந்தே பயணிக்கின்றனர்.

### உருகாத மனங்கள்

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது பிரசாரத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஏனைய கட்சித் தலைவர்கள் அனைவரும் ஏ-9 வீதியில் பச்சிலைப் பள்ளி மேற்கு ஊடாகவே தமது வாகனங் களில் விரைந்தனர்.

ஆனால், ஒருவருடைய மனதிலாவது இந்தப் பகுதியில் மக்கள் ஏன் மீளக்குடிய மரவில்லை, வீதியோரங்கள் துப்புரவு செய்யப்படாமல் ஏன் கிடக்கின்றன என்ற கேள்விகள் வரவேயில்லை. மக்கள் பிரச் சினைகளை அரசியல்வாதிகளும் அதிகாரி களும் எப்படி அணுகுகிறார்கள் என்பதற் கான உதாரணமான இந்த விடயம் மிக வேதனைக்குரியது.

### அழுத்தமும் குடியமர்வும்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் மேற் குப் புற எல்லையான எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் தேர்தல் வேளையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட் டனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஒன்றுதிரண்டு மேற்கொண்ட முயற்சி யின் பயனாகவே அந்த மீள்குடியமர்வு கூடச் சாத்தியமானது. அந்தப் பகுதியைச் சேர்ந்த 90 சதவீதமான மக்கள் தென்ம ராட்சிப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் வசித்து வந்ததால், தமது மீள்குடியமர்வுக் கான அழுத்தங்களை அவர்களால் அதிகாரி களுக்குத் தொடர்ந்து கொடுக்க முடிந்தது.

அந்த மக்கள் பிரதி வாரமும் பிரதேச செயலகத்துக்கு வந்து கிராம அலுவல ருக்கும் பிரதேச செயலருக்கும் அழுத் தம் கொடுத்து வந்துள்ளனர். அதுபற்றி அரச அதிபருக்கு அடிக்கடி அறிவிக்கப்பட்ட தால் அவர்களின் கோரிக்கை பல இடங்களுக் கும் தொடர்ச்சியாகத் தெரிவிக் கப்பட்டு வந்தது. மேலும் இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து மீள்குடி யமர்வு சங்கம் ஒன்றை அமைத்துப் போராட் டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யும் மேற்கொண்டனர்.

இவர்களின் இத்தகைய தொடர்ச்சியான நடவடிக்கைகளே அங்குள்ள 257 குடும் பங்களையும் மீள்குடியமர்த்த வழி ஏற்ப டுத்தியது.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத் தைச் சேர்ந்த 800 இற்கு மேற்பட்ட குடும்பங்

**தென்னவன்**

களில் 90 சதவீதமானவை பிரதேசத்துக்கு வெளியிலேயே வசித்து வருகின்றன. இத னால் அனைவரும் அடிக்கடி பிரதேச செய லகத்துக்கு வந்துபோவது சாத்தியமில்லை என்று குடியிருப்பாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

### போராட்டம் மட்டுமே வழி

தமது மீள்குடியமர்வை உரிய தரப்பி னருக்கு வலியுறுத்தும் நோக்குடன் ''பச்சி லைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியம்'' என்னும் அமைப்பை மக்கள் அமைத்தனர். அந்த அமைப்பினரும் நீண்டகாலமாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அழுத்தங்களைக் கொடுத் தனர். ஆனால் எதுவித முன்னேற்றமும் இது வரை ஏற்படவில்லை.

இவர்களின் முயற்சிகள் தொடர் நடவடிக் கைகள் எல்லாம் பயனற்றுப் போனதால் இப் போது இந்தப் பகுதி மக்கள் விரக்தி அடைந் துள்ளனர். அடுத்த கட்டமாக மறியல், ஆர்ப் பாட்டம், பேரணி என்று போராட்டங்களை முன் னெடுப்பதைத் தவிர, அந்த மக்களுக்கு வேறு தெரிவுகள் எதுவுமில்லை.

# குரு பரம்பரையைக் கொண்டாடுவோம்



வைணவ ஆசார்யர்களில் இரத்தின மாலையில் நடுநாயகமான பதக்கம் போன்றவர் ஸ்ரீ ராமானுஜர். தமது சீடர் பரம்பரையால் இந்தியா முழுவதும் கருணை தவழும் நீ வைணவநெறி பரப் பிய அருளாளர். அவரே ஆச்சார்ய லட் சணம் பூரணமாக உடையவர் என்பது வைணவர் கொள்கை.

அவரை வீராணம் ஏரிக்கு உவமை யாகச் சொல்வது உண்டு. கேள்விப்பட்ட துண்டா? வீரநாராயணபுரம் ஏரி என்பது தான் இன்று வீராணம் ஏரி இன்று ஆகிவிட்டது. அதில் எழுபத்து நான்கு மதகுகள் உண்டு. அதன் வழி நீர் பெருகிப் பல ஆயிரம் ஏக்கர் நிலத்துக்குப் பாய வழி உண்டு. அந்த ஏரி நாராயணன் பெயரால் அமைந்தது. அந்த வீராணம் ஏரி போன்றவர் ஸ்ரீராமானுஜர். அது தண்ணீர் சேகரித்த மாதிரி நாராயணன் அருளைச் சேகரித்தவர் அவர். அந்த ஏரியில் எழுபத்து நான்கு மதகுகள் வழி நீர் பெருக்குவது போலே நாராயணன் அருளை எழுபத்து நான்கு சிம்மாசன அதிபதிகள் என்ற தம் சீடர் பரம்பரையால் பெருக்கியவர் ஸ்ரீ ராமானுஜர்.

வைணவர்கள் குரு பாரம்பரியத்தை வெகுவாகப் பாராட்டு வார்கள். ஒரு குரு மூலமாக மந்திர உபதேசம் பெறுவதும் அவர் காலடிகளைப் பற்றிக்கொண்டே மேலேமேலே போய், பரம பதத்தில் உள்ள லக்ஷ்மி நாராயணர் கால்களைப் பற்றுவது வைணவர் மரபு. அதனால்தான் '' லக்ஷ்மீ நாராயண ஸமாரம் பாம்'' என்று தொடங்கும் அவர்கள் குரு வணக்கம். 'அஸ்ம தாச்சார்ய பர்யந்தாம்' என்று எதிரில் உள்ள குருவை வணங்கு வதாக முடியும். இப்படி குரு மூலம் வைகுந்தம் பெறும் தீர்க்க மான வழியே நல்லது.

இப்போது கண்ட கண்ட குருமார்கள் புற்றீசல் போல உரு வாகி விட்டார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாமியாரும் தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்கிறார் கள். மக்களும் அவரையே கடவுளாக நினைத்து அவர்கள் கால்களைக் கழுவிக் குடிக்கிறார்கள். அவரே மோட்சம் போவாரா என்று சந்தேகம். அவரை நம்பும் சீடர்கள் எப்படிப் போகமுடியும்? யோசிக்க வேண்டாமா?

ஆனால் குரு பரம்பரை எப்படித் தெரியுமோ? பரம்பரை பரம்பரையாக வந்த குருமார்களைப் பற்றினால் சீடன் உடன்வரா மல் குரு வைகுந்தம் புகமாட்டார் என்பது சாஸ்திரம்.

அந்தக் குரு வராமல் சீடர் வைகுந்தம் புகமாட்டார். இப்படி குருவின் உறுதியால் சீடனுக்கு வைகுந்தம் உறுதி என்கிறது ஸ்ரீ வைணவம். ஒவ்வொரு குருவும் தமது கோஷ்டியை, சீடர்களைக் கடைத்தேற்றும் பொறுப்பு உடையவர் ஆகிறார். ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன்.

ஸ்ரீ ராமானுஜர் இராமாயணக் கதை உபன்யாசமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். வேடராக இருந்து சீடராக மாறிய உறங்காவில்லி என்பவர் கதை கேட்டுக் கொண்டிருந்தார். விபீஷண சரணாகதி பகுதி நடந்து கொண்டிருந்தது. தகுதி உடைய விபீக்ஷணன் இராமனைச் சரணாகதி அடைந்ததும் சேர்க்கலாமா கூடாதா என்று பெரிய சர்ச்சை நடந்த இடத்தை ராமானுஜர் சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்கு ஸ்ரீ இராமர் கோஷ்டியில் இடம் உண்டா இல்லையா என்று அனுமன், சுக்ரீவன், நீலன் எல்லோரும் பயங்கரமாகச் சர்ச்சை செய்வதை ஸ்ரீ ராமானுஜர் உருக்கமாக விளக்கினார்.

பட்டென்று உறங்காவில்லி எழுந்து கொண்டார். மரியாதைக் குறைவாக நடப்பவர் அல்லர் அவர். அதனால் ''ஏன் எழுந்தீர்'' என்றார் ராமானுஜர். ''ஆஹா... இத்தனை தகுதி உடைய விபீஷ்ணனுக்கே பெருமாள் பக்கம் சேரத் தகுதி உண்டா இல்லையா என்று சர்ச்சை நடக்கிறதே... அப்படியானால் வைகுந்தத்தில் என்னைப் போன்ற தகுதி குறைந்தவனுக்கு எப்படி இடம் கிடைக்கும்? என்று சந்தேகம் வந்து புறப்பட்டு விட்டேன்'' என்று கண்ணீரை விட்டார்.

''ஓ... அது ராமர் கோஷ்டி... அங்கு தகுதி பார்ப்பார்கள். இது ராமானுஜர் கோஷ்டி. இங்கு எல்லோருக்கும் இடம் உண்டு. உம்மோடு சேர்ந்துதான் நாம் வைகுந்தம் போவோம். எனக்கு வைகுந்தத்தில் இடம் உண்டு என்றால் உமக்கும் கண்டிப்பாக உண்டு. நீர் இல்லாமல் யாம் போகமாட்டோம். நான் இல்லாமல் என் குரு வைகுந்தம் போகமாட்டார். அவர் இல்லாமல் அவர் குரு போகமாட்டார். எனவே நாம் சங்கிலி போலே போய்ச் சேருவோம்'' என்றார் ராமானுஜர்.

திடீர்ச் சாமியார்கள் ஆபத்தானவர்கள். வாழையடி வாழை யாய் வரும் குரு பரம்பரை பாதுகாப்பானது... புரிகிறதா? சீடனது முன்னேற்றம் ஆன்மிகத் தகுதி பற்றி குரு எப்போதும் கவலைப் படவேண்டும். அவன் ஆன்மிகத்தில் முன்னேறாத போது தானும் அதற்குப் பொறுப்பேற்கவேண்டும். சீடன் அஞ் ஞானியாகவே இருந்தால் தாமும் சேர்ந்து தவறுசெய்கிறோம் என்று குரு உணரவேண்டும்.

''குரு சீடனது ஆன்மாவைப் பற்றி எப்போதும் அக்கறை காட்டவேண்டும். சீடனோ குருவின் சரீர நன்மை குறித்து எப்போதும் கவனமாக இருக்கவேண்டும்''

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

U.L.M.சாஜித்,
கமு/அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.



பரீட்சை இலக்கம்: 15

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ | **வினாத்தாள்-II** | நேரம்: 45 நிமிடங்கள்

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**✱ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

அது ஒரு பெரிய காடு. சிம்தான் அங்குமிங்கும் பார்த்தான். ஒருவரையும் காண வில்லை. சுற்றுலா வந்த நண்பர்களைத் தவறவிட்டு விட்டேன்.என்ன செய்வது என்று ஆற அமர அவனால் சிந்திக்க முடியவில்லை. கண்ணும் கருத்துமாக வளர்த்த பெற்றோர் மட்டுமே. அவ்ன் கண்முன் தோன்றினர். அவன்கால்போன போக்கில் நடக்கிறான். அப்போது தூரத்தே சிம்தான்! சிம்தான்! என்றுகூப்பிடும் சத்தம் எதிரொலித்தது. திரும்பிப்பார்த்தான் வகுப்பாசிரியர் பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தார். சிம்தான் வகுப்பாசிரியரைக் கண்டதும் அவரை நோக்கி ஓடினான். வகுப்பாசிரியர் சிம்தானை கட்டி தழுவி முத்தமிட்டார்.

**(01)** 01) அங்குமிங்கும் என்பதன் கருத்து என்ன?
..................................................................

02) இங்குள்ள பெயர் அடைமொழிச்சொல் ஒன்று தருக.
..................................................................

03) இங்குள்ள இடப்பெயர்ச்சொல் யாது?
..................................................................

04) அவன் கால் போன போக்கில் நடக்கிறான் என்பதனை பெண்பால் வாக்கியமாக எழுதுக.
..................................................................

05) கட்டித்தழுவி என்பதன் பொருள் என்ன?
..................................................................

06) இங்குள்ள உயர்திணை பலர்பால் பெயர்ச்சொல் எது?
..................................................................

07) முன்னே என்பதன் எதிர்க்கருத்து என்ன?
..................................................................

08) கண் என்பதற்கு சமனான சொல் ஒன்று தருக.
..................................................................

09) இங்குள்ள இணைமொழிச்சொல் ஒன்று தருக.
..................................................................

10) தூரத்தே பதற்றத்துடன் வகுப்பாசிரியர் வந்துகொண்டிருந்தார் என்பதில் உள்ள எழுவாய் எது?
..................................................................

**(02)** பின்வரும் சுருக்கக் குறியீட்டுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.
1) இ.பெ.கூ - ................. 2) இ.ஒ.கூ - .................

**(03)** பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியினை எழுதுக.
1) நற்புகழ் மங்குவதில்லை.
..................................................................
2) திருப்திப்படாத மனம்.
..................................................................

**(04)** பின்வரும் பாடலில் இடம்பெற்றுள்ள உவமானத்தைக் கோட்டில் எழுதுக.
கன்றை நினைந்தே உள்ளம் பாலைப்போல நிலவு வானில்
கசியும் பசுவை போல பவனி வரப் போகுது
நன்றி புரிந்தோர் தம்மை காலக்கடல் அலைக் கைதடிக்
நாமும் நினைக்க வேண்டும் குதூகலிக்கப் போகுது
..................................................................

**(05)** தரப்படும் சொற்களில் வரவேண்டிய மிகப் பொருத்தமான எழுத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.
(லை, ழ, ல, ழை, ள, லை, ல, ள்)

1) ம..... பெய்யும் கா......ங்களில் ஆற்றில் வெ.... ....ம் பெருகி ஓடும்.

**(06)** பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ் கருத்தை எழுதுக.
1) மம ஆச்சி - .................... 2) லிப்ப - ....................
3) மெயா மகே நந்தா - ....................

**(07)** பின்வரும் தமிழ் சொற்கள் குறிக்கும் சிங்களச் சொல்லை தமிழ் உச்சரிப்பில் எழுதுக.

1) ஆசிரியர் வகுப்பில் இருக்கிறார்.
..................................................................
2) மிளகாய்ச் செடி
..................................................................

**(08)** பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ் கருத்தை எழுதுக.
1) Vehicles ....................
2) Lightning ....................
3) I will come tomorrow ....................

**(09)** பின்வரும் தமிழ் சொற்களுக்கான ஆங்கிலப்பதத்தை எழுதுக.
1) பிறந்தநாள் வாழ்த்துக்கள் ..............................
2) ஆயத்தமாதல் ..............................

**(10)** மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

01) அண்மையில் கொண்டுவரப்பட்ட ஒலிபெருக்கி பாவனை தொடர்பான சட்டமூலம் பற்றி குறிப்பிடப்படும் மிகச் சரியான கூற்று,
1. இரவு 10 மணிக்கு பிறகு ஒலிபெருக்கியை பயன்படுத்தக்கூடாது.
2. காலை 6 மணி வரை ஒலிபெருக்கி பயன்படுத்தகூடாது.
3. மத தலங்களில் மட்டும் எந்தநேரமும் ஒலி பெருக்கியை பயன் படுத்தலாம்.
4. இரவு 10 மணி- காலை 6.00 மணி வரை ஒலிபெருக்கியை பயன்படுத்தக் கூடாது.

02) ஓரங்க நாடகம் தொடர்பான சரியான கூற்று,
1. முகபாவனை மூலம் செயற்பாடுகளை வெளிப்படுத்தல்.
2. பலரும் ஒரே நேரத்தில் நடிக்க வேண்டும்.
3. ஒருவரே பல குரல்களையும் வெளிப்படுத்தி நடிப்பார்.
4. பெண்கள் நடனத்தின் மூலம் தம் கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

03) பயிர்களை சேதமாக்கும் பிராணிகளில் நத்தையை உணவாகஉட்கொள்ளும் பிராணி,
1. பாம்பு 2. தவளை 3. செண்பகம் 4. ஓணான்

04) கானல் வாழைப்பூவின் நிறம் என்ன?
1. செம்மஞ்சள் 2. வெள்ளை
3. நீலம் 4. இளம் சிவப்பு

05) பின்வருவனவற்றில் கூர்மையான பார்வை உடைய பறவை அல்லாதது,
1. வெளவால் 2. கழுகு
3. ஆந்தை 4. மீன்கொத்தி

06) வெளிநாட்டுத் தபால்களை அஞ்சலில் இடும் பெட்டியின் நிறம்,
1. சிவப்பு 2. பச்சை
3. நீலம் 4. கறுப்பு

07) பொருள்களின் தரத்தை உறுதிப்படுத்தி வழங்கப்படும் (SLS) இலட்சினையில் காணப்படாத விடயம்,
1. காலாவதியாகும் திகதி. 2. நுகர்வோரின் பெயர்.
3. உற்பத்தி திகதி. 4. பொதி செய்யப்பட்ட பதார்த்த கட்டமைப்பு.

08) எமது நாட்டில் ஜனாதிபதி தேர்தல் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்?
1. 4 2. 5 3. 6 4. 7

09) எமது நாட்டில் பிரதமரை அழைக்கும்போது பயன்படுத்த தக்க சொல்,
1.அதிமேதகு 2. மாண்புமிகு 3. ஐயா 4. Sir

10) தண்டுத்துண்டங்களைக் கொண்டு புதிய கன்றுகளை பெற முடியாதது,
1. கரும்பு 2.மரவள்ளி
3. வாழை 4.செவ்வரத்தை

11) இலங்கையில் பின்வரும் போக்குவரத்து சாதனங்களுள் எச் சாதனம் அரசின் உடமையாக மட்டும் உள்ளது?
1. பேருந்து. 2. புகையிரதம். 3. கப்பல். 4. பாரவூர்தி.

12) பின்வருவனவற்றில் சார்க் நாடுகள் அமைப்பின் சின்னத்தைக் குறிப்பது

1. 
2. 
3. 

13) சிவப்பு, மஞ்சள், நீலம் போன்ற நிறங்களைச் சேர்த்து பெறப்படும் வர்ணம்,
1. வெள்ளை 2. கறுப்பு 3. பச்சை 4. ஊதா

14) இலங்கையில் நெல் பயிரிடப்படும் பிரதான போகங்களில் மகாபோகத் திற்குரிய காலம்,
1. நவம்பர்-பெப்ரவரி 2. ஜனவரி-மார்ச்
3. மே-செப்டம்பர் 4.செப்டம்பர்-ஜனவரி

15) தேசிய கீதம் இசைக்கப்படும்போது நிற்கவேண்டிய சரியான நிலை?






16) சிறிய சத்தத்தையும் கேட்கக்கூடிய ஆற்றல் உள்ள பிராணி அல்லாதது,
1. முயல் 2. மான். 3. எலி. 4. பூனை.

17) இலங்கையில் சூறாவளி ஏற்படுவதை முன்கூட்டியே அறிய உதவும் ரேடர் நிலையம் அமைந்துள்ள இடம் எது?
1. பாதுக்கை. 2.கொழும்பு.
3. திருகோணமலை. 4. கண்டி.

18) 2011 இல் வரவுள்ள பூரணை தினங்கள் எத்தனை?
1. 10 2. 11 3. 12 4. 13

**(11)** பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.
✱ மார்க்கோணி ✱ மாக்மில்லன் ✱ சிவப்பு
✱ நீலம் ✱ மைக்கல் அஞ்சலோ ✱ லியானாடோ டாவின்ஸி
✱ பச்சை ✱ வெள்ளை ✱ சனி

1) அதிக துணைக்கோள்களைக் கொண்ட கிரகம் .................. ஆகும்.
2) கறுப்பும் ........................யும் நடுநிலை வர்ணங்களாகும்.
3) இறுதித் தீர்ப்பு என்ற புகழ்பெற்ற ஓவியத்தை வரைந்தவர் .................. ஆவார்.
4) தேசப்படத்தில் மாகாண/ மாவட்ட எல்லைகளைக் காட்ட ........................ நிறம் பயன்படும்.
5) வானொலியை கண்டுபிடித்தவர் .................... ஆவார்.

**(12)** பின்வருவன எப்பிராணிகளின் அலகு என எழுதுக.

1) 
2) 
3) 

.......................... .......................... ..........................

**(13)** பின்வரும் பறவைகளின் பெயர்களை எழுதுக.

1) 
2) 
3) 

.......................... .......................... ..........................

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்துவார்களா கூத்தடிக்கும் இந்த கோமாளிகள்...!

''ஜிங்கி ஜிங்கி ஜிலுக்கு போட்டு ஜிலுஜிலுக்கிற ரவிக்கை போட்டு எங்கே நீயும் கிளம்பிப் போறாய் சொல்லு வேகமா. கூட நானும் பேசிக்கிட்டு கண்ணே போவமா.....''

என்ற பாடல் வரிகள் உச்சக்கட்டத் தொனியில் ஒலி பெருக்கி மூலமாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தன.

அரங்கின் கீழே சில இளைஞர்கள் பக்க வாத்தியங்களைப் போல் நடன மாடிக் கொண்டிருந்தனர். விசி லடிப்பும் காற்றலையை அதிரவைக்கும் கூச்சல் ஒலியும் மேடையைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்களின் பின்னணிப் பாட்டுக்குப் பஞ்சமே இல்லாத வகையில் குறிப்பிட்ட களியாட்ட நிகழ்வு அரங்கை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

ஏதோ தலைநகரின் நட்சத்திர விடுதி ஒன்றில் நடக்கும் களியாட்ட நிகழ்வு பற்றியோ அல்லது திரைப்படங்களில் சில கட்டங்களில் வரும் குத்துப் பாட்டுக் கட்டங்களைப் பற்றியோ அல்லது அண்மையில் திரைப்படத்தில் வெளியான களியாட்டப் பாட்டுக் கட்டம் பற்றியோ நான் உங்கள் முன் நேர்முக வர்ணனை செய்கின்றேன் என்று நீங்கள் எண்ணக்கூடும்.

அதுதான் இல்லை. அண்மையில் வடமராட்சியில் 750 பிர தான வீதியின் ஓரமாக இருக்கும் ஆல யம் ஒன்றின் இரவு நேரத் திருவிழா என்ற பெயரில் அரங்கேறிய களியாட்டக் கூத்தடிப்புப் பற்றியே உங்கள் முன் ஒப்புவித்தேன்.

இன்றைய கால கட்டம் பரீட்சைக் காலகட்டம். குறிப்பாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நாட்டின் பல பரீட்சை நிலையங்களில் இடம்பெற்று வருகின்றது.

இதில் யாழ். குடாநாட்டில் இருக்கும் பல்வேறு பரீட்சை நிலையங்களிலும் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகக் கனவுகளைத் தாங்கி பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர்.

சிறப்பான அடைவுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று தானும் தனது குடும்பமும் முன்னேற வேண்டும் என்ற விருப்புடன்- ஓர்மத்துடன் இரவு நேரங்களில் பரீட்சைக்குத் தயார் படுத்தல்களை மேற்கொள்கின்றனர்.

இந்த சூழ்நிலையில் ஒலி பெருக்கிகளில் உரத்த தொனியில் இத்தகைய ஆபாச அர்த்தங்களைத் தாங்கிய பாடல்களை ஒலிபரப்பிக் கூத்தடிப்புக்களை நடத்துவது சம்பந்தப்பட்ட மாணவர்களின் எதிர்கால கனவை வேரறுக்கும் செயல் என்பது ஏன் சம்பந்தப்பட்டவர்களின் எண்ணங்களில் தோன்றவில்லையே.

திருவிழா என்ற பெயரில் கூத்தடிப்புக்களை நடத்துபவர்களின் சிந்தனையில் இந்த விடயம் ஏன் உறைக்கவில்லை என்பதே இன்று கல்வியாளர்களின் சிந்தனையில் தோன்றும் விடை காணமுடியாத கேள்வி.

இன்றைய சூழ்நிலையில் போரால் சப்பித் துப்பப்பட்ட வாழ்க்கையுடன் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பஸ்களில் ஏற்றிச் சென்று அவர்களின் சொந்த இடங்களில் இறக்கி விட்டால் சரி மீள்குடியமர்வு முடிவடைந்துவிட்டது என்று அமைச்சர்களும் அதிகாரிகளும் கைவிரித்துள்ளனர்.

போர் இவர்களை இடைவிடாது துரத்தியதன் காரணமாக இவர்கள் போர் அரக்கனிடம் எல்லாவற்றையும் பறி கொடுத்துவிட்டனர்.

குறிப்பாக வடமராட்சி கிழக்கில் தற்போது மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வு இன்னும் இழுபறி நிலையிலேயே உள்ளது.

இவர்களுக்கு இராமாவில் முகாமில் வழங்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளும் தகரங்கள் மற்றும் தடிகளும் அவர்களின் வீட்டுத் தேவைகளைக் கூட நிறைவு செய்யக் கூடியனவாக இல்லை.

இவர்களுக்கு அரசு வழங்கும் நிவாரண உதவிகள் இன்னும் 6 மாதங்களுடன் வெற்றிகரமாக முடிவடைந்து விடும்.

இதன் பின்னர் போரால் பாதிக்கப்பட்டு பிடுங்கியெடுக்கப்பட்ட அவர்களின் வாழ்க்கையின் கதி என்ன என்பது வெறும் கேள்விக்குறியுடன் மட்டுமே நீளும்.

இதைவிட வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வும் இன்னும் சில மாதங்களில் வரப் போகின்ற மழையுடன் போராடும் சூழ்நிலையிலேயே அமையப்போகின்றது.

இந்த அச்சம் அவர்களைத் தொற்றிக் கொண்டுள்ளது. இவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டு 2 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவர்கள் குடியிருப்பதற்கான அடிப்படை வசதிகளே பூரணமாக ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை வேதனையளிக்கும் விடயமே.

தமிழர்களின் நிம்மதியான, கௌரவமான வாழ்வுக்கான போராட்டம் எதுவித பதிலும் இன்றி அவர்களின் வாழ்க்கையைப் பறித்து எடுத்து விட்டது. கை, கால் என இழக்கப்பட்ட செயற்கை அவயங்வங் களுடன் பல சிறார்கள் தமது எதிர்காலக் கனவுகளைப் பூர்த்தி செய்ய வசதியற்று கண்ணீர் வடியும் முகங்களுடன் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக் கின்றனர். மீண்டெழ முடியாது அல்லாடி வருகின்றனர்.

இவ்வாறு உங்கள் உறவுகள், உங்கள் உடன் பிறப்புக்கள் தத்தளித்துத் தவித்து வரும் நிலையில் இத்தகைய கூத்தடிப்புக்கள் தேவைதானா?

வெளி நாடுகளில் உங்கள் உறவுகள் உதிரத்தை வியர்வையாக்கி சேர்த்து அனுப்பிய பணத்தை வைத்து களியாட்டங்களை நடத்துபவர்களுக்கு மனச்சாட்சி என்ற ஒன்று இருக்கின்றதா என்ற கேள்வி அகதி என்ற அடைமொழியை இன்னும் தாங்கியிருக்கின்ற அந்த மக்களின் உள்ளக் குமுறல்களாகவே உள்ளது.

---

ஜனநாயகன்

---

அண்மையில் வடமராட்சியில் பிள்ளையார் ஆலயம் ஒன்றில் இடம் பெற்றுள்ள ஓர் இசை நிகழ்ச்சி மோதல் வரை சென்றது. இத்த கைய மோதல்களை உருவாக்கி அப் பாவி இளைஞர்கள் மத்தியில் கொடூர வன்ம உணர்வை ஏற்படுத்துவது தான் கூத்தடிப்புக்களை நடத்துபவர்களின் நோக்கமா?.

எனவே, இத்தகைய களியாட்டங்களை நடத்துவதை விடுத்து அந்தப் பணத்தை வைத்து வாழ்க்கையுடன் போராடுபவர்களுக்கு உதவ முன்வர எவரின் இதயங்களாவது எண்ணியது உண்டா? இவ்வாறு குறிப்பிட்ட தொகையை கொடுத்தாலே அவர்கள் தமது வாழ்க்கையை ஓரளவாவது சீரமைக்க உதவும்.

துன்பப்படுபவர்களுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குச் செய்யும் ஆராதனைக்கு ஒப்பானது. இது கேட்குமா இந்தக் கோமாளிக் கூத்தாடிகளின் காதுகளில்...

---

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

14. மிகச் சரியான விடையினை எழுதுக

01) 9436 என்பது அதில் உள் இலக்கத்தால் ஆக்கப்பட்ட மிகப்பெரியஎண் எனின், ''சரி''எனவும் இல்லை எனின், அப்பெரிய எண்ணையும் எழுதுக

..............................................................................................

02) பெருக்கல் ✱ எனும் குறியீட்டிலும், வகுத்தல் # எனும் குறியீட்டிலும் காட்டப்படும் எனின், 8✱9#1 இன் பெறுமானம் யாது?

..............................................................................................

03) 7kg 750g இல் எத்தனை 250g உண்டு?


..............................................................................................

04) பஸ்லியா கனாக் காணும் காலங்கள் நாடகத்தை பி.ப 7.55 மணிக்கு பார்க்கத்தொடங்கி 45 நிமிடங்களில் பார்த்து முடித்தாள். அப்போது நேரம் யாது?


..............................................................................................

05) ஒரு சுவருக்கு தீந்தை பூச ராகவிக்கு 4l 600ml தீந்தை தேவைப்பட்டது. அவ்வாறான 4 சுவர்களுக்குத் தீந்தை பூச தேவைப்படும் தீந்தையின் அளவு?

..............................................................................................

06) 

இதில் ¾ பங்கிற்கு நிறம் தீட்டுக.

07) 


செவ்வக வடிவக்காணியானது அம்புக் குறிவழியே பார்த்த போது 8, 4 எனத்தூண்கள் தெரிந்தன. எனின், இந்தக்காணியை சுற்றிவர எத்தனை தூண்கள் காணப்படும்?

(..............................................................)

08) 0.2+0.09+0.3= (..............................................................)

09) 


இங்கு ஒவ்வொரு சிறிய பெட்டியையும் சதுரம் எனக்கொள்க. இதன் சுற்றளவு என்ன?

..............................................

10) 

நிழற்றப்பட்ட பகுதியைப் பின்னத்தில் தருக.

..............................................

15).

| பொருள் | நிறை | விலை |
|---|---|---|
| செத்தல் மிளகாய் | 1kg | 120.00 |
| உருளை கிழங்கு | 1kg | 80.00 |
| பருப்பு | 250g | 60.00 |
| சீனி | 1/2kg | 35.00 |
| நெத்தலி | 3/4kg | 135.00 |
| தேங்காய் | 3 | 45.00 |

விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

1) நெத்தலி 1kg, உருளைக்கிழங்கு 100g வாங்கிய சுல்தான் எவ்வளவு பணத்தைக் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டும்?

..............................................................................................

2) 4 தேங்காய்களும், 125g சீனியும் வாங்கிய ஷாமிலா 100 ரூபாவை ஐ கடைக்காரனிடம் கொடுத்தால் எவ்வளவு மீதியாகப் பெறுவாள்?

..............................................................................................

3) சீனி 1kg 250g, பருப்பு 1kg 750g, உருளைக்கிழங்கு 2kg, வாங்கிய ஆயிஷா கடைக்காரனிடம் ஒளி ஊடுருவும் காசுத் தாள்கள் இரண்டும், 50 ரூபா தாள் ஒன்றும் கொடுத்தாள் எனின், இன்னும் எவ்வளவு தொகையை கடைக் காரனுக்குக் கொடுக்க வேண்டும்?

..............................................................................................

4) 100g செத்தல் மிளகாயினை வாங்கக் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய கிட்டிய தாள் காசு எவ்வளவு?

..............................................................................................

16. ''நீரைச் சிக்கனமாக பயன்படுத்துவோம்'' என்ற கருப்பொருளில் 4 சொற்களுக்குக் குறையாத சரியான எழுவாய் பயனிலை தொடர்பு அமைந்த கருத்துள்ள 6 வசனங்கள் எழுதுக.

1) ..............................................................
..............................................................

2) ..............................................................
..............................................................

3) ..............................................................
..............................................................


4) ..............................................................
..............................................................

5) ..............................................................
..............................................................

06)..............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்ததின நினைவலைகள்



மலர்வு
18 . 08 . 1952

உதிர்வு
08 . 03 . 2011

## லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

நினைப்பும் மறப்பும் கடந்து.....

இன்று உங்கள் பிறந்தநாள்
நீங்கள் எம்மோடில்லாத பிறந்தநாள்
என்று சொல்வது கூடத் தவறுதான்
நீங்கள் எப்போது எங்களைப் பிரிந்தீர்கள்
நாங்கள் மறப்பதற்கு!
நாங்கள் எப்போது உங்களை மறந்தோம்
இன்று புதிதாய் நினைப்பதற்கு!
என்றும், என்றென்றும்
எங்களோடு இருந்தீர்கள், இருப்பீர்கள்!

(6989) (38-19-25)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

லவ் லேன்,
உடுவில், சுன்னாகம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
1946.01.21

மறைவு:
2011.07.19


## அமரர் பத்மநாதன் பத்மராணி

கடந்த 19.07.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (18.08.2011) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

228/10, சேர்.பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



# 27 ஆவது நாள் நினைவலைகள்

தோற்றம்:
18.02.1943

மறைவு:
23.07.2011

அன்பிலே அமலனாய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இன்முகம் உவந்து புன்னகை மொழி பேசி
இல்லத்தின் விருட்சமாய் பாச நிழல் தந்தாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
இனி எம் வாழ்வில் காண்போமா உம்மை
விம்மிடும் விழிகளுடன் நினைத்தோம் உங்களை

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## அருளப்பு அமலதாஸ்

இல.53, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை மாணவர்களின் கல்விக்கு வளமூட்டும் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்




(சென்றவாரத் தொடர்ச்சி)

சைவத்தமிழ் பாரம்பரியங்களை வளர்த்து ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வளமூட்டி வரும் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் 80 ஆவது ஆண்டில் தனது பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

கல்வி தொடர்பான செயற்பாடுகள் நகர மயமாக்கலை நோக்கியதாக இல்லாமல் கிராம மட்டத்தில் மட்டும் உள்ளூர்ப் பாடசாலைகளை உள்ளடக்கியிருந்த 1980 ஆம் ஆண்டுகளுக்கு முந்திய காலப் பகுதியில் தனக்கெனத் தனித்துவமான சிறந்த அம்சங்களுடன் விளங்கியது இந்தப் பாடசாலை. கல்வியின் அடைவு மட்டத்தில் மேம்பட்டிருந்த வித்தியாலயத்தில் 400 மாணவர்கள் வரை கல்வி கற்றதாகப் பதிவேடுகளில் இருந்தும் உள்ளூர் பிரமுகர்களின் நேர்காணலில் இருந்தும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

1980 களுக்கும் பின்னர் தோன்றிய ஆயுத போராட்டச் சூழல் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களைச் சூழவுள்ள கல்விக் கூடங்களில் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பலாலி ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அண்மை யில் உள்ள பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் பாதிப்புக்களுக்கு உள்ளாகியது. பாடசாலையைச் சூழவுள்ள மக்களும் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களும் இடம் பெயர்ந்த நிலையில் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. பாடசாலையின் வளங்களும் சேதமடைந்தன.

1932 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயத்தில் 1936 ஆம் ஆண்டு வரையும் முதலாம் வகுப்பில் இருந்து 5 ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. 1937 ஆம் ஆண்டு தரம் 5 ஆம் வகுப்புக்களுக்கு மேலாக தரம் 8 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு வரை தரம் 1 தொடக்கம் 8 வரையான வகுப்புக்களைக் கொண்டதாகச் செயற்பட்டு வந்தது. 2001 ஆம் ஆண்டில் இருந்து தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக இன்றுவரை இந்தப் பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலையின் வளவசதிகள் தொடர்பாகத் தற்போதைய அதிபர் எஸ்.மோகனராஜன் கருத்துத் தெரிவிக்கையில்:

வித்தியாசாலையின் ஆரம்பகால பழைய கட்டடத் தொகுதியுடன் அண்மைக் காலத்தில் 60' x 20' நீளம் கொண்ட கட்டடம் மட்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடத்தில் உள்ள 10 அடி அகலமான சிறிய அறையில் அதிப ரின் அலுவலகம் செயற்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்தினால் மதிய உணவு சமையலுக்கான சமையல் கூடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கட்டடங்களும்தான் புதிய கட்டடங்கள்.

EKSP திட்டத்தின் கீழ் 5 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை இணைப்புச் செய்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்குப் பயன்படுத்துவதற்குரிய கட்டட வசதி இல்லை. கனடாவில் இருந்து வந்த பழைய மாணவனான பவானந்தன் வரதராசன் 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் கணினித் தொகுதியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். தொடர்ந்து பாடசாலையின் தேவைக்கு உதவுவதாக வாக்குறுதியும் அளித்துள்ளார். இவ்வாறு புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் தமது கல்விக்கு அடித்தளமிட்ட கல்விக் கூடத்தை நினைவில் நிறுத்தி உதவிகளை வழங்க முன்வருவது பாடசாலையின் கல்வி வளர்ச்சிகள் சிலவற்றை நிறைவு செய்வதற்கு வசதியாக இருக்கும் எனக் கூறிய அதிபர் மீண்டும் பாடசாலையை உயர் நிலைக்குக் கொண்டு வருவதற்கு பாடசாலைச் சமூகம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள வசதி படைத்த பொருளாதார வளமுள்ள மாணவர்கள் நகரப் புறப் பாடசாலைகளை நோக்கி நகர்வதால் பொருளாதார வளம்குன்றிய வசதியற்ற மாணவர்கள் மட்டும் கல்விகற்கும் பாடசாலைகள் கல்வி நிர்வாகத்திலும் திட்டமிட்டுப் பின்தள்ளப்படுவதாகக் கூறப்படு

**ஞான ஆதவன்**

வதில் உண்மையில்லாமல் இல்லை.

ஆங்கில ஆசிரியர் ஆளணி நீண்ட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்தது. 2 ஆம் தவணைப் பரீட்சைக் காலத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியை ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எல்லோருக்கும் கல்வியில் சமத்துவம் என்ற கோஷங்கள், கல்வித் தத்துவங்கள் ஏட்டில் மட்டும் இல்லாமல் நடைமுறையில் அமுல் செய்ய வேண்டுமாயின் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் தரம் 5 வரையுள்ள மாணவர்களுக்கு நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இன்றி தேசிய கல்விக் கொள்கைக்கு அமைய சகல வசதிகளும் வழங்கப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலை உருவாக்கப்படுமானால் இரத்தினேஸ்வரி வித்தியாலயம் போன்ற கல்விக் கூடங்களில் கற்கும் மாணவர்கள் கல்வியில் உயர முடியும். இரத்தினேஸ்வரி வித்தியாலயம் மீண்டும் மேல்நிலை பெற வாழ்த்துவோம்.

★

# இலங்கையின் போர்க்குற்ற ஆதாரங்கள்; மேலதிக தகவல்கள் விரைவில் வெளியாகும்

## ஹெட்லைன்ஸ் ருடே தெரிவிப்பு

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக மேலும் பலநம்பத்தகுந்த ஆதாரங்களை வெளியிடத் தயாராக உள்ளதாக இந்தியாவின் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சி தகவல் வெளியிட்டுள்ளது.

நம்பத்தகுந்த ஆதாரங்கள், தம்மிடம் இருப்பதாகவும், போர்க் குற்றங்களை தாம் தொடர்ந்தும் வெளியே கொண்டு வருவோம் என்றும் அதன் பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால் தெரிவித்துள்ளார்.

இனப் படுகொலையின் கண் கண்டசாட்சி ஸ்ரீலங்காவின் கொலைக்களங்கள் என்ற ஆவணப் படத்தை, ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சி கடந்த வாரம் ஒளிபரப்பியிருந்தது.

அந்த ஆவணப்படம் தொடர்பாக, ஹெட்லைன்ஸ் ருடே பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது தெலைக்காட்சிச் செய்தியாளரான பிரியம்வதா வன்னிக்கு நேரில் சென்று இறுதிக் கட்டப் போரில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களை நேரில் சந்தித்து விவரங்களைச் சேகரித்துள்ளார்.

இந்த மக்கள் இன்னும் முகாம்களிலேயே உள்ளனர். அவர்களிடம் தேவையான புகைப் படங்கள், பெயர், முகவரி போன்றவற்றை அவர் திரட்டி வந்தார்.

இறுதிக்கட்டப்போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக நம்பகரமான சாட்சிகளை ஆவணப்படம் காட்டியுள்ளது. அனைத்துலக பிரகடனங்களையும், போர்க் குற்ற தடுப்புச் சட்டத்தையும் இலங்கை ராணுவத்தினர் மீறியுள்ளனர். எமது செய்தி [illegible] ளனர் என்று மேலும் கூறினார்.




(பதினைந்தாம் திருவிழா)

### கேள் முருகா

முருகா நீ நினைப்பது போல மனிதன்
முறையாகத் திருந்திய பாடில்லை,
ஒரு கைபிடிச் சோற்றுக்கு ஒரு குழந்தை
ஆபிரிக்காவில் மண் சாப்பிடுகிறதே முருகா
பெரு நிலப்பரப்பிலே கொட்டிலிலே எத்தனை
பரம ஏழைகள், பிஞ்சுகளாய் பட்டினியாய்
இருகரம் ஏந்தும் பொழுது இலைகளோடு
அன்னத்தைக் கொட்டலாமா? கேள் முருகா...!

கே.எஸ்.சிவானந்தராஜா, கொக்குவில்.

### ஐயனே முருகா...!



தெய்வ மணங்கமழும்
திருநல்லைப் பதிதனிலே
மெய்யன்பர் கூடி நின்றே
போற்றியுனைப் பணிந்திடுவர்
வையமெல்லாம் போற்றும் நல்லூர்
ஐயன் முருகனிடம்
செய் தவம் பலித்திடவே
சேவித்தே நின்றிடுவர்

காவடிகள் ஆடிவந்து
கரங்கூப்பி தலைவணங்கி
சேவடிகள் துதிபாடியுன்
நாமங்கள் சொல்லிநிற்பர்
பாவலர்கள் பாமாலை
பண்ணிசைத்து பாடிடுவர்
நாவலர்கள் நற்றமிழில்
உன் புகழை சொல்லிடுவார்

எஸ்.சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.

### பக்தியினால் பாடுவோம்



மனமுருகி நல்லூர் கந்தன்
நாமம் பாடுவோம் - அவன்
மாண்புதனை மனதார
மகிழ்வுடன் சொல்வோம்

ஆடியமாவாசை போய்
ஆறாம் நாளில் - அவன்
அழகு பெரும் மஹோற்சவத்தை
அன்புடன் சொல்வோம்

அடி அழித்து ஆரங்கட்டி
ஆர்ப்பரிப்போமே - நல்லூர்
அழகு மயில் அற்புதனின்
அன்பைப் பாடுவோம்

சுபாஷினி பிரணவன், அச்சுவேலி.

### தூலலிங்கமாய் துலங்கு முருகா

தங்கவேல் கொண்டு தரணியெல்லாம் காப்பாய்
தாய்தந்த வேல்கொண்டு தாயாய் வருவாய்
திசையெல்லாஞ் செல்லும் திருவேல் கொண்டருள்வாய்
தீயவரையழித்திடும் திறன்வேலாயுதா
துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன வேலாய் நின்றாய் - நல்லையில்
தூல லிங்கமாய் துலங்கு முருகா
தெப்பம் போல் வாழ்வினில் துடுப்பெனவருவாய்
தேடிவந்தெம் வினைதனை தீர்ப்பாய்
தையலசிருவருடன் பவனிவரும் - தங்க வேலா
தொழுமடியவர் துன்பம் துடைப்பாய்
தோழமையொடு சுந்தரனாய் நின்றோம் - யோகநெறியில்
யோகர் சுவாமிகள் தொழுத நல்லூரா - யோகமருள்வாயய்யா

ஜெகதீஸ்வரி நாகலிங்கம், உடுவில்.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
Jaffna Electrical
No.94 (6) Stanly Road, Jaffna. 021 222 2353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 ஓகஸ்ட் 2011 வியாழக்கிழமை

# மடுமாதா ஆலயப் பகுதியில் எனக்கு சொந்தமான விடுதி ஏதுமில்லை

## பாதுகாப்பு அமைச்சுக்கு ஜயலத் எம்.பி.விளக்கம்

கொழும்பு, ஓக.18

மடுமாதா புண்ணியபூமியில் எனக்குச் சொந்தமான சுற்றுலா விடுதி எதுவும் இல்லை - என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மடுமாதா புண்ணியபூமியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடமான தியான நிலையம் அதி.வண.இராயப்பு ஜோசப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டமாகும்.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்கான அனைத்து செலவுகளும் மன்னார் ஆயர் வட்டாரத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் சமய அனுஷ்டானங்களுக்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படவுள்ளது. எனது நற்பெயருக்கு கேடு விளைவிப்பதை நோக்காகக் கொண்டு பாதுகாப்பு அமைச்சின் ஒரு சில பிரிவினர் இந்தக்கட்டடம் எனக்கு உரித்தான சுற்றுலா விடுதி என்று பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

மடுமாதா அன்னையில் நான் கொண்டுள்ள அதீத பக்தியையும், கௌரவத்தையும் இந்தநாட்டு மக்கள் நன்கு அறிவர். மேலும் எனக்கும் மடுமாதா ஆலயத்துக்கும் ஒருவிதமான பிணைப்பு இருப்பது யாரும் அறியா விடயமாகும்.

தாங்கள் அண்மையில் மடுமாதா ஆலயத்துக்குச் சென்றபோது டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு உரித்தான சுற்றுலா விடுதி எவ்விடத்தில் உள்ளது என்று அங்கு தங்கியிருந்த பாதிரியார்களிடம் வினவியதை நான் அறிந்து கொண்டேன்.

இதன்மூலம் மடுமாதா புண்ணிய பூமியில் எனக்குரித்தான சுற்றுலா விடுதி இருப்பதான பொய்ப் பிரசாரத்தைத் தாங்களும் நம்பியுள்ளீர்கள் என்பது தெளிவாகின்றது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் நஷீட்டை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரில் நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

# ஆண்களின் சனத்தொகையில் வீழ்ச்சி

கொழும்பு,ஓக.18

இலங்கையில் ஆண்களின் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புதிய புள்ளி விவரத் தரவுகள் தெரிவிக்கின்றன.

2001 ஆம் ஆண்டின் பின்னர் பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் 1000 ஆண்களுக்கு 1034 பெண்கள் என்ற வீதத்தில் சனத்தொகைப் பரம்பல் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# வவுனியா மையவாடிக்குள் கட்டடம்; நிர்மாணத்தை இடைநிறுத்த உத்தரவு

வவுனியா, ஓக.18

வவுனியா, பட்டாணிச்சூர் புளியங்குளம் மையவாடிக்குள் நகரசபையின் அனுமதியின்றிக் கட்டப்படும் கட்டடத்தின் நிர்மாணப்பணிகளை இடைநிறுத்துமாறு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாவட்ட பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன் தாக்கல் செய்த மனுவில்,

வவுனியாவில் நடைபெற்ற உண்ணாவிரதம், கடையடைப்பு காரணமாக இனங்களுக்கிடையில் முறுகல்நிலை விரிவடைந்து அமைதிக்கு குந்தகம் ஏற்படலாம் எனக் குறிப்பிட்டு பிரச்சினைக்குரிய கட்டவேலைகளை நிறுத்துவதற்கான தடை உத்தரவைக் கோரியிருந்தார்.

அதன் பிரகாரம் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை மாவட்ட நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மையவாடி பட்டாணிச்சூர் புளியங்குளம் பள்ளிவாசலுக்குச் சொந்தமானது என பள்ளி நிர்வாகம் தெரிவிக்கிறது. அதேவேளை நகரசபை எல்லைக்குள் உள்ள அனைத்து மயானங்களும் நகரசபைக்கே உரித்தானது என நகரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இரு தரப்பினரும் தம்மிடம் ஆவணங்கள் உள்ளன எனத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.







1 ஆவது
பிறந்தநாள் வாழ்த்து
கனடாவில் வசிக்கும்
லோகராஜ், சிவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன்
அனிஷ்
தனது முதலாவது பிறந்த தினத்தை 18.08.2011 (இன்று)
கல்வியங்காட்டிலுள்ள தாத்தா கந்தசாமி அவர்களின்
வீட்டில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.
இவரைப் பல்லாண்டு காலம் பல
செல்வங்களைப் பெற்று சீரும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தாத்தாமார்,
அம்மம்மாமார், அப்பப்பாமார், பூட்டி(டென்மார்க்),
சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார்,
அக்காமார், அண்ணாமார்.
புலவனார் வீதி, கல்வியங்காடு
Happy Birthday



220 இற்கு மேற்பட்ட
உலக நாடுகளுக்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL
உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உலக நாடுகளுக்கு அனுப்பி DHL மூலம் பெற்றுக்கொள்ள
சிறந்த சேவையை வழங்குகிறது
திருமுருகன் கொம் நெற்
வெளிநாட்டு கடவுச்சீட்டு உடைய
ஒருவருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
வட மாகாணத்திற்கான உங்கள் DHL முகவர்
திருமுருகன் கொம் நெற் மட்டுமே...!
★ போலி முகவர்களிடம் ஏமாறவேண்டாம்
★ விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது
Hot line: 021 222 7835
இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN Express 2 B, Nelson Place, Colombo - 06.





சுவைப் பிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற
OMEX HOTEL
தனது மற்றுமொரு கிளையை கொழும்பு - 06 இல்
இன்று (18.08.2011) வியாழக்கிழமை மு.ப.10.10 மணி சுபநேரத்தில்
கோலாகலமாக ஆரம்பித்து வைக்கவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
★ புரியாணி வகைகள் ★ சாப்பாட்டு வகைகள்
★ காலை, மாலை உணவுகள் ★ சிற்றுண்டி வகைகள்
★ ஐஸ்கிறீம் வகைகள்
என்பவற்றை தரம் வாய்ந்தவர்களால் தரமாகத் தயாரித்து வழங்கவுள்ளது
ஒமெக்ஸ் கொட்டல்
372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
243A, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 17 இலங்கைத் தமிழ்ப் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவி வழங்கினார் முதல்வர்

சென்னை, ஓக. 18

தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள் அனைத்தும் முகாம் வாழ் இலங்கை தமிழ் மக்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்புக்கிணங்க பல்வேறு திட்டங்களின் கீழ் முதல்வர் ஜெயலலிதா 17 இலங்கைத் தமிழ்ப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கைத் தமிழர்கள் நலனில் எப்போதும் மிகுந்த அக்கறையும், ஆதரவும் கொண்டு அவர்கள் நல்ல முறையில் வாழ தமிழக மக்களுக்குக் கிடைக்கப் பெறும் அனைத்து நலத்திட்டங்களும் அவர்களுக்கும் கிடைத்திட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

முதல்வர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப் பூண்டி முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் லட்சுமி வேலு, வேலு, லட்சுமி துரைசாமி ஆகியோருக்கு ஆதரவற்ற முதியோர் ஒய்வூதியத் திட்டத்துக்கான ஆணையையும், புவனேஸ்வரி, நாககன்னி, சுந்தரியம்மாள் ஆகியோருக்கு ஆதரவற்ற பெண்கள் ஒய்வூதியத் திட்டத்துக்கான ஆணையையும், இன்பரதி, சிவபாக்கியம், கமலாதேவி ஆகியோருக்கு ஆதரவற்ற விதவையர் ஒய்வூதியத் திட்டத்துக்கான ஆணையையும், சுகநந்தினி, வத்சலா, பத்மவேணி ஆகியோருக்கு திருமண உதவித் திட்டத்தின் கீழ் திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் தங்கம் மற்றும் 25,000 ரூபா நிதியுதவியும், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப் பூண்டி முகாமில் இயங்கி வரும் அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த அமிர்தசெல்வநாயகி, ஜூலியட் கொன்சி, தென்றல் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த நாகம்மாள், ஞானசீலி, புதிய உதயம் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த விஜயா, பத்மஜோதி ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு சுழல் நிதியினையும், வாசுகி, பாக்கியலட்சுமி ஆகியோருக்கு இலவச தையல் இயந்திரங்களையும் வழங்கினார் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீமானைக் கைது செய்யக் கோரி இளைஞர் காங்கிரஸார் ஆர்ப்பாட்டம்

சீமானை கைது செய்ய வலியுறுத்தி இளைஞர் காங்கிரஸார் டி.ஜி.பி அலுவலகம் முன்பு நேற்று முன்தினம் திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கு ஆதரவாக நாம் தமிழர் கட்சி நடத்தும் பொதுக் கூட்டத்துக்குத் தடை விதிக்கவும், சீமானைக் கைது செய்ய வலியுறுத்தியும் இளைஞர் காங்கிரஸார் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது சீமானுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. பிரதிப் பொலிஸ் ஆணையாளர் சண்முகராஜேஸ்வரன் தலைமையில் பொலிஸார் சென்று போராட்டம் நடத்த உங்களுக்கு அனுமதி தரப்படவில்லை. எனவே கைது செய்யப் போகின்றோம் என்று கூறினர்.

இதனால் பொலிஸாருடன் இளைஞர் காங்கிரஸார் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் டி.ஜி.பி.யிடம் மனு கொடுக்க 5 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இளைஞர் காங்கிரஸ் மாநில தலைவர் யுவராஜ், ராம்குமார், ஆனந்த், அப்பாஸ், விஜய் இளஞ்செழியன் ஆகியோர் டி.ஜி.பி.யிடம் மனுவைக் கைபளித்தனர். (வ)

# முருகன், சாந்தன், பேரறிவாளனை காக்க ஜெயலலிதா உதவ வேண்டும்

## உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கோரிக்கை

சென்னை, ஓக. 18

ராஜீவ் காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேருக்கும் மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டிருப்பது வேதனை தருகிறது. இதை ஆயுள் தண்டனையாகக் குறைக்க முதல் வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி. ஆர்.கிருஷ்ணய்யர் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக ஜெயலலிதா வுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியாவின் தலைமை நீதி மன்றத்தால் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேரும் தூக்கிலிடப் போவதை அறிந்து மன வருத்தம் அடைந்தேன். அநியாயமாகக் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியும் இவர்களை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய உடன்படுவதாகக் கூறினார். ஆனால் தற்போது இவர்களைத் தூக்கிலிடலாம் என்று இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் அனுமதி அளித்துள்ளது வருத்தம் அளிக்கிறது.

இவர்களின் உயிரைக் காக்க தண்டனை குறைப்பு நடவடிக்கை எடுக்க தங்களை வேண்டுகிறேன். இந்த மனிதநேயச் செயலுக்கு உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தங்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பர் - என்று கிருஷ்ணய்யர் தெரிவித்துள்ளார்.

# ராஜீவ் கொலை; மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரி போராட்டம்

கோவை, ஓக. 18

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 3 கொலைக் குற்றவாளிகளின் கருணை மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து பல்வேறு தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த தொண்டர்கள் கோவையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் உயிர்களைக் காப்பாற்ற சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பெரியார் தி.க. பொதுச் செயலர் கே.ராமகிருஷ்ணன் தலைமையில் பல்வேறு அமைப்புகளின் தொண்டர்கள் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் சில தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தோர் பங்கேற்று கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே மதுரையில் மாவட்ட ஆட்சியரகம் முன் தமிழ் ஈழ ஆதரவு சங்கத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளும், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த சிலரும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்துச் செய்யக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கூட்டம்

கீரிமலை ஸ்ரீமகா முத்துமாரியம்மன் ஆலய பாலஸ்தாபனம் தொடர்பான கூட்டமொன்று நாளை மறுதினம் 20.08.2011 அன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. உபயகாரர்கள், பக்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ந. உமாபதீஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தா.

(சி/3051)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 05 1965



மறைவு 18 08 2010

மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து பிறந்த மண்ணுக்கு நற்புகழ் ஈட்டித்தந்த மாதரசி மங்கையர் திலகம்

வைத்தியகலாநிதி

### செல்வி யமுனா மார்க்கண்டு

பிங்ற்றன்கின்ஸ் தேசிய வைத்தியசாலை,லண்டன்

M.B.B.S (Srilanka), M.D (Srilanka), M.R.C.P (UK)

M.B.B.S (Srilanka, M.D (Srilanka) M.RC.P (U.K) இறைவனால் நிர்ணயித்த உங்கள் குறுகிய வாழ்வில் நீங்கள் ஈட்டிய சாதனைகள், பிரதிபலன் நோக்காது உள்ளன்போடும், பெருமனத்தோடும், பண்புடனும், பணிவுடனும் நீங்கள் ஆற்றிய அன்பரிய அரிய சேவைகளை நினைவு கூர்வதுடன் மேலும் படித்துப் பட்டங்கள் பெற்று மாண்புமிகு மருத்துவக்கல்வியின் உயர்நிலையை நோக்கி ஆவலுடன் பயணித்த வேளையில் எதிர்பாராத வகையில் 18.08.2010ல் காலன் உங்கள் இன்னுயிர் கவர்ந்த துயர் தாழாது உங்கள் ஆத்மா சாந்தியடைய அருட்பெருஞ்சோதி அம்பலவாணனின் பதாரவிந்தங்களை நெஞ்சாரப் பற்றிப் பணிகின்றோம்.

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்"

என்ற வள்ளுவனின் குறட் பாவுக்கமைய வாழ்ந்தவள்வீர்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை எனக்கூறின் மிகையாகாது.

ஓம்சாந்தி. ஓம்சாந்தி. ஓம்சாந்தி

பாலாவோடை
களபூமி
காரைநகர்
18.08.2011

16 4/4, 1St. Chappel lane,
Wellawatta. Colombo -06

இங்ஙனம்
தந்தை, தாயார், சகோதரிகள்
மைத்துனர்மார், பெறாமக்கள்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.05.1929

மறைவு
01.08.2007



திதி: 16.08.2011

அமரர் கலாநிதி

### அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A.,FCA.

(பட்டயக் கணக்காளர்)

(முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழகம், முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மகள்
திருமதி [illegible] மூர்த்தி (கனடா)

(சி/3050)

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

மிளகாய், கோப்பி, மா போன்றவற்றை அரைக்கும் இயந்திரமும், மாவறுக்கும் இயந்திரமும் மற்றும் அரைக்கும் ஆலை ஒன்றுக்குத் தேவையான அனைத்து உப கரணாங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0776623431



## மணமகள்மார் தேவை

ஐரோப்பிய நாட்டு நிரந்தர வதிவுடமையுள்ள 49 வயது, 39 வயதுடைய விவாகர்த்துப் பெற்ற மணமகன்களுக்கு கௌரகுடும்ப மணமகள்மாரைத் தேடுகின்றோம். விவகாரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தற்பொழுது நல்லூர் விடுமுறைக்கு வந்துள்ளார்கள்.

(6993) (38)

தொடர்பு: நல்லூர் மணியம்.
தொ.பே.: 0776510434, 0770567344.


## ஆவணங்களைக் கையளிக்க அறிவுறுத்து

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் நியமனம் பெற்ற அழகியல் பாட பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தையும் அதன் போட்டோப் பிரதிகளையும் பட்டச் சான்றிதழையும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)


## "0⁺" சிறுநீரகம் தேவை

சிறுநீரக பாதிப்புக்குள்ளான 45 வயதுடைய ஆண் ஒருவருக்கு "0⁺" சிறுநீரகம் தேவை. சிகிச்சை லண்டனில் நடைபெறும். சிறுநீரகம் கொடுத்துதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0750381553, 0777604667.

(6994)(38)



## மணமகள் தேவை

78இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 13 பாவமுடைய B.Sc, M.sc. இஞ்சினியருக்கு உயரம் 6 அடி மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
மேலும்- டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், வெளிநாட்டில் பிரஜாஉரிமை பெற்ற மணமக்களும் சைவ போசனமுள்ள செவ்வாய் பாவமுடைய அரச ஊழியர்களும் எம்மிடமுள்ளன.

(6995)(38)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை,
இல. 171, மனோன்மணி
அம்மன் கோயிலடி, நல்லூர்.


## விலங்கு விசர்த் தடுப்பூசி

தென்மராட்சி, ஓக.17

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணியைத் திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம் பெறவுள்ளன.

இன்று சங்கத்தானை சங்கக் கடையடி, இத்தியடி ச.ச.நிலையம் இந்து ஆரம்பப் பாடசாலை, மண்டுவில் அம்மன் வீதி, சாவகச்சேரி பூவேந்தன் முன்பள்ளி, கற்குளி வீதி, மடத்தடி, பேச்சியம்மன் கோயிலடி ஆகிய இடங்களில் இடம்பெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

(ம-207)


மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த திரு.திருமதி கந்தசாமி தம்பதியரின் புதல்வன் திருவளர் செல்வன் சுகந்தன் அவர்களுக்கும் கண்டாவளை, பரந்தனைச் சேர்ந்த திரு.திருமதி கந்தசாமி தம்பதியரின் புதல்வி திருவளர் செல்வி ஈழப்பிரியா அவர்களுக்கும் இன்று (18.08.2011) வியாழக்கிழமை மங்களகரமாக பிரான்சில் (Paris) இல் திருமணம் நடைபெறுகிறது. இல்லற வாழ்வில் இணையும் இப்புதுமணத் தம்பதிகள் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்று என்றென்றும் சந்தோசமாகவும் சுபீட்சமாகவும் எல்லாச் செல்வங்களோடும் பல்லாண்டுகாலம் என்றென்றும் நலமுடன் வாழ வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றோம்.



### திருமண வாழ்த்து

வாழ்த்துவோர்: மணமகஞ்-குடும்பத்தினரான
அப்பா-கந்தசாமி, அம்மா - பரமேஸ்வரி,
தங்கைமார்கள், மச்சான்மார்கள், மருமகன்,
மருமகள் மற்றும் தம்பி - மயூரன்.
மயூரன், மந்துவில், கொடிகாமம்.



## ஓய்வுபெறும் வங்கியாளரை கௌரவிக்கின்றோம்



மக்கள் வங்கியின் தவப்புதல்வனாய் 1975 முதல் இன்று வரை இனிதே பணியாற்றி சக ஊழியர்களின் மனங்களை வென்று தனக்கென அமைத்த தனிப்பாணியால் முகாமை செய்து அன்பால் மக்கள் மனங்களை வென்று இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் பேரன்புக்குரிய
**திரு. வ. சண்முகநாதமுதலி** அவர்களின்
ஓய்வுக்காலம் இன்றுபோல் தித்திப்பாய் இனிதாய்
அமைந்திட இறையருளுடன் நல்லாசிகள் சேரட்டும்.
வாழிய நிறைவுடனே பல்லாண்டு.

**மக்கள் வங்கி,** பல்கலைக்கழக குடும்பத்தினர்.



# ஷஷ்டியப்த பூர்த்தி வாழ்த்துக்கள்

## திரு. வல்லிபுரம் ஷண்முகநாத முதலி

### (மக்கள் வங்கி, பிரதான வீதிக்கிளை முகாமையாளர்)



### பிரியாவிடை வாழ்த்து

*1975 முதல் இன்றுவரை நிறைவான*
*வங்கியாளனாய் வாழ்ந்தவனே!*
*உன்னால் உயர்வு கண்டது மக்கள் வங்கி அது திண்ணமே!*
*வாய் வன்மையாலும் அனுபவ செல்வத்தாலும் சீரிய*
*முகாமையாளராய் ஆண்டவனே!*
*பக்தியின் பலனாலும் அன்பு நிறை உள்ளத்தாலும்*
*கட்டினாய் மனங்களை இறுகவே*
*நீ வாழி! நின் குடும்பம் வாழி! நின் சேவை வாழி!*
*நிறைவாய் எம் மனங்களில் நீண்டு வாழி!*

(சி/3037)(38)

**அன்புடன்**
***சி.நித்தியானந்தன்.***

### ஷஷ்டியப்த பூர்த்தி வாழ்த்துச் செய்தி

அன்புமிகு அண்ணனாய் ஆசைமிகு தோழனாய்
பண்புமிகு வங்கியாளனாய் பக்தி மிகு பற்றாளனாய்
வாண்மை மிகு சேவையாளனாய் அனுபவமிகு முகாமையாளனாய்
சக ஊழியரின் நலன் விரும்பியாய் பாசமிகு குடும்பஸ்தனாய்
வாழும் எம் சகபாடியே வாழ்த்துகின்றோம் உளமார- நாளை
உன் பொழுதுகள் வளமாகட்டும்! இல்வாழ்க்கை இனிதாகட்டும்.

**உரிமையுடன்**
**ந.நாகேஸ்வரன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய ராணுவத்தின் தாக்குதல்கள் தீவிரம் வெளியேறிய 10ஆயிரம் அகதிகள் எங்கே?

## அவர்களைக் காணவில்லை என்கிறது ஐ.நா.

டமாஸ்கஸ்,ஒக.18

சிரியாவின் துறைமுக நகரான லடாகியாவில், தொடர்ந்தும் சிரிய ராணுவம் தாக்குதல் நடத்திவருகிறது. இந்த நிலையில் அந்நகரில் இருந்து வெளியேறிய 10 ஆயிரம் பலஸ்தீன அகதிகளைக் காணவில்லை என ஐ.நா. தெரிவித்துள்ளது.

லடாகியாவில், நேற்று முன்தினம் சிரிய ராணுவமும் கடற்படையினரும் இணைந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதில் ஐவர் கொல்லப்பட்டனர். எனினும், சிரியாவுக்குள்வெளிநாட்டுப் பத்திரிகை செய்தியாளர்களுக்கு அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதால், அங்கு என்ன நடக்கிறது எனத் தெரியவில்லை. எனினும், அந்நகரில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பு கருதி வெளியேறி வருகின்றனர். இது தொடர்பாக ஐ.நா. நிவாரண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டோபர் கின்னஸ் கூறுகையில் ''லடாகியாவில் உள்ள அகதிகள் முகாமில் வசித்து வந்த 10 ஆயிரம் பலஸ்தீனர்கள், ராணுவத் தாக்குதல் காரணமாக கடந்த திங்கட்கிழமை அங்கிருந்து வெளியேறினர். தற்போது அவர்கள் எங்குள்ளனர் எனத் தெரியவில்லை'' எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் துருக்கி வெளியுறவு அமைச்சர் அகமது டவுடொக்லு வெளியிட்ட அறிக்கையில்,"சிரியா தன் மக்கள் மீதான வன்முறையை உடனடியாக நிறுத்த வேண்டும். இது சிரியாவுக்கு துருக்கி விடுக்கும் இறுதி எச்சரிக்கை'' எனத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், "சிரியாவில் நடப்பவை உள்நாட்டு விவகாரம். இதில் மேற்கத்திய நாடுகள் தலையிட்டால் பிரச்சினைகள் மேலும் அதிகமாகும்'' என ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அரச குடும்பத்தைக் கௌரவிக்கும் வகையில் கனடாவில் முப்படைகளின் பெயர்கள் மாற்றம்

ஒட்டவா, ஒக.18

அரச குடும்பத்தின் பாரம்பரியத்தை போற்றும் வகையில் கனடா நாட்டின் விமானப் படை, கடற்படை மற்றும் தரைப்படைப் பெயர்கள் மாற்றப்படுகின்றன என அரசு அறிவித்துள்ளது.

தற்போது கனடா விமானப் படை எயர் கொமாண்ட் என அழைக்கப்படுகிறது. இனிமேல் இந்தப் படைப் பிரிவு றோயல் கனடியன் எயர்போஸ் என அழைக்கப்படும். கனடா கடற்படை தற்போது மாரி டைம் கொமாண்ட் என அழைக்கப்படுகிறது. இனிமேல் றோயல் கனடியன் நேவி என அழைக்கப்படும். கனடாவின் தரைப்படைப் பிரிவு தற்போது லேண்ட் போர்ஸ் என அழைக்கப்படுகிறது. இனி மேல் இந்தப் படைப் பிரிவு கனடியன் ஆர்மி என அழைக்கப்படும். ஹாலி பொக்கசில் கனடா பாதுகாப்புத் துறை அமைச்சர் மாகே பேசுகையில் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப் பெயர் மாற்ற அறிவிப்பு குறித்து அமைச்சர் மாகே குறிப்பிடுகையில்: கடந்த 1970 ஆம் ஆண்டு காலகட்டத்தில் கனடா படைப் பிரிவுகளுக்கு பெயர் மாற்றங்கள் நடந்தன. இந்த மாற்றம் காரணமாக நடந்த வரலாற்றுத் தவறுகள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளன.

நமது நாட்டு அரச குடும்பத்தைக் கௌரவிக்கும் வகையில் இந்தப் பெயர் மாற்றங்கள் வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

## கடாபியுடன் பேச்சு நடத்த முடியாது: போராட்டக்காரர்கள் உறுதி

போராட்டாக்காரர்களை கொன்று குவிக்கும் கடாபியுடன் பேச்சு நடத்த முடியாது எனப் போராட்டக்காரர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். கடாபியின் லிபிய ராணுவம் பயங்கர சேதம் ஏற்படுத்தும் ஸ்கட் ஏவுகணையை வீசிய நிலையில் போராட்டக்காரர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தக் குழுவின் தலைவர் முஸ்தபா அப்டல் ஜலீல் கூறுயதாவது, "தமது அமைப்பு முடிவுப்படி கடாபி பதவியில் இருந்து உடனடியாக விலக வேண்டும். அவருடன் பேச்சு என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று'' எனத் தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் உள்ள பரகா நகரில் லிபியா ராணுவத்தினர் ஸ்கட் ஏவுகணையை வீசினர் என தகவல்கள் கூறுகின்றன.



லெபனான் நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாஸை தலைநகர் பெய்ரூட்டில் அதிபர் மைக்கேல் ஸ்லெய்மான் (இடது) வரவேற்றார்.

## அமெரிக்கா-தென்கொரியா கூட்டு ராணுவப் பயிற்சி: வடகொரியா எச்சரிக்கை

சியோல், ஒக.18

அமெரிக்காவின் நட்பு நாடான தென்கொரியா அந்நாட்டுடன் இணைந்து நடத்தும் 10 நாள்களுக் கான கூட்டு ராணுவப் பயிற்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் மூவாயிரம் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் உட்பட 5 லட்சத்து 30 ஆயிரம் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இதுகுறித்து வடகொரியா வெளியிட்டுள்ள அறிக்கையில்:

''இந்தநடவடிக்கை எரிச்சலைத் தூண்டுகிறது. இது வடகொரியா மீதான போர் நடவடிக்கை மட்டுமன்றி மிகப் பெரிய அளவிலான அணுசக்தி போர்ப் பயிற்சியும் கூட. இந்த நிலையால் கொரிய மண்டலத்தில் போர்தான் உரு வாகும்'' என எச்சரித்துள்ளது.

# தேனிலவுக்கு செசல்ஸ் தீவு சென்ற இளைஞர் சுறாவுக்கு இரையானார்

தேனிலவைக் கொண்டாடச் சென்ற பிரிட்டிஷ் இளைஞர் சுறா தாக்குதலில் மரணம் அடைந்தார். பிரிட்டன் இளைஞர் மரணம் அடைந்த விவரத்தை வெளியுறவுத்துறை அலுவலகம் உறுதிப் படுத்தியது.

லங்காஷயரைச் சேர்ந்த 30 வயது இயன் மார்ட்டின் ரெட்மாண்ட், வடக்கு பகுதியான செசல்ஸ் தீவுக்கு தேனிலவுக்கு சென்றபோது இந்தத் துயர நிகழ்வு ஏற்பட்டுள்ளது. அன்சேலசியோ கடற்கரையில் அந்த இளைஞர் மரணம் அடைந்ததை உள்ளூர் பொலிஸார் உறுதிப் படுத்தினர்.

இளைஞர் மார்ட்டினை சுறா தாக்கியதை நேரில் பார்த்து ஒருவர் அதிர்ச்சி அடைந்துள்ளார். சுறா தாக்கியதைக் கண்ட அந்த இளைஞரின் மனைவி அதிர்ச்சியில் உறைந்து கத்தக் கூட முடியாமல் நின்றார்.

இளைஞரின் மரணம் குறித்து கவலை தெரிவித்த அரசு நிர்வாகம் அந்தப் பகுதியில் பெரும் சுறாக்களைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தது.

# லண்டன் கலவரத்துடன் தொடர்புடைய 16 வயது சிறுவன் மீது கொலை வழக்கு

லண்டன்,ஒக.18

லண்டன் கலவரத்தில் தொடர்புடையதாக 16 வயது சிறுவன் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரிட்டன் தலைநகர் லண்டனில் கடந்த ஒகஸ்ட் 8ஆம் திகதி சமூக விரோதி ஒருவரை பொலிஸார் சுட்டுகொன்றனர். இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் லண்டன் நகர் முழுவதும் பெரும் கலவரம் ஏற்பட்டது.

கலவரத்தின் போது கண்காணிப்பு கமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகளை வைத்து 68 வயது முதியவர் ஒருவரை, 16 வயது சிறுவன் அடித்து கொன்றதாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மேற்கு லண்டனில் 68 வயதுடைய ரிச்சர்ட் பவுஸ் என்பவர் தெருவோரம் படுத்திருந்தார். அப்போது அங்கு வந்த அந்த சிறுவன் முதியவரை சரமாரியாக தாக்கியுள்ளான். இதில் தலையில் காயமடைந்த முதியவர் அதே இடத்திலேயே இறந்து விட்டார். இதனைக் கண்காணிப்பு வீடியோ காட்டிக் கொடுத்தது. இதையடுத்து அந்தச் சிறுவன் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

## நேபாளத்தில் அமைதி முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட அமெரிக்கா விருப்பம்

வாஷிங்டன், ஒக.18

நேபாளப் பிரதமர் தனது பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அங்கு அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

நேபாளப் பிரதமர் ஜலால் நாத் கனால் ஒகஸ்ட் 14ஆம் திகதி தனது பதவியை ராஜினாமா செய்தார். நேபாள காங்கிரஸ் மற்றும் மாவோயிஸ்ட்களின் நெருக்குதல் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுத்ததாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலன்; இந்த ராஜினாமா எதிர்பார்த்த ஒன்றுதான். அத்துடன் நேபாள அரசியலமைப்புச் சட்டப்படியும், அமைதியான முறையிலும் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று அமெரிக்கா எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில் நேபாள குடியரசுத் தலைவர் ராம்பரண் யாதவ் ஒகஸ்ட்21க்குள் கருத்தொற்றுமை அடிப்படையில் புதிய அரசு அமைய அனைத்துக் கட்சியினருக்கும் கெடு விதித்துள்ளார்.

# பசியால் வாடிவரும் சோமாலியா மக்களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் அபகரிப்பு

## விசாரணைக்கு ஐ.நா.உத்தரவு

பசியால் வாடும் சோமாலியா மக்களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்களை ஒரு கும்பல் அபகரித்து அந்தப் பொருள்களை மிக அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதித்து வருகின்றது. இந்த கொள்ளை குறித்த விரிவான விசாரணைக்கு ஐ.நா. சபை உத்தரவிட்டுள்ளது.

ஆபிரிக்க கண்டத்தில் உள்ள சோமாலியாவில் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் சாப்பிட உணவு இன்றி அங்கு வாழ்பவர்களில் அதாவது 4 1/2 லட்சம் மக்கள் அவதிப்படுகின்றனர். 5 வயதுக்குட்பட்ட சுமார் 29 ஆயிரம் குழந்தைகள் உணவின்றி உயிரிழந்துள்ளனர். பல குழந்தைகள் எலும்புக் கூடுகளாக நடமாடி வருகின்றன.

இதற்காக சோமாலியா அரசு நிவாரண முகாம்களை அமைத்துள்ளது. அந்த முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு ஐ.நா சபையின் உலக உணவுத் திட்ட குழு மூலம் உலக நாடுகள் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கின்றன. ஆனால் ஒரு கும்பல் அந்தப் பொருள்களைக் அபகரித்து மிக அதிக விலைக்கு விற்று பணம் சம்பாதித்து வருகின்றது.

இதனால் முகாம்களில் தங்கியிருக்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உணவுப் பொருள்கள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். இது குறித்து ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்ட குழுவிடம் புகார் செய்யப் பட்டது.

இதைத் தொடர்ந்து நடத்தப் பட்ட விசாரணையில் கடந்த 2 மாதங்களாக இந்த உணவுச் சூறையாடல் நடப்பது உறுதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து உணவுப் பொருள்கள் அபக ரிப்பு குறித்த விரிவான விசாரணைக்கு ஐ.நா சபை உத்தரவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரான்லியை வென்றது பற்றிக்ஸ்

குருநகர், ஒக.18

அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் 15 வயதுப் பிரிவில் பாடசாலைகளுக்கிடையே மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ் .சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி அணியை 207 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டி யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தில் இறங்கியது. 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. சிந்துஜன் 64 ஓட்டங்களையும், ஜெறிக்ஸன் 32 ஓட்டங்களையும், நிலக்சன் 29 ஓட்டங்களையும், வினுசாந் 27 ஓட்டங்களையும், கொலின்ஸ் 26 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். உதிரிகளாக 65 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்து வீச்சில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி சார்பாகப் பந்து வீசிய மதுசன் 9 ஓவர்கள் பந்து வீசி 69 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் க்ஜமுகன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி 30.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களைப்பெற்று இந்த ஆட்டத்தில் 207 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய சுஜீகரன் 17 ஓட்டங்களையும், பிளெசிங் 14 ஓட்டங்களையும், கமின்ஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 38 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக பந்து வீசிய வினுசாந் 2.5 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கிருஷாந்தன் 9 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிறாங்ளின்ரன் 5 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எஸ்.சிவசங்கர், எஸ்.சிறிபிரசன்னா ஆகியோர் கடமையாற்றினர்.

(எ-51)

## தளராத முயற்சி...



வெற்றிக் களிப்பு:முல்லைத்தீவு ஆறுமுகம் வித்தியாலயத்திலிருந்து கோட்ட, வலய, மாவட்ட மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் பொறுப்பாசிரியையுடன்.

# ஸ்கந்தவரோதயா 273 ஓட்டங்களால் வென்றது கிளி.மத்திய கல்லூரியை

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதின் கீழ் அணியினருக்கான துடுப்பாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி 273 ஓட்டங்களால் கிளிநொச்சி மத்திய கல்லூரியை வெற்றிகொண்டது.

ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஸ்கந்தா அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 363 ஓட்டங்களைக் குவித்தது.

ஸ்கந்தா அணியின் துடுப்பாட்டத்தில் ரி.நிரோஜன் அதிரடியாக ஆடி 80 பந்துகளில் ஒரு சிக்ஸர், 15 பவுண்டர்களுடன் 104 ஓட்டங்களைக் குவித்தார். 8 ஓட்டங்களால் தனது சதமடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்ட துவாரகன் 65 பந்துகளில் ஒரு சிக்ஸர் 16 பவுண்டரிகளுடன் 92 ஓட்டங்களைப் பெற்றார். கே.நிவேஞ்சன் ஒரு சிக்ஸர் 6 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களையும் ஆர்.மயூரதன், கே.றொபேட் நிஷான் ஆகியோர் தலா 22 ஓட்டங்களைப் பெற்றனர். கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பந்து வீச்சில் பி. பாலகோகிலன் 9 ஓவர்கள் பந்து வீசி 67 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் ஆர்.கஜீவன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.பதிலுக்கு 364 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு போராடிய கிளி.மத்திய கல்லூரி அணி 17.2 ஓவர்களில் 90 ஓட்டங்களைமட்டும் பெற்றநிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 273 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்த அணியின் வெற்றிக்காகத் தனித்து நின்று போராடிய எஸ்.பிரணவன் ஒரு சிக்ஸர் 6பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களைப் பெற்றார். எஸ். பகிதரன் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் ஆர்.மயூரதன் 3.2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 2 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 3விக்கட்டுக்களைக் கைப்பற்றினார். ரி.சிந்துஜன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் ரி.கானுஜன், கே.றொபேட் நிஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

(எ-55)




770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1319 நீலம்

மேடம் 09 28 32 41 16-08-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,153,800/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 259,413 | 20/- | 5,188,260/- |
| 2 இலக்கங்கள் | 23,884 | 40/- | 955,360/- |
| 1 இல. + லக்கினம் | 23,611 | 60/- | 1,416,660/- |
| 2 இல. + லக்கினம் | 2,175 | 200/- | 435,000/- |
| 3 இலக்கங்கள் | 645 | 1000/- | 645,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,153,800/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,810,280/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 704 | | 650,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 310,492 | | 10,460,780/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,313,000/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
04 30 34 35
ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 701 | 500/- | 350,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 704 | | 650,500/- |

இந்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-

திறப்புவிழா அழைப்பு





இன்று (18.08.2011) வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 9 மணிவரையுள்ள சுபவேளையில் எமது வியாபார ஸ்தாபனமான

Jaffna Service Station & Wheel Alignment

சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.


இங்கு,
சகல வாகனங்களுக்குமான இன்ஜெக்ரட் கிளினிங் எஞ்சின் ரியூனப், வாகன சேவிஸ், இன்ரீரியல் கிளீனிங், Body பொலிஷிங், ஹெட்லைட் பொலிஷிங், வீல் எலைமன்ட், வீல் பலன்சிங், ரயர் சேன்சிங் மற்றும் எலோவீல் (F) பில்ரர்,ரயர்கள், வாகன உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ள முடியும்.

[illegible]ளையும் அன்புடன் அழைக்கின்றோம்

கைதடி வீதி, மருதனார்மடம். தொ.பே: 0773783840,021 320 2133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் பரிதாபம்; சிம்பாப்வே வெற்றி




ஹராரே, ஒக. 18

பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில், ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி, 3-0 என்று தொடரை கைப்பற்றியது. கடைசி வரை போராடிய பங்களாதேஷ் வீரர் முஷ்பிகுர் ரஹீமின் சதம் வீணானது.

சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலிரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி 2-0 என்று முன்னிலை வகித்தது. மூன்றாவது ஆட்டம் ஹராரேயில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணிக்கு அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் (4) மோசமான தொடக்கம் கொடுத்தார். கடந்த இரண்டு ஆட்டத்தில் அரைச் சதம் அடித்து அசத்திய சிபன்டா (27), இந்த முறை சோபிக்கவில்லை. பின்னர் இணைந்த மசகட்சா, தைபு ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. பொறுப்புடன் ஆடிய இவர்கள் இருவரும் அரைச் சதம் கடந்தனர். இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 142 ஓட்டங்கள் சேர்த்த போது, மசகட்சா (74) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த எர்வின் (18) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய தைபு 103 பந்துகளில் எட்டு பவுண்டரிகள் உட்பட 83 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சிக்கம்புரா (31) ஓரளவு கைகொடுத்தார். சிம்பாப்வே அணி 50 ஓவரில் 7 விக்கெட்டுக்களுக்கு 250 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் சார்பில் ருபெல் ஹொசைன், சகிப் அல் ஹசன் தலா 2, ஷபியுல் இஸ்லாம், நஜ்முல் ஹொசைன், மக்முதுல்லா தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், இம்ருல் கெய்ஸ் ஜோடி சுமாரான தொடக்கம் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு 50 ஓட்டங்கள் சேர்த்த போது இம்ருல் கெய்ஸ் (16) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சித்திக் (12) நிலைக்கவில்லை. பொறுப்புடன் ஆடிய தமிம் இக்பால் (44) ஆறுதல் அளித்தார். மத்தியவரிசையில் களமிறங்கிய அணித்தலைவர் சகிப் அல் ஹசன் (19), சுவகோடா ஹோாம் (32), மகம துல்லா (14) உள்ளிட்டோர் பெரிய அளவில் சோபிக்கவில்லை.

கடைசி ஓவரில், பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு எட்டு ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஒரு விக்கெட் மீதமுள்ள நிலையில், முதல் பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்த முஷ்பிகுர் ரஹிம், ஒரு நாள் அரங்கில் தனது முதலாவது சதம் அடித்து அசத்தினார். அடுத்த ஐந்து பந்தில் ஆறு ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், இரண்டாவது பந்தை முஷ்பிகுர் ரஹிம் (101) தூக்கி அடிக்க, சிபன்டா அருமையாக பிடியெடுத்தார்.

பங்களாதேஷ் அணி 49.2 ஓவரில் 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆட்ட நாயகனாக பங்களாதேஷ் வீரர் முஷ்பிகுர் ரஹிம் தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் சிம்பாப்வே அணி, ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரை 3-0 எனக் கைப்பற்றியது. தவிர சிம்பாப்வே அணி, ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர், பங்களாதேஷ்க்கு எதிரான ஒரு நாள் தொடரை சொந்த மண்ணில் கைப்பற்றியது. முன்னதாக கடந்த 2006 இல், சிம்பாப்வே அணி 3-2 என்று பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரை வென்றது. (15)

# அசத்தப் போவது யாரு?

டில்லி, ஒக. 18

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்த நிலையில், இந்திய அணி கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் இன்று பங்கேற்கின்றது. ஒரு நாள் தொடரை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள, இந்திய அணி இதில் வெற்றிபெற முயற்சிக்கும் என்று தெரிகின்றது. இருப்பினும் இந்த ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி வெற்றிபெறும் என்று அந்த அணி வீரர் புரோட் தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து சென்ற இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதல் 3 ஆட்டங்களில் தோல்வியடைந்த இந்திய அணி, தொடரை இழந்துள்ளது. இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் ஓவல் மைதானத்தில் இன்று தொடங்குகின்றது.

எப்போதும் இல்லாத அளவுக்கு இந்தத் தொடரில் இந்திய அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இங்கிலாந்தின் பீற்றர்சன், குக் ஆகிய இரு வீரர்கள் இரட்டை சதம் அடித்த நிலையில், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் பள்ளி, கிளப் அளவிலான ஆட்டத்தைப் போல விளையாடியது அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

பந்து வீச்சாளர்கள் தொடர்ந்து சிறப்பாக செயற்பட முடியாமல் திணறுவது, கையில் கிடைக்கும் எளிதான பிடியெடுக்கும் வாய்ப்புகளை கோட்டை விடுவது என்று, எல்லாமே மோசமாக அமைய, முதலிடம் பறிபோனது. இப்போது இதெல்லாம் முடிந்து போன விடயமாகியுள்ளது. கடைசி டெஸ்டில் வெற்றி பெறுவதற்கான வழியை கண்டறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், இதுபோன்ற சாதகமான முடிவுகள், அடுத்து வரும் ஒரு நாள் தொடரில், மன உறுதி மற்றும் களத்தில் துடிப்புடன் செயற்பட உதவும். அதிரடி வீரர் சேவக், கம்பீர், சச்சின், டிராவிட், லக்ஸ்மன் ஆகியோர் துடுப்பாட்டத்தில் சாதிக்க முயற்சிக்க வேண்டியுள்ளது.

பந்து வீச்சில் ஸ்ரீசாந்த், இஷாந்த் சர்மாவுக்குப் பதில் முனாப் பட்டேல், ஆர்.பி.சிங்கிற்கு இன்றைய ஆட்டத்தில் வாய்ப்பு கொடுக்கப்படலாம். (15)

இது பீற்றர்ஸனின் விருப்பம்

# பார்த்தாலே பயம் பற்ற வேண்டும்

லண்டன், ஒக. 18

இங்கிலாந்து கிரிக்கெட் அணியுடன் போட்டி என்றால் மற்ற அணிகள் அச்சப்படும் நிலை உருவாக வேண்டுமென்று அந்த அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரரான பீற்றர்சன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியை தொடர்ந்து 3 டெஸ்ட்களில் தோற்கடித்து டெஸ்ட் தரவரிசையில் இங்கிலாந்து முதலிடத்தைப் பிடித்துள்ள நிலையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:



முன்பு ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் எதிரணியை அச்சுறுத்தும் வகையில் பெயர் பெற்றிருந்தன. 2006 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் அந்த நாட்டு அணிக்கு எதிரான போட்டியில் விளையாடியபோது, அவர்கள் எங்களை ஒவ்வொருநாளும் தோற்கடித்தார்கள். அங்கு கிரிக்கெட் தொடரை முற்றிலுமாக இழந்தோம். அது எங்களை வெகுவாகப் பாதித்தது. அப்போது இங்கிலாந்து அணியும் இதுபோன்ற பலமான அணியாக வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அது மிகக் கடினமானது என்று தெரியும்.

ஆனால் இப்போது குறிப்பிடத்தக்க அளவு வெற்றிகளைப் பெற்று பலமான அணி என்பதை நிரூபித்துள்ளோம். பலம் வாய்ந்த இந்திய அணியைத் தோற்கடித்துள்ளதால் மற்ற அணிகளுக்கு இனி எங்கள் அணி குறித்து அச்சம் ஏற்படும். இந்தியாவுக்கு எதிரான 4 ஆவது, கடைசி டெஸ்ட் ஆட்டத்திலும் வென்று 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம் என்றார் பீற்றர்சன். (15)

# குற்றம் சாட்டுகிறார் கபில் தேவ்



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் அணியாக ஒருங்கிணைந்து விளையாடவில்லை. டோனி உள்ளிட்ட மூத்த வீரர்கள், இளம் வீரர்களுக்கு தூண்டுகோலாக இருக்கவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்த இந்திய அணி, பல தரப்பில் இருந்தும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது. இந்த நிலையில் தொடர் தோல்வி குறித்து கபில்தேவ் கூறியதாவது:

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய வீரர்கள் ஒருங்கிணைந்து விளையாடவில்லை. இதற்காக நான் யாரையும் குறிப்பாக குற்றச் சுமத்தவில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரை, இந்திய அணியினர் அதிகப்படியான போட்டியில் பங்கேற்று வருவதாகத் தெரிகின்றது. உலகக் கிண்ணத் தொடர் முடிந்த, நான்கு நாள்களில் ஐ.பி.எல் தொடங்கியது. இது முடிந்த ஆறு நாள்களில் மேற்கிந்தியத்தீவுகள் தொடர் நடந்தது. இப்போது இங்கிலாந்தில் விளையாடுகின்றனர்.

இதில் தொடர்ந்து மோசமான தோல்விகள் கிடைக்க, டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பறிபோனது. இதற்கு டோனி உள்ளிட்ட மூத்த வீரர்கள், இளம் வீரர்களுக்கு தூண்டுகோலாக இருக்கவில்லை என்பது தான் உண்மை. எப்படி பந்து வீச வேண்டும் என்று இளம் வீரர்களுக்கு யாரும் ஆலோசனை சொல்லவில்லை. 'மிஸ்டர் கூல்' என்றழைக்கப்படும் அணித்தலைவர் டோனி, இஷாந்த் சர்மாவுக்கு சரியான முறையில் ஆலோசனை கொடுக்க வேண்டும் என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுப் பணிப்பெண் தேவை

நெல்லியடியில் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை. நம்பிக்கைக்கும் வேலைத் திறமைக்கும் ஏற்ப கூடிய சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புக்கு- S.உமாபாலன்
T.P- 0775130092

## மரண அறிவித்தல்

### முருகேசு திருஞானசம்பந்தர்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திருஞானசம்பந்தர் நேற்று (17.08.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தங்கமணி தம்பதியரின் மூத்த மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பாமினி(பாறின்), குமுதினி, தயாளினி(ஜேர்மனி), தேவதர்ஷன் (பிரான்ஸ்), சுதர்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சாட்சரம் (பாறின்), சதீஸ்குமார், சுபாஸ்கர்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், ஜெருஷா, ஜோதி, சஞ்சீவா, தருணிகா, மகீஷ், ராகீஸ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை ,பரமேஸ்வரி மற்றும் ராணிமலர்(ஜேர்மனி), கந்தசாமி (பிரான்ஸ்), இந்திரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும், தெய்வராஜா, மகேந்திரம், புவனேஸ்வரி(ஜேர்மனி), இராசேந்திரம், இராசகுலேந்திரன் (ஜேர்மனி), இலட்சுமிதேவி (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து சீயாக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சேல்ஸ்மன் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு வியாபாரம் பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு : 0212222063

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, நெடுங்குளம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 3 ½ பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 3526044, 077 9725860

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### திசைமுகப்படுத்தும் நிகழ்வு
### Orientation Programme-2011

**வணிக முதற்தேர்வு-2010 (வெளிவாரி)**
**வணிக இரண்டாம் தேர்வு- 2010(வெளிவாரி)**
**(புதிய பாடத்திட்டம்)**

*மேற்படி வணிக முதற்தேர்வு மற்றும் வணிக இரண்டாம் தேர்வுகளுக்கு பதிவு செய்த மாணவர்களின் நலன் கருதி, 20.08.2011 தொடக்கம் 01.10.2011 வரை, ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திசைமுகப்படுத்தும் வகுப்புகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வணிகத்துறை விரிவுரை மண்டபத்தில், பின்வரும் நேர அட்டவணைகளின் படி நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.*

*புதிய பாடத்திட்டத்தின் கீழ் மேற்படி தேர்வுகளுக்கு பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.*

| | தேர்வு | நேரம் | திகதி |
|---|---|---|---|
| 01 | வணிக முதற்தேர்வு (புதிய பாடத்திட்டம்) | காலை 9 தொடக்கம் மாலை 3.30 வரை | 20/08, 21/08, 03/09, 04/09, 10/09, மற்றும் 11/09/2011 (சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகள்) |
| 02 | வணிக இரண்டாம் தேர்வு (புதிய பாடத்திட்டம்) | காலை 9 தொடக்கம் மாலை 3.30 வரை | 17/09, 18/09, 24/09, 25/09, மற்றும் 01/10/2011 (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்) |

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்
17.08.2011

(சி/3055)

## மாகாணசபை உறுப்பினர் படையினரால் தாக்கப்பட்டார்

இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் கிழக்கு மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினர் ரி.ஏ. மாசிலாமணி (வயது-62), மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஊரணியில் நேற்று பகல் பெண்ணொருவர் இனந்தெரியாத நபரினால் தாக்கப்பட்டமை தொடர்பாக நேற்றுமாலை அப்பகுதி மக்களுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது கவச வாகனத்தில் வந்த இராணுவத்தினர் அங்கிருந்த பலரை தாக்கியதாகவும் இதன்போது தானும் தனது இணைப்புச் செயலாளரும் தாக்கப்பட்டதாகவும் மாகாண சபை உறுப்பினர் மாசிலாமணி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் மாகாண சபை உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இருதய நோயாளியான தனக்கு இத்தாக்குதலின் பின் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் இது தொடர்பாக பொலிஸாரும் இராணுவத்தினரும் தன்னிடம் வாக்குமூலம் பெற்றதாகவும் மாசிலாமணி தெரிவித்தார்.(எ-10)

## தவறி விழுந்து இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் ஓக. 18

விவசாயக் கண்காட்சி நடத்துவதற்காக அதற்கான பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மேலிருந்து கீழே விழுந்து உட்காயங்களுக்குள்ளானார். தற்போது அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் திருநெல்வேலி விவசாயத்திணைக்களத்தில் நேற்று பிற்பகல் இடம் பெற்றது. சம்பவத்தில் இருபாலை கிழக்கு கோப்பாயைச் சேர்ந்த ம.ஸ்ரீதரன் (வயது-31) என்ற இளைஞரே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

(த-4)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பரீட்சை நிலைய மேற்பார்வையாளராகக் கடமையாற்றவுள்ளோருக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் பரீட்சைக்கான காகித தாரிகளை அந்தந்த இணைப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(எ-207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சவீனம்மா சந்தியாப்பிள்ளை
(பாக்கியம்)

கரவெட்டி கேணியடியைச் சேர்ந்த சவீனம்மா சந்தியாப்பிள்ளை நேற்று (17.08.2011) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகோரி, அன்னம்மா அவர்களின் புதல்வியும் காலஞ்சென்ற வெலிச்சோர்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும் கலிஸ்ரா, பவுலீனா, விக்டர், றெஜினா, கிறேஸ் ஆகியோரின் அன்புத் தாயும் வினின்ஸ்டன், ஜெயக்குமார், தர்ஷினி, டெஸ்மன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் மரியமுத்து, மதுரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பெஸ்மன், மரிஸ்டன், வொஸ்ரீனா, ஒலிவியா, ஜொஷ்வா, ஜொஆன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.08.2011) வியாழக்கிழமை கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் பி.ப 3 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
ஜெயக்குமார்
(மருமகன்)

### கந்தையா தயாநிதி



அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தயாநிதி கடந்த (16.08.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணர் மற்றும் அன்னம்மா(கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் கோகிலாவின் அன்புக் கணவரும் நிரூபன், கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாநிதி(கனடா), கிருபாநிதி, பதுமநிதி, ஜெயநிதி, அருள்நிதி(சுவிஸ்), காலஞ்சென்ற ரூபதநிதி மற்றும் கெங்கநிதி(டென்மார்க்), காலஞ்சென்ற நவநிதி மற்றும் சங்கநிதி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேசவன்(கனடா), ஸ்ரீதரன்(கனடா), முரளிதரன்(சுவிஸ்), கோமளா(பிரான்ஸ்), கலாதரன்(கனடா), தவாஈஸ்வரி(கனடா), அனுராதா, மல்லிகாதேவி, வசந்தகுமாரி, மங்கையர்க்கரசி(சுவிஸ்), கலைமதி(டென்மார்க்), செல்வறஜனி(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பயிற்றோலை,
அச்சுவேலி.

தகவல்:
க.ஜெயநிதி
(சகோதரன்)

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்குமிடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | 6000/- | 4250/- |
| கணினி மேசை | 6000/- | 4250/- |
| கணினிக் கதிரை (alpha) | 6500/- | 5250/- |
| Steel அலுமாரி | 13500/- | 11250/- |
| சாப்பாட்டு மேசை | 16500/- | 13050/- |
| சாப்பாட்டுக் கதிரை | 4250/- | 3750/- |
| மெத்தைகள் (Arpico) | | |

தொடர்புகளுக்கு: 0773583879, 021 222 7892

## அமரர் சிவஸ்ரீ யோ.பிரபாகரேஸ்வரக் குருக்கள்
### அறக்கொடை நிதியம்

மேற்படி நிதியத்தின் அனுசரணையில் இந்துமத குருமாருக்கான வேத ஆகமப் பாட வகுப்புகள் ஆவணி முதலாம் திகதி , இன்று (18.08.2011) வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் நடைபெறும். அந்தணப் பெருமக்கள் கலந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தியடி.
செயலாளர்

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு
(மாலை 4 மணி -8 மணி வரை தொடர்பு கொள்ளலாம்)
தொடர்பு- 0756363945

## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பேர்கொண்ட குடும்பத்துக்கு Commode வசதிகொண்ட வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. (வீட்டில் Annex/ மேல்மாடி வீடு விரும்பத்தக்கது)
தொடர்பு : 077 6139307

## விற்பனைக்குண்டு

YAMAHA ரம்ஸ்செற், YAMAHA ஒடியோ மிக்சர் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0758058612

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் நான்கு அறைகளுடன் கூடிய, தனி வளவில் அமைந்த வீடு குடும்பம் ஒன்றுக்குத் தேவை
தொடர்பு : 078 480 6957

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லுக்குளம் பகுதியைத் தாரைவார்க்க திரைமறைவில் சதிமுயற்சிகள் நடக்கிறது

## சூழலியலாளர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.18

புல்லுக்குளமும், அதனை ஒட்டிய மணிக்கூட்டுக் கோபுரப் பக்கமாக அமைந்துள்ள நிலப்பரப்பை, ஏ-9 வீதியில் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உல்லாசவிடுதி அமைத்திருக்கும் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு 33 வருடகாலக் குத்தகைக்கு விடும் முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் மு.செ.சரவணபவவிடம் கேட்டபோது, இவ்வாறானதொரு திட்டம் இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்றும் இதன் புனர்நிர்மாண வேலைகளை நீர்ப்பாசனத் திணைக்களமே மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

வடமாகாண நீர்ப்பாசன திணைக்கள தலைவர் கே.எஸ். சிவபாதத்திடம் கேட்டபோது தமது திணைக்களம் மேற்பார்வை மட்டுமே செய்வதாக தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'றப்' திட்டப் பணிப்பாளர் சா.சுதர்சனிடம் கேட்டபோது, 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. தற்போது புல்லுக்குளத்துக்கு வருகின்ற கழிவு நீரை கடலுக்கு திருப்பும் வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஐங்கரநேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ். நகரின் மத்தியில் அமைந்திருக்கும் புல்லுக்குளத்தை உல்லாசப் படகுச் சவாரிக்கும் பயன்படுத்தும் திட்டத்தை உள்ளடக்கி, உல்லாச விடுதி ஒன்றை புல்லுக்குளத்தை அண்மித்த நிலப்பரப்பில் நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரை அழகு படுத்தவும் சுற்றுலாத்துறையை ஊக்கவிக்கவும் உதவும் ஓர் அபிவிருத்தித் திட்டமாகவே இது வெளிக்காட்டப்படுகிறது. இருப்பினும் இதன் பின்னணி சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.

குடாநாட்டின் பழைமை வாய்ந்த குளங்களில் ஒன்றான புல்லுக்குளத்தைப் புனரமைக்க வேண்டும் என்பதிலோ அல்லது அந்தச் சூழலின் சமநிலை குலையாத வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதிலோ மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்த மக்களின் பொதுச் சொத்தான நீரில்லம் ஒன்றைத் தன்யார் ஒருவர் இலாபம் ஈட்டுவதற்காகத் தாரைவார்ப்பது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

யாழ். குடாநாடு எதிர்காலத்தில் நன்னீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அபாயம் இருப்பதாக நீரியல் நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

இவ்வாறான தொரு நிலையில் பொதுக்குளம் ஒன்றைத் தனியாரின் நிர்வகிப்பின் கீழ் நீண்டகால குத்தகைக்கு விடுவது பொருத்தமானதாக இருக்காது. இதனை அனுமதிப்பது வருங்காலத்தில் எமது வேறு நீர்த் தேக்கங்களும் வற்றாத கிணறுகளும் நீர் வியாபாரிகளிடம் பறிபோவதற்கான தவறான முன்னுதாரணம் ஆகிவிடும்.

மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தை வெளிப்படையான முறையான கேள்வி கோரல் இல்லாமல் திரைமறைவு ஒப்பந்தங்களின் அடிப்படையில் தனியாருக்கு கையளிப்பது என்பது வலுவான கண்டனத்துக்குரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

### மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட ஓட பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர். இதில் பலர் காயமடைந்தனர். மர்ம மனிதனின் தாக்குதலுக்கு இலக்கான இளம்பெண் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பொலிஸ் காவலரணில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத் தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட எம்.பிக்களான பொன்.செல்வராசா மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரும் பொலிஸாரின் கண்ணீர்ப்புகைத் தாக்குதலுக்கு இலக்காகினர். சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் கலைந்து சென்ற பின்னர் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். (த-சி)

### இந்தியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ன்ர். இந்த முயற்சிகளை முறியடிப்பதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் ஒன்றுபட வேண்டும். வேறெப்போதும் இல்லாதவாறு இலங்கை குறித்து இந்தியாவில் பேசப்படுகின்றது. தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் இலங்கைக்கு எதிராக ஒவ்வொரு தீர்மானங்களை கொண்டுவர ஆயத்தமாகிறார்.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தியாவில் இலங்கை குறித்து விவாதிக்கப்படவில்லை.

இலங்கைக்கு எதிராக மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில், 1987 ஆம் ஆண்டில் இந்திய படையினர் இலங்கையில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்ட போது நடைபெற்ற சம்பவங்கள் முதலில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் முதல் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் மட்டும் விசாரணை நடத்தப்படக் கூடாது எனவும் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைத்து தலைவர்களையும் யுத்தம் செய்த போதிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மிகவும் சொற்ப அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்களே இடம்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

### உருப்படியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யவுள்ளதாகவும் அவை மேலும் கூறின. நிபந்தனைகளுக்கு உரிய பதில் அளிக்காத அரசுடன் தொடர்ந்தும் பேசிப் பயனில்லை என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

#### கோரிக்கை அநீதியானது

இதேவேளை-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள மூன்று அம்சக் கோரிக்கை அநீதியானது. அந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவித காலக்கெடுவும் விதிக்கவில்லை என நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

எனினும், கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற 10ஆம் கட்டப் பேச்சின்போது அரசிடம் முன்வைக்கப்பட்ட மூன்று அம்சக் கோரிக்கைகளுக்கான பதிலை அரசு எதிர்வரும் 10 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்றும், அவ் வாறு சாதகமான பதில் அறிவிக் கப்படாத பட்சத்தில் அரசுடனான பேச்சுகள் முறிவடையலாம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே பல தடவைகள் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இது தொடர்பாகக் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் முன்வைத்துள்ள மூன்று அம்சக் கோரிக்கைகள் அநீதியானவை. இருந்தும், அந்தக் கோரிக்கைகளை அரசு முற்றாக நிராகரிக்கவும் இல்லை.

அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ள மூன்று அம்ச கோரிக்கைகளுக்குப் பதில் வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவித காலக்கெடுவும் அரசுக்கு விதிக்கவில்லை.

இது தொடர்பாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை அறிந்தேன் என்றும், அவை குறித்து ஊடகங்களில் கூறினால் மட்டும் பயனில்லை. அரசுடன் தொடர்புகொள்ள வேண்டும். - என்றார். (த)

### தமிழ்மொழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் நேற்று பகுதி II, பகுதி III வினாத் தாள்களும் புதிய பழைய பாடத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுள்ளன. இதில் புதிய பாடத் திட்டத்தின் பரீட்சை வினாக்களே இவ்வாறு வெளியான தாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பரீட்சையில் கேட்கப்பட்ட அனைத்து வினாக்களும் யாழ்ப்பாணத்தின் பல்வேறுபகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

யாழ்.நகரப் பகுதி, அச்சுவேலி, திருகோணமலை ஆகிய பகுதிகளின் தனியார் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களே இவ்வாறு பரீட்சை வினாக்களை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாகக் கட்டுரை வினாவில் மூன்று கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை 'கற்றது கை மண்ணளவு', 'கைலாசபதியின் திறனாய்வு' போன்றன பரீட்சை வினாவில் காணப்படுகின்றன.

இதுபோல சிலப்பதிகாரத்தின் பாடல், இலக்கணப்பகுதி என்பனவும் முழுமையாக ஆசிரியர்களால் தாம் கற்பிக்கும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டவையாகவே அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சை குறித்து இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய சில மாணவர்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது சிலர் சந்தோசமாகவும், சிலர் துக்கத்துடனும் கருத்துத் தெரிவித்தனர்.

இதில் பல மாணவர்கள் தாம் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், புதிய பாடத்திட்டத்தின் கீழ் முதற் தடவையாகத் தோற்றும்போது கேள்வி அமைப்புகள் எவ்வாறு இருக்கும் என்று தெரியாமல் பரீட்சையை எதிர்கொண்டதாகவும் தமக்குப் பரீட்சை வினாக்கள் தொடர்பாக முன்கூட்டி எதுவும் தெரியாது எனவும் தெரிவித்தனர். பெரும்பாலும் கஸ்ரப் பிரதேச மாணவர்களே இவ்வாறு தெரிவித்தனர்.

தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் தாம் திருப்தியாகப் பரீட்சையை எதிர்கொண்டாகத் தெரிவித்தனர்.

இதேவேளை-

உயர்தர தமிழ்ப் பாடப் பரீட்சை வினாக்கள் ஏற்கனவே வெளியாகியதா என யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் இருவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது:

தேர்ச்சிவாய்ந்த ஆசிரியர்கள் சிலர் தமது அனுபவத்தின் அடிப்படையில் வினாக்களைத் தயாரிக்கலாம். அவை இறுதிப் பரீட்சையில் வந்துவிட்டால் அதைவைத்து வினாத்தாள் வெளியாகிவிட்டது என்று முடிவெடுக்க முடியாது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சையில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்களது நம்பிக்கையை இவ்வாறான கதைகள் மூலம் குழப்பிவிடக் கூடாது. எவ்வாறாயினும் பரீட்சை வினாத்தாள் வெளியாகியுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படும்படி உண்மைகள் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுடன் அணுகிப் பரீட்சையை மீள நடத்த ஏற்பாடுகள் செய்ய முடியும். எழுந்தமானதாக எதனையும் கூறமுடியாது - என்று தெரிவித்தனர்.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசிரியர் மாணவர்களிடம் சத்தியம் கேட்டபின் பரீட்சை வினாத்தாள்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-10)

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சில சந்தரப்பங்களில் கிளைக்குழுத் தேர்தல்களை நிறுத்துமாறு கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரிகளிடம் அரச சார்புக் கட்சி ஒன்று கேட்டுக் கொண்டதற்கு இணங்கத் தேர்தல்களை இடை நிறுத்துவதற்கு முடிவாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி தெற்கு, கரைச்சி வடக்கு, பூநகரி, அக்கராயன், வட்டக்கச்சி ஆகிய சங்கங் களுக்கான கிளைக்குழுத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் தேர்தலில் அரச சார்பு நிலை எட்டப்பட வேண்டும் என்பதற்காக அரசு பக்கமுள்ள தமிழ்க் கட்சி ஒன்றும், இராணுவத்தினரும் கிளைக்குழு வேட்பாளர்களிடம் வாக்காளர்களிடமும் அதிகாரங்களைப் பிரயோகிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த அக்கராயன் சங்கக் கிளைக் குழுத் தேர்தலை உடனடியாக நிறுத்துமாறு கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவரிடம் இருந்து சங்கத்தின் தலைவருக்குத் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கத்தின் தலைவர் எஸ்.கீதாவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, எழுத்துமூலமான அறி வித்தல் எதுவும் கிடைக்கவில்லை என்றார்.

கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குள் தமது ஆதரவாளர்களைப் புகுத்துவதன் மூலம் வன்னியில் அரசின் செல்வாக்கை அதிகரிக்கவே இந்த முயற்சி எடுக்கப் படுவதாகக் கூறப்படுகின்றது. (த-426)

வீடு விற்பனைக்கு
நல்லூர் செட்டித்தெருவுக்கு அண்மையில் நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்று மதிலுடன் கூடியது.
தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்- 0772267191

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறி

# பெண்கள் அமைப்புகள் விசனம் தெரிவிப்பு

நாட்டில்தற்போது ஏற்பட்டுள்ள மர்ம மனிதன் பீதி காரணமாக, பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவுள்ளதாக பெண்கள் அமைப்புக்கள் தெரிவித்தன. இந்த விடயம் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தின.

பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு, மனித உரிமைகளுக்கான இல்லம், பெண்கள் சக்தி ஆகிய அமைப்புக்கள் ஒன்றினைந்து இன்று புதன்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்தது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பின் பணிப்பாளர்களான குமுதினி சாமுவெல், சீபாலி கொட்டேகொட, மனித உரிமைகளுக்கான இல்லத்தின் பணிப்பாளர் ஷெரின் மற்றும் பெண்கள் சக்தி சார்பாக ரொஹினி வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்கள் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிராமங்களில் நடமாடும் மர்ம மனிதர்கள் பெண்களின் மார்பகப் பகுதிகளையே குறி வைத்து தாக்குகின்றனர். மார்பகப் பகுதி பெண்களின் முக்கிய பகுதியாகும். இதில் யாரையும் கைவைக்க எந்த பெண்ணும் விடமாட்டாள்.

இவ்வாறானபிரச்சினைகள் நாட்டில் பாரிய பிரச்சினைக்கு வழிவகுக்கும். எனவே இந்த மர்ம மனிதன் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துபவர் கள் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்சினையிலிருந்து பெண்களை பாதுகாக்க வேண்டும். இதற்காக பொலிஸார், கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் அனைவரும் ஒன்றினைந்து செயற்பட வேண்டும்.

இதன் ஊடாகவே பொலிஸார் மற்றும் சட்டத்தை அமுல்படுத்து பவர்களும் சமூகத்தின் நம்பிக் கையை பெற முடியும்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் காவத்தையில் ஆரம்பமான பெண்களை தாக்கும் சம்பவம் பின்னர் அம்பாறை மட்டக்களப்பு என திருகோணமலை வரை சென்றுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் 2006 மற்றும் 2007ஆம் ஆண்டு கால பகுதியில் நடைபெற்றுள்ளன. அப்போது ஒழுங்கான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப் படமையினாலேயே தற்போதும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

எனவே, இந்த மர்ம மனிதன் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் இப்பிரச்சினை இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு.

இந்த மர்ம மனிதன் பிரச்சினை காரணமாக க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் பெண்களுக்கும் அதிக பிரச்சினை ஏற்படுகின்றது.

மாலை 4 மணிக்கு பின்னர் பெண்கள் வீதிகளில் செல்லவோ அல்லது வீடுகளில் தனிமையாக இருக்கவோ பயப்படுகின்றனர். (த-10)

# முருகன், சாந்தன், பேரளிவாளனுக்கு ஆளுநர் உத்தரவு கிடைத்ததும் தூக்கு

ஆளுநரின் உத்தரவு கிடைத்த 7ம் நாள் ராஜீவ் கொலையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரை வேலூர் சிறையில் தூக்கிலிடு வோம் என்று சிறைத்துறை இயக்குநர் டி.ஜி.பி டோக்ரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப்புலிகள் முருகன், சாந்தன் மற்றும் பேறிவாளன் ஆகிய 3 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவர்கள் தங்கள் தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீலுக்கு கருணை மனுக் கள் அனுப்பி வைத்தனர். ஆனால் அவர்கள் மனுக்களை பிரதீபா பாட்டீல் நிராகரித்துள்ளார்.

இதையடுத்து அவர்களின் தூக்குத் தண்டனை உறுதியாகி விட்டது. ஆனால் அவர்களின் தூக்குதண்டனையை ரத்துசெய்யக் கோரி மீண்டும் நீதிமன்றத்திற்கு செல்லவிருப்பதாக வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

அந்த 3 பேரும் எப்பொழுது தூக்கிலிடப்படுவார்கள் என்று கேட்டதற்கு, சிறைத்துறை இயக்குனர் கூடுதல் டி.ஜி.பி டோக்ரா கூறியதாவது,

ராஜீவ் காந்தி கொலையாளிகள் 3 பேரின் கருணை மனுக்களையும் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இருப்பினும் இது குறித்த அதிகாரப்பூர்வமான உத்தரவு ஆளுநரிடம் இருந்து வர வேண்டும். அதற்காகத் தான் காத்திருக்கிறோம் - என்றார். (எ-10)

## சம்பந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுடனான 10ஆம் கட்டப் பேச்சு கடந்த 4ஆம் திகதி நடைபெற்றபோது, கூட்டமைப்பு முன்வைத்த மூன்று அம்சக் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 10 நாட்களில் பதில் வழங்கப்பட வேண்டும் என அரசுக்கு காலக்கெடு விதித்தோம்.

அந்தக் காலக்கெடு இன்றுடன் நிறைவடைகின்ற நிலையில், அரசிடமிருந்து எந்தவொரு பதில் சமிக்ஞையும் இதுவரை கிடைக்கவில்லை.

அத்துடன், அரசுடனான அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதி இதுவரை தீர்மானிக்கப் படவும் இல்லை. எதுவித அழைப்பும் விடுக்கப்படவுமில்லை.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். இதனால், அரசுடனான அடுத்தகட்டப் பேச்சு மற்றும் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக அவர் இலங்கை வந்த பின்னர் கூடித் தீர்மானிக்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (த-சி)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளானது.

இதில் பயணித்தவர்களில் ஒருவர் அவ்விடத்திலேயே பலியானார் மேலும் காயமடைந்த 8 பேரும் முருங்கன் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டவேளை அங்கு ஒருவர் மரணமானார்.

மரணமானவர்கள் கிண்ணியா, குஞ்சன்கேணியைச் சேர்ந்த எம்.எஸ்.சப்ராஸ் (வயது 17), கிண்ணியா கட்டையாறைச் சேர்ந்த எம்.மகிடுத் (வயது 52) என்பவர் எனத் தெரியவந்தது.

இவர்களது சடலம் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.ஆசாத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-10-601)

# ஆங்கிலமொழிமூல கல்விமாணி நெறி நேர்முகப் பரீட்சை சனிக்கிழமை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தேசிய கல்வி நிறுவக பிராந்திய நிலையத்துக்கு ஆங்கில மொழிமூல கல்விமாணி பட்டநெறி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் கல்லூரியில் இடம்பெறும்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உள்ள 67 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

இமானுவேல் யோசப் லெஸ்லி, ரீ.இந்துரேகா, நாகலிங்கம் மயூரன், சிவசுப்பிரமணியம் நிரோஜனன், தங்கராஜா கமலாதேவி, மகேந்திரன் மதிவதனி, குகராஜ் நயனாவதி, முருகேசன் பிரதீபன், கௌரிவாசன் திவ்யா, மயில்வாகனம் ஜெயகதீஸ்வரன், சாமுவேல் பிரதீவ ஆனந், ஸ்ரனிஸ் ஜெலீபன் சிந்துஜா, ஜெயக்குமார் தமிழினி, கனேசன் வத்சலா, சூசைப்பிள்ளை டக்ளஸ்.

நடராஜா ஜெயராஜ், செல்வரட்ணம் சிவகுமார், சிவராஜினி வரதன், செரன் பேனிற்றா ஜோசப் சாந்தராஜன், ரதீஸ் நிருபா, தர்மசேகரம் உஷாநந்தி, லினேஸ் குமார் பிருந்தா - நாமகள் நந்தகுமாரன், கனேந்திரா சுபத்திரா, தேவரதி சுதேஸ் கரன், யசோதரன் தர்சினி, முத்துலிங்கம் வமனன், சிவகுகன் ஆரபி, யேசுதாசன் பெனடிக்ற் றேமன், நடராஜா நரேந்திரன், ஞானமலர் சிவமோகன்-

ஞானப்பிரகாசம் யஸ்ரின் மேரி, புதன்சலி கவிதா, சிவலிங்கம் திரு வருட் செல்வன், சபாரத்தினம் எழில், கேதீஸ்வரா மீரா, விநாசித்தம்பி சுமதி, பராகரன் விஜிதா, பீற்றர் கிருபாகரன் சேவியர், வேலு பெரியசாமி.

ஐயாத்துரை ராஜமதன், வடிவேல் அரவிந்தன், ராஜசிறிசுந்தரேசன் பிருந்தா, சண்முகம் ஜெயந்தி, ஜெயகப்பிரியா பிரதீபன், தம்பிஜயா சிவரட்ணம் சிவகுமார், ரகுநாநந்தன் சுதர்சினி, தங்கவேலாயுதம் தபோதினி, வீரசிங்கம் தயாகரன், தர்ம குலசிங்கம் விஜயகரன், அஜித் ஞானேஸ்வரி, முருகானந்தன் சிவானுஜா, நவதாசன் தயாளினி, தனுராஜ் தயாவதி, பொன்னுத்துரை லிங்கேந்திரா, சகோதரி நிதான்சலி, உசாந்தன் தர்மினி, வி.பிரசாத், ஆர். செந்தூரன்.

அந்தோனிப் பிள்ளை ஜோன் பிரகாஸ், சுஜீவ குமார் சிறிவித் தியா, ஜீவரட்ணம் ஜீவிதா, சிதம் பரநாதன் கதிர் மகன், சிவயோகன் பாமினி, கிருஸ்ண வேனி நிறஞ்சன், மணிவண்ணன் சசினி, சத்திய வான் சிவலட் சுமி ஆகியோர். (ஒ)

## சிறிகோத்தா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தை தீவிரப் படுத்திய சஜித் பிரேமதாச தரப்பு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியைத் துறக்கும் வரை விகாரமகா தேவி பூங் காவை விட்டு வெளியேற மாட்டோம் எனவும் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் அறிவித்து போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தனர். (த-சி)

**Bus Driver தேவை**

A Class Licence உள்ளவர்கள் நேரில் வரவும். (45 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மாதச் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

-அதிபர்-

The Express Institute
Irupalai Junction-Kopay

**தேவை**


உடன் காசுக்குத் தகரக் கொட்டகை தேவை.

தொடர்பு : 077 3583879

**வெல்லுங்கள் பரிசு ரூ.4,000**

புதிர் போட்டி இல 3

அடுத்து வரும் உருவை தெரிவு செய்க?



(1) (2) (3) (4) (5) (A) (B) (C) (D) (E)

உங்கள் விடையை UP3 A/B/C/D/E _<your name>,<address> என்பவற்றுடன் type செய்து 0772395895 என்ற இலக்கத்துக்கு 19/08/2011 க்கு முதல் அனுப்பி வைக்கவும்.

MCS Supported By UNDP/JRRP 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

**வசதியான வீடு வாடகைக்கு**

யாழ். பொஸ்கோ பாடசாலை அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு. 5 அறைகள், விசாலமான Hall 10 வாகனங்களுக்கான பாதுகாப்பான தரிப்பிடம். அரச/ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

தொடர்பு : 077 2306653.

**2011 தரம் 5 விசேட வினாப்பத்திரம்**

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெற்றித்தேர்வு வளவாளர்களால் வெளியிடப்பட்டு விசேட கருத்தரங்கில் வழங்கப்பட்ட எதிர்பார்க்கை வினாப் பத்திரமும், விசேட கையேடும் பரபரப்பான விற்பனையில்.... கிடைக்கும் இடங்கள்....

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.நகர், துர்க்கா புத்தகசாலை- சுன்னாகம், மொடோன் புத்தகசாலை - நெல்லியடி, கமலா புத்தகசாலை - பருத்தித்துறை, அருள்நாயகி - கொடிகாமம், மோகன்ஸ் - பளை, ஜபிசனா - பரந்தன், அறிவுநதி- கிளிநொச்சி, K.P.K. புத்தகசாலை-வவுனியா, ஜோதி புத்தகசாலை-மன்னார்.

வெற்றித்தேர்வு 19, 20 கேட்டுப்பெறுங்கள்.




**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத்திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள்பதித்தல், தச்சுவேலைகள், Painting, Plumbing, Electrical மற்றும் பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும், நவீன முறைகளிலும், குறைந்த செலவிலும் குறித்தகாலத்தில் செய்து கொடுக்கப்படும் அழையுங்கள் 0776679564 எங்கள் சேவை உங்கள் இல்லம் தேடிவரும்.

மழை காலத்துக்கு முன்னர் உங்கள் வீடுகளைப் புனரமைத்துக் கொள்ளுங்கள்

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361½ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org